பரிசுத்த வேதாகமம்

உனதாக்கி ருசிப்பது எப்படி ?
கற்றுக் கொள்வது எப்படி ?

THE BIBLE

Yours to Enjoy - How to Study ?

By
RICHARD W. DE HAAN

வெளியிடுவோர் :
INDIA BIBLE LITERATURE
P. Box 459, Madras - 600 006.

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

The Bible yours to Enjoy
© 1982 by Radio Bible Class, U. S. A.

How to Study The Bible
© 1971 by Radio Bible Class, U. S. A.

Tamil Translation
© 1984 by India Bible Literature, MADRAS

Copies : 10.000 - May 1984

(RBCL 1)

D. Viji

பரிசுத்த வேதாகமம்

உனதாக்கி ருசிப்பது எப்படி ?
கற்றுக் கொள்வது எப்படி ?

THE BIBLE

Yours to Enjoy - How to Study ?

By

RICHARD W. DE HAAN

வெளியிடுவோர் :

INDIA BIBLE LITERATURE

P. Box 459, Madras - 600 006.

ஒருவேளை நீயும் அப்படிப்பட்டவனுயிருக்கலாம். வேத புத்தகம் வாசிப்பதில் நீ சோர்ந்து போயிருக்கலாம். வேத புத்தகம் வாசிக்க வறண்டதாய்! உனக்குப் புரியாத தாய் இருக்கலாம்; சிலவேளைகளில் நீ வாசித்தும் குழப்ப மடைந்தும் போயிருக்கலாம். இதனுல் நாளடைவில் வேதத்தை அதிகமாக வாசிக்காமலும், சுவைக்காமலும் விட்டுவிட்டிருக்கலாம்!

இதோ, உனக்கு நற்செய்தி. "வேதம் உனதே; வாசித்து சுவைத்து மகிழ்ந்திட வேதம் உனதே" என்று இந்த பாடங்களை உனக்காகவே தயாரித்திருக்கிறேம். இந்த பாடங்களைக் கற்றுக் கொள்வதின் மூலம் வேத வாக்கியங்கள் மிகவும் இனிமையானவைகளாகவும், விளங்கிக் கொள்ள ஏதுகரமானதாகவும், நடைமுறையில் உனக்குப் பிரயோஜனமுள்ளவைகளாகவும் இருக்கும். சரியான முறையில் வேதத்தை அணுகவும் ஏதுவாகும். ஆகவே வேதத்தைக் கற்றுக் கொள்ள தேவையான மூன்று காரியங்களைப் பற்றி நான் இந்த செய்தியில் உன்னேடுகூட பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

1. வேதவசனங்களில் உறுதியான நம்பிக்கை வை.
2. பரிசுத்தாவியானவரின் ஒத்தாசையில் சார்ந்து கொள்.
3. கர்த்தருடைய சித்தத்தை ஏற்றுக்கொள்.

1. வேத வசனங்களில் உறுதியான நம்பிக்கை :-

ஆதியாகமத்திலிருந்து வெளிப்படுத்தலாகமம் வரை தொடர்ந்து செல்லும் அத்தனை வசனங்களும் ஆவியான வரால் ஏவப்பட்டு எழுதப்பட்ட கர்த்தருடைய வார்த்தை என்பதை உறுதியாய் ஏற்றுக்கொள். வேதத்திலுள்ள பல பகுதிகள், இயற்கைக்கு அப்பாற்பட்ட தெய்வீக அற்புதங்களால் நிறைந்தவை. அவையாவும் தேவனு டைய கரத்திலிருந்து வந்தவை என்று நீ உறுதியாய் ஏற்றுக் கொள்ளாவிட்டால், உன் உள்ளத்தில் அநேக சந்தேகங்கள் வந்து விடக்கூடும்.

அநேகர் வேத புத்தகத்தை அதன் இனிமையான இலக்கிய நடைக்காகவும், அதன் ஆழமான போதனைகளுக்காகவும் விரும்புகிறார்கள். அதே நேரத்தில். வேதத்திற் காணப்படும் அற்புதங்களை, அதிசயங்களை விசுவாசிக்கிறதில்லை. இதனால் வேதம் அவர்களுக்கு இடறும் கல்லாகவே இருக்கிறது.

உதாரணமாக, ஆதியாகம் 1:1 ஐ எடுத்துக் கொள்வோம். ''ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்'' என்று எழுதப்பட்டிருக்கிறது. அநேகருக்கு உலகம் உண்டானதைப் பற்றி தங்களுடைய பழைய கருத்தையே பிடித்துக் கொள்கிறார்கள். வேதத்திலுள்ள இந்த வசனத்தை ஏற்றுக் கொள்வதில்லை, கர்த்தருடைய வார்த்தையைக் காட்டிலும், தாங்கள் சிறுவயதிலிருந்தே கற்றுக் கொண்டுவந்த பழங்கால கதைகள், புராண நம்பிக்கைகள் முன்னோர்களின் மூட நம்பிக்கைகளில் அதிகமான நம்பிக்கை வைக்கிறார்கள்.

வேத வாக்கியங்களின் அதிகாரத்தை அங்கீகரிக்க மறுக்கும் அநேகர் வேதத்தை சந்தேகக் கண்களாலேயே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆதாமின் விழுகை, இஸ்ரவேலர் சிவந்த சமுத்திரத்தைக் கடந்த சம்பவம், நோவாவின் நாட்களில் ஏற்பட்ட ஜலப்பிரளயம், வனாந்திரத்தில் பொழியப்பட்ட மன்னா, கிறிஸ்துவின் கன்னிப் பிறப்பு, அவரது அற்புதங்கள், சிலுவையில் அவருடைய பலி, மரித்தோரிலிருந்து அவர் உயிரோடு எழுந்தது எல்லாம் அவர்களுக்கு சந்தேகமாகவே இருக்கிறது.

கர்த்தர் இவைகளைப்பற்றி திட்டமாய் சொல்லுகிறதை ஏற்றுக்கொள்ள மறுத்து, கேள்வி கேட்கும் ஒருவரால் வேதத்தை எப்படி ஆராய்ந்து திறந்த மனதோடு ஏற்றுக் கொள்ள முடியும் ? வேதம் அவர்களுக்கு எப்படி ஆசீர்வாதமான புத்தகமாக அமையமுடியும் ?

அதிகாரமும் வல்லமையும் நிறைந்த வேதவசனங்கள் ஒவ்வொன்றையும் குழந்தையைப்போல ஏற்றுக் கொள்

வோமாக. கண்டு விசுவாசிப்பதை விட காணமல் விசுவாசிப்பது விசேஷம் அல்லவா? சோலைகளின் இனிய தென்றல் காற்று எப்படி களைப்படைந்த சரீரத்தை மகிழ்விக்குமோ, நீரூற்றின் குளிர்ந்த தண்ணீர் எப்படி தாகமுள்ளவனை பரவசப்படுத்துமோ, அப்படியே வேதவசனங்கள் நம்மை திருப்தியாக்கும்.

தேவபிள்ளையே, வேதம் வாசிப்பது உனக்கு கடினமாய் இருக்கிறதோ? பிரயோசனமற்றதைப் போல இருக்கிறதோ? குழப்பமாய் இருக்கிறதோ? அப்படியிருக்குமானல் அதன் காரணம் என்ன தெரியுமா? நீ வேதத்தின் மேல் முழு நம்பிக்கையோடு அணுகாததுதான்! வேதம் பரிசுத்த ஆவியானவரால் அருளப்பட்டது என்று உறுதியாய் எண்ணாததுதான்!

இப்பொழுது, "ஆண்டவரே உமதுவார்த்தைகளை நான் விசுவாசிக்கிறேன்" என்று ஜெபி. உனது விசுவாசத்தை கர்த்தர் பெலப்படுத்தும்படி மன்றாடு. அதன் பிறகு திறந்த உள்ளத்தோடு வேதத்தை வாசிக்க ஆரம்பி. உன் எண்ணங்களுக்கு வேதம் மாறுபட்டிருப்பினும் வேதத்தை அப்படியே விசுவாசி. வேதம் என்ன சொல்கிறதோ அதன்படி செய்ய தீர்மானஞ்செய்; எந்த சந்தேகமும் கொள்ளாமல் அப்படியே ஒவ்வொருவார்த்தைகளையும் விசுவாசி. அப்படிச் செய்வாயானல் வேதம் உன் மன மகிழ்ச்சியாய் இருக்கும். நல்ல முறையில் வேதத்தை ஆராய, நீ உன் உள்ளத்தை ஆயப்படுத்திக் கொண்டாய் என்று அர்த்தம்!

2. பரிசுத்த ஆவியானவரை முற்றிலும் சார்ந்து கொள்:-

வேதத்தை வியாக்கியானப்படுத்தினல்தான் வேதத்தைக் கற்றுக்கொள்ள முடியும் என்ற எண்ணத்தை விட்டு விடுவோமாக! அநேகர் மூல பாஷைக்குத் திரும்பி, மூல பாஷையின் வடிவங்களில் வாசித்தால்தான் வேதம் புரியும் என்று நினைக்கிறார்கள். இல்லை!

வேத புத்தகத்தை அறிந்து கொள்ள வேண்டுமானல் பரிசுத்தாவியானவரின் ஒத்தாசை மிக மிக அவசியம். பரி

சுத்தாவியானவரின் உதவியோடு, ஒரு சாதாரண விசுவாசியும் கூட வேதத்தின் மகத்துவங்களை அறிந்து கொள்ளலாம்! இயேசு சொன்னார்: "என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்" (யோவான் 14 : 26)

அப்போஸ்தலனாகிய பவுல் சொல்கிறார். "நாங்களோ, உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்குத் தேவனிடத்திலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம். அவைகளை நாங்கள் மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை, ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம்." (I கொரி 2 : 12, 13).

விசுவாசிகளுக்கு அப்போஸ்தலர் யோவான் எழுதுகிறார்: "நீங்கள் பரிசுத்தராலே அபிஷேகம் பெற்றுச் சகலத்தையும் அறிந்திருக்கிறீர்கள். நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது. ஒருவரும் உங்களுக்குப் போதிக்க வேண்டியதில்லை. அந்த அபிஷேகம் சகலத்தையும் குறித்து உங்களுக்குப் போதிக்கிறது. அது சத்தியமாயிருக்கிறது. பொய்யல்ல, அது எங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக" (I யோ 2 : 20, 27)

வேத வசனங்களின் மேல் உறுதியான விசுவாசம் மட்டுமல்லாமல், பரிசுத்தாவியானவரின் ஒத்தாசையும் கொண்டுதான் வேதத்தைக் கற்றுக் கொள்ள ஆரம்பிக்க வேண்டும். "ஆவியானவரே உம் உதவி தேவை" என்று ஜெபியுங்கள். ஏனெனில் வேதத்தை எழுதியவர் அவர்தான். அவரே நமக்கு அதை விளங்கச் செய்கிறவர். அவர் உன் மனதை பிரகாசிப்பிப்பார். பரிசுத்தாவியானவரின் ஒத்தாசைக்காக, கிருபைக்காக நீ எதிர்பார்த்து

ஜெபிக்கும்போது, நிச்சயமாகவே வேத புத்தகம் உனக்கு தெளிவாகவும், பிரயோஜனமுள்ளதாகவும் அமையும்.

3. கர்த்தருடைய சித்தத்தை ஏற்றுக்கொள் :

வேத புத்தகத்தை தேவன் நம் கையில் தந்திருப்பது ஏதோ நமது ஆர்வத்தை திருப்தி செய்யவோ, அல்லது பல சரித்திரங்களை நம் உள்ளத்தில் திணிக்கவோ அல்ல. சிலர் வேதத்தைத் தான் கற்றுக் கொள்வது மற்றவர்களுக்குப் பிரசங்கிக்கத்தான் என்று எண்ணுகிறார்கள்.

நீ ஒருவேளை தீர்க்கதரிசனங்களுக்கு அருமையான விளக்கங்கள் தரலாம்; வேதத்தை அறியாத மக்கள் மத்தியிலே நீ பெரிய சொற்பொழிவுகளைச் செய்யலாம்; ஆனால் வேதவசனம் உன் வாழ்க்கையில் நிலைகொண்டிராவிட்டால் உனக்குப் பிரயோஜனம் என்ன ?

நீ வேதவசனங்களைக் குறித்து மேன்மைபாராட்டுவதற்கு முன்பு, நீ வேத வசனங்களுக்குக் கீழ்ப்படிந்திருக்கிறாயா என்று ஆராய்ந்துபார்! அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார், "நீங்கள் என்னிடத்தில் கற்றும் அடைந்தும், கேட்டும் கண்டும் இருக்கிறவைகளெவைகளோ, அவைகளையே செய்யுங்கள்; அப்பொழுது சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார்." (பிலி 4 : 9).

வேத வசனங்களின் சத்தியங்கள் நமது வாழ்க்கையின் ஒரு பகுதியாகவே மாறிவிடும்போது நிச்சயமாகவே அவை நம்மை மறுரூபமாக்கும்! நீ வேத புத்தகத்தை சுவைத்து மகிழ்ந்திட வேண்டுமென்றால், நீ தேவனுடைய சித்தத்தை உன் வாழ்க்கையில் ஏற்றுக் கொள்ள வேண்டியது அவசியமாயிருக்கிறது.

வேத வசனங்களின் மூலம் நீ மிகவும் அதிகமாய் பிரயோஜனம் அடைய வேண்டுமானால், மற்றவர்கள் தரும் உதவியையும் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்ள வேண்டும், உண்மையுள்ள மனுஷரின்போதனையில் பவுல் அப்போஸ்தலனுக்கு மிகவும் நம்பிக்கை இருந்தது.

ஆகையால்தான் தன் ஆவிக்குரிய மகனுகிய தீமோத்தெயுவுக்கு எழுதும்போது, "ஆதலால் என் குமாரனே, நீ கிறிஸ்து இயேசுவிலுள்ள கிருபையில் பலப்படு. அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி.'' (2 தீமோ 2 : 1, 2).

எந்த மனுஷனின் உதவியும் எனக்குத் தேவையில்லை என்று ஒருபோதும் நீ சொல்லாதே. வேதத்தில் அப்பல்லோவைப் பற்றி வாசிக்கிறோம் அவர் ஒரு நல்ல திறமையான பிரசங்கி. பழைய ஏற்பாட்டை நல்ல முறையில் கற்றுத்தேர்ந்த வேத நிபுணன். அவரைப் பற்றி அப்போஸ்தலர் நடபடிகளில் வாசிக்கிறோம், "அப்பொழுது அலெக்சந்திரியா பட்டணத்தில் பிறந்தவனும், சாதுரியவானும், வேதாகமங்களில் வல்லவனுமான அப்பல்லோ என்னும் பேர் கொண்ட ஒரு யூதன் எபேசு பட்டணத்திற்கு வந்தான். அவன் கர்த்தருடைய மார்க்கத்திலே உபதேசிக்கப்பட்டு, யோவான் கொடுத்த ஸ்நானத்தை மாத்திரம் அறிந்தவனுயிருந்து, ஆவியில் அனலுள்ளவனுய்க் கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாய்ப் போதகம் பண்ணிக் கொண்டுவந்தான்.'' (அப். 18 : 24, 25).

ஆக்கிலா, பிரிஸ்கில்லா என்பவர்கள் அவன் பேசுவதை எல்லாம் கேட்டார்கள். வேதம் சொல்கிறது, அவர்கள் அவனைச் சேர்த்துக் கொண்டு, "தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள்'' (அப். 18 : 26).

வேதத்தை போதிக்க தேவதாசர்களும் நமக்குத் தேவையாயிருக்கிறது என்று நான் வற்புறுத்திச் சொல்லுவதைக் கேட்க உங்களுக்கு ஆச்சரியமாயிருக்கலாம் பரிசுத்தாவியானவர் மட்டும் போதாதா? என்று நீங்கள் கேட்கலாம். அப்போஸ்தலனுகிய யோவான் சொல்லும் வார்த்தைகளைப் பார்த்தால், வேதத்தை விளக்கிக்காட்ட

பரிசுத்தாவியானவர் மட்டும் போதாதா என்று எண்ணத் தோன்றும் I யோவான் 2 : 27ல் "ஒருவரும் உங்களுக்குப் போதிக்கவேண்டியதில்லை" என்று எழுதியிருக்கிறாரே என்றும் நீங்கள் கேட்கலாம்.

அப்படி அல்ல என்று நான் எண்ணுகிறேன். யோவான் இந்த நிருபத்தை எழுதும்போது, விசுவாசிகளுக்கு, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றவர்களுக்கு ஆவியானவரால் கற்றுத் தேர்ந்தவர்களுக்கு எழுதுகிறார். ஆனபடியினால் அந்த விசுவாசிகளைக் கண்காணித்துப் போதிக்க மனுஷ போதகர்கள் தேவையில்லாதிருந்தது. அந்த நாட்களிலிருந்த அவ்விசுவாசிகளின் தவறான உபதேசங்களுக்கும், கிறிஸ்துவின் உபதேசங்களை மறுதலிக்கும் அந்திக் கிறிஸ்துவின் உபதேசங்களுக்கும் அவர்கள் பாதுகாக்கப்பட்ட வலிமையுள்ளவர்களாயிருந்தார்கள்.

ஆதிக் கிறிஸ்தவர்களுடைய உள்ளத்தில், பரிசுத்தாவியானவரின் ஊழியத்தின் மூலம், இயேசுக் கிறிஸ்துவைப் பற்றிய சத்தியங்கள் பலமாக உறுதிசெய்யப்பட்டிருந்தன. எந்த மனுஷனும் உங்களுக்குப் போதிக்க வேண்டியதில்லை என்று யோவான் சொல்லுமளவுக்கு அவ்வளவு அதிகமாக அவர்கள் ஏற்கனவே போதிக்கப்பட்டிருந்தார்கள். இந்த வசனத்தை வைத்துக் கொண்டு வேத வசனத்தைப் போதிக்க தேவ தாசர்களே வேண்டியதில்லை என்று நாம் எண்ணிவிடக் கூடாது.

அருமையான தேவபிள்ளையே, கற்றுத்தேர்ந்த கர்த்தருடைய தாசர்களின் வார்த்தைகளுக்குச் செவிசாய் பவுல் அப்போஸ்தலன் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது, "விசேஷமாகத் திருவசனத்திலும் பிரயாசப்படுகிறவர்களை இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரவான்களாக எண்ணவேண்டும்" என்று ஆலோசனை கூறுகிறார் (1 தீமோ 5 : 17).

ஓய்வு நாள் பள்ளி ஆசிரியர்களுக்காக நன்றியுள்ளவர்களாயிருப்போமாக. ஆலயங்களிலே வல்லமையோடு

கர்த்தருடைய வசனத்தைப் பிரசங்கிக்கிற கர்த்தருடைய தாசர்களுக்காக கர்த்தரை ஸ்தோத்தரிப்போமாக! வேத அகராதிகள்; ஒத்துவாக்கிய புத்தகங்கள், வேத விளக்க உரைகள் இவைகளையெல்லாம் பயன்படுத்தக் கற்றுக் கொள்ளுங்கள். வேதத்தை நல்லமுறையில் கற்றுக் கொள்ள இவைகள் எல்லாம் மிகவும் பிரயோஜனமுள்ள தாயிருக்கும்.

தொகுப்பு :-

அருமை நண்பனே, வேத வாக்கியங்களைக் கற்றுக் கொள்வது நிச்சயமாகவே உனக்கு மகிழ்ச்சியானதாக இருக்கும், அதற்கு மூன்று நிபந்தனைகள் உண்டு, முதலா வதாக, வேத வசனங்களின்மேல் உனக்கு உறுதியான நம்பிக்கையிருக்க வேண்டும். இன்னும் சொல்லப் போனால், வேதத்தை வாசிக்கும்போது, அந்த வார்த்தை கள் எல்லாம் கர்த்தருடையதென்று விசுவாசத்தோடு வாசிக்கவேண்டும்.

இரண்டாவதாக நீ பரிசுத்தாவியானவரில் சார்ந்து கொண்டு, 'ஆவியானவரே எனக்குப் போதியும்' என்று மன்ருடவேண்டும்.

மூன்ருவதாக தேவனுடைய சித்தத்தை அவர் வார்த் தையின் மூலம் நீ ஏற்றுக் கொள்ள வேண்டும். தேவனு டைய வசனம் சொல்லுகிற ஒவ்வொரு கட்டளைகளையும் உன் வாழ்க்கையிலே ஏற்றுக் கொண்டு, செயல்பட திறந்த உள்ளமுடையவனுக இருக்க வேண்டும்.

இப்பொழுதே வேதத்தை வாசிக்க தீர்மானஞ் செய். அதை அப்படியே விசுவாசிக்க ஜெபம் செய். அதை விளங்கிக் கொள்ள ஆவியானவரின் ஒத்தாசையைக் கேள். அதற்குக் கீழ்ப்படிய ஒத்துக்கொள்.

தனிமையாகவும் வேதத்தை நீ கற்றுக் கொள்ளலாம். அல்லது உன் ஆலயத்திலுள்ள குழுவினரோடு சேர்ந்தும் நீ கற்றுக் கொள்ளலாம். எப்படியாலுைம் சரி, இந்த அத்தியாயத்தில் சொல்லப் பட்டவைகளின்படி நீ செய்ய கவனமுள்ளவனுயிரு. அப்படிச் செய்வாயானுல், வேத

வசனத்தை மிகுந்த ஆதாயத்தோடும், மகிழ்ச்சியோடும் நீ கற்றுக்கொள்வாய்!

அனுபந்தம் :-

கற்றுக் கொள்க! வளர்க!!

கீழ்க்கண்ட இந்த பகுதி நீங்கள் இந்த பாடத்தின் மூலம் கற்றுக் கொண்டவைகளை நினைப்பூட்டி, ஆவியில் வளர உதவி செய்யும். இதில் கேட்கப்பட்ட கேள்விகளின் விடையை புத்தகத்தின் கடைசியில் காணலாம்.

1) நீ எவ்விதமாய் வேதத்தைப் படிக்கிறாய்? சரியான உத்தரவிற்கு நேராய் "✓" குறியிடவும்.

(a) .... நான் தினம் தோறும் வேத புத்தகத்தை படிக்கிறேன்; மகிழ்ச்சியடைகிறேன்.

(b) .... நான் ஓயாமல் படிக்கிறதில்லை; ஆனால் படிக்கும்போது பயன் பெறுகிறேன்.

(c) .... நான் அதிகமாய் படிக்கக்கூடும்; ஆனால் படிக்க நான் தகுதியில்லாதவன் என்று எண்ணுகிறேன்.

(d) .... நான் வேதத்தை வாசிப்பதே இல்லை.

சிந்தனைக்கு ஒரு கேள்வி :-- வேத புத்தகம் உண்மையானதும், கர்த்தருடைய வார்த்தையானதும், பழுதில்லாததுமானது என்று நீ ஏற்றுக் கொள்கிறாயா? அதன் வல்லமையையும், அதிகாரத்தையும் உன் வாழ்க்கையில் செயல்படுத்துகிறாயா?

2) பரிசுத்த ஆவியானவர் நம்மை போதித்து வழிநடத்துகிறவர் என்பதற்கு வேத வசனங்களிலிருந்து மூன்று ஆதாரங்களைக் கொடு.

(a)............................(b)............................(c)............................

3) கீழ்க்கண்ட கருத்துக்கள் சரியானவையா? அல்லது தவறானவையா?

(a) நீ வேதத்தைக் கற்றுக் கொள்ளும்போது, பரிசுத்த ஆவியானவர் உன் உள்ளத்தைப் பிரகாசிக்கச் செய்கிறார்.

(b) பரிசுத்த ஆவியானவரே வேத புத்தகத்தை எழுதினவர்; அவரே விளங்கச் செய்கிறவர்.

(c) மிகக் கல்வி கற்ற மக்களே வேதத்தை அறிந்து கொள்ள முடியும்.

(d) பாவங்களைக் கண்டித்து உணர்த்துவதே பரிசுத்தாவியானவரின் வேலையே தவிர, போதிப்பது அல்ல.

(e) நாம் வேதத்தை திறந்து படிக்கும்போது, ஆவியானவரிடம் நமக்கு உதவி செய்யும்படி கேட்க வேண்டும்.

4) வேதத்தை அதிக திட்டமாய் அறிந்து கொள்ள அவசியமாயிருந்தவரும், வல்லமையான பிரசங்கியாயிருந்து, பழைய ஏற்பாட்டை கற்றுத்தேறினவரான வேத பண்டிதர் பெயர் என்ன? (அப். 18 : 24-26 வரை வாசித்து விடையளிக்கவும்).

சவாலான ஒரு கேள்வி :- உன்னுடைய ஆலயத்திலுள்ள, போதகர்கள், வேதபாட ஆசிரியர்களிடம் கற்றுக் கொள்ள நீ சம்மதமாயிருக்கிருயா?

அத்தியாயம் 2

வேதத்தைக் கற்றுக் கொள்ள நான்கு வழிமுறைகள்!

ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் வேத புத்தகம் இனிமையானதும் பயனுள்ளதுமாய் இருக்க வேண்டும். அது வழிகாட்டுகிறது; உற்சாகப் படுத்துகிறது! ஆறுதல் படுத்துகிறது!

வாழ்க்கையில் எழும் பல்வேறு கேள்விகளுக்கு பதில் அளிக்கும் ஒரே புத்தகம் வேதப் புத்தகம்தான்! கர்த்தர் யார்? அவர் எப்படிப் பட்டவர்? அவர் நம்மிடம் எதிர்பார்ப்பதென்ன? அவர் நமக்காக செய்து கொண்டிருப்பவை என்னென்ன? நாம் என் இங்கிருக்கிறேம்? பாவத்திலிருந்து நாம் மீட்கப்பட என்னென்ன செய்ய வேண்டும் என்ற எல்லாக் கேள்விகளுக்கும் வேத புத்தகமே விடையளிக்கிறது!

மட்டுமல்ல; எதிர்காலத்தைப் பற்றிய வெளிச்சம் தருவதும் வேதமே! விசுவாசிகள் தங்கள் நித்தியத்தை எங்கு செலவழிப்பார்கள்? நித்திய வாசஸ்தலங்கள் எவை? என்பதையெல்லாம் நமக்கு வேதம் விளக்கிக் காண்பிக்கிறது. வேத புத்தகம் விவரிப்பது போல உலகிலுள்ள வேறு எந்த புத்தகமும் வாழ்க்கை-மரணம் என்பதைப் பற்றி விவரிப்பது இல்லை! அப்படியிருந்தும் அநேக விசுவாசிகள் வேத புத்தகத்தை பிரயோஜனப்படுத்திக் கொள்ளாததும். சுவைத்து மகிழாததும் எத்தனை வேதனைக்குரிய காரியம்! ஆகவேதான் நான் இந்தப் பாடத் திட்டத்தை எழுத முற்பட்டேன்.

நான் எழுதிய முதல் அத்தியாயத்தில், வேதம் அநேகருக்கு ஆசீர்வாதமுள்ளதாய் இல்லாததற்கு ஒரு காரணம் அவர்கள் வேத புத்தகத்தை சரியான முறையில் அணுகாததுதான் என்று குறிப்பிட்டிருந்தேன். தேவ பிள்ளையே, வேதத்தை வாசிக்கும்போது ஒரு திடமான தீர்மானத்தோடு - இது கர்த்தருடைய வார்த்தைதான்- முழு 66 புத்தகங்களும் - ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தல் வரை எனக்கு என் தேவன் அருளிய வல்லமையான பொக்கிஷம் என்ற உணர்வோடு வாசிப்பாயாக!

உன் முழு இருதயத்தோடும் ஆவியானவரில் சார்ந்து, அவரே உன்னைப் போதித்து வழி நடத்தும்படி ஜெபி. கர்த்தருடைய வசனத்திற்கு முற்றிலும் கீழ்ப்படிவேன் என்று தீர்மானஞ் செய். மட்டுமல்ல, வேதத்தை உனக்கு விவரித்துக் காட்டுபவர்களின் ஒத்தாசைகளையும் பெற்றுக் கொள். சுருக்கமாகச் சொன்னால் வேதத்தை நீ படிக்கும் போது விசுவாசி! கற்றுக்கொள்! கீழ்ப்படி!

இந்த இரண்டாம் அத்தியாயத்தில் நீ பின்பற்ற வேண்டிய சில வழிமுறைகளை உனக்கு விளக்கிக் காண்பிக்கிறேன். வேதத்தை சுவைத்து மகிழ்ந்திட நான்கு அடிப்படை வழிமுறைகள் உண்டு.

1. அர்த்தத்தோடு வாசி!
2. இருக்கிறதை இருக்கிறபடியே விளங்கிக்கொள்!

3. சரித்திர பூர்வமாக சிந்தித்துப்பார்!
4. சரியாக வேறுபடுத்திக் கொள்!

நீ வேதத்தைக் கற்றுக் கொள்ளும்போது நான் கொடுத்துள்ள வழிமுறைகள் உனக்குப் பெரிதும் பிரயோஜனமாயிருக்கும் என்று விசுவாசிக்கிறேன், ஜெபிக்கிறேன். வேதம் அர்த்தப்புஷ்டியுள்ள, திறந்த புத்தகமாக உனக்கு விளங்குவதாக! வேதத்தை சுவைத்து மகிழ்ந்திட இதோ முதல் வழிமுறை :

1. அர்த்தத்தோடு வாசி !

வேத புத்தகத்தை சரியான இடத்திலிருந்து வாசிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். வேதத்திலுள்ள சில பகுதிகள், மற்ற பகுதிகளைக் காட்டிலும் விளங்கிக் கொள்வதற்குக் கடினமுள்ளவைகளாகக் காணப்படக்கூடும். உதாரணமாக லேவியராகமத்திலுள்ள “பல்வேறு பலிகள்” வாசிப்பதற்கு அவ்வளவு எளிதானது அல்ல. வேதத்தை வாசிக்க ஆரம்பிக்கிறவர்கள், லேவியராகமத்தில் இருந்து வாசிக்க ஆரம்பித்தால் ஒன்றும் புரிந்து கொள்ள முடியாது!

என் சொந்தக் கருத்து என்னவென்றால், வேதத்தை வாசிக்க ஆரம்பிக்கிறவர்கள், ஆதியாகமத்தில் இருந்தாவது, அல்லது மாற்கு எழுதிய சுவிசேஷத்தில் இருந்தாவது, அல்லது நிருபங்களின் ஆரம்பத்திலிருந்தாவது தொடங்கலாம். தியான வாசிப்பிற்காக சங்கீதத்தையும் நீதிமொழிகளையும் எடுத்துக் கொள்ளலாம்.

நிருபங்களிலிருந்து வாசிக்க ஆரம்பிக்கலாம் என்று நான் சொல்வதைப்பற்றி ஒருவேளை நீங்கள் ஆச்சரியப் படலாம். ஆனால் இன்றைய நவீன உலகத்திற்கு, நடைமுறையில் செயல்படுத்த வேண்டிய சத்தியங்கள் ஆலோசனைகள் நிருபத்திலேயே தெளிவாக அடங்கியிருக்கின்றன. பெந்தேகோஸ்தே அனுபவங்களுக்குப் பின்னால் உருவான சபைகளுக்கும், தனிப்பட்ட விசுவாசிகளுக்குமாக எழுதுப்பட்டவைகளே நிருபங்கள், அதாவது கிருஸ்துவின் சரீரமான சபை ஏற்பட்ட பின்பு எழுதப்

பட்டவை, பவுல் அப்போஸ்தலனைக் கர்த்தர் சில ஆண்டுகள் அரேபிய வனாந்திரத்திற்கு அனுப்பி, அங்கே சபைக்கடுத்த உபதேசங்களைக் கற்றுக் கொடுத்தார் என்பதை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்!

சுவிசேஷங்களிலுள்ள போதனைகள் பெந்தேகோஸ்தின் அனுபவத்திற்கு முன்பு கொடுக்கப்பட்டவை. அவை மோசேயின் நியாயப்பிரமாண காலத்தில் வாழ்ந்த மக்களின் நடைமுறைக்கேற்ப அருளப்பட்டவை. ஆயினும் அந்த போதனைகளின் ஆலோசனைகள் குறைக்கப்படவோ, நீக்கப்பட வேண்டியவையோ அல்ல; அந்த காலத்து மக்கள், பின்பு வெளிப்படுத்தப் படப்போகிற சத்தியங்களுக்கு ஆயத்தமாயிருக்கவில்லை.

எனவே வேதத்தை ஆரம்பிக்க மிகச்சிறந்த இடம் நிருபங்கள்; அதிலும் குறிப்பாக ரோமருக்கு எழுதின நிருபம். இரட்சிப்பை எப்படிப் பெற்றுகொள்வது என்பதைப் பற்றி மிக அருமையாக இந்த நிருபம் நமக்கு மிக அழகாக விளக்கிக் காண்பிக்கிறது, மட்டுமல்ல, ரோமருக்கு எழுதின நிருபம் அடிப்படையானது; எல்லோராலும் எளிதாய்ப் புரிந்துகொள்ளக் கூடியது.

நிருபங்களுக்கு அடுத்தபடியாக சுவிசேஷங்களை வாசிக்க ஆரம்பியுங்கள், குறிப்பாக மாற்கு எழுதிய சுவிசேஷத்திலிருந்து ஆரம்பியுங்கள் என்று நான் ஆலோசனை கூறுகிறேன். ஏனென்றால் மாற்கு சுவிசேஷத்தில் மட்டும் இயேசுக்கிறிஸ்துவின் பிறப்பு, வாழ்க்கைச் சுருக்கம், மரணம், உயிர்த்தெழுதல் போன்றவை எளிதான முறையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்ற சுவிசேஷங்களிலும் இவை கொடுக்கப்பட்டிருந்தாலும்கூட இவைகளில் சில உபதேசத்திற்கு அடுத்த கேள்விகள் எழக்கூடும். ஆனால் மற்ற சுவிசேஷங்களோடு ஒப்பிடும் போது "மாற்கு" எளிதாக புரிந்து கொள்ளக் கூடியது!

அப்படியே மாற்கு எழுதிய சுவிசேஷத்தை வாசிக்கும் போதுகூட, இயேசு சொன்ன எல்லா வார்த்தைகளையும்

உன் விருப்பப்படி வியாக்கியானஞ் செய்துவிடாதே! உதாரணமாக அவர் "தேவனுடைய ராஜ்யம்" என்பதைப் பேசுகிறுர் என்ருல், அது என்னவென்று உடனே குழம்பிக் கொண்டிருக்காதே! அவைகள் அறிந்து கொள்ள வேண்டியவைதான்; முக்கியமானவைதான். ஆனுல் நிருபங்களில் எழுதப்பட்டிருக்கும் உபதேசத்திற் கடுத்தக் காரியங்களில் நன்ருக ஒரு தெளிவு இருந்தால் மட்டுமே "தேவனுடைய ராஜ்யம்" என்ற பதத்தின் முழு அர்த்தத்தையும் நாம் தெரிந்து கொள்ள முடியும்.

மூன்ருவதாக, ஆதியாகமத்திலிருந்து ஆரம்பியுங்கள். எல்லாவற்றிற்கும் ஆரம்பம், சிருஷ்டிப்பு எல்லாம் அங்கு தான் இருக்கிறது. மிகவும் எளிதாக வாசித்து புரிந்து கொள்ள முடியும். அடிப்படையான வேத சத்தியங்களை நடைமுறைக்கான பாடத்திட்டங்களை எந்த ஒரு வேதாகம மாணவனும் எளிதாக அறிந்து கொள்ளலாம்.

நினைவில் நிறுத்து! அர்த்தத்தை உணர்ந்து வாசிக்க வேண்டும்! வேத புத்தகம் பாலைப் போன்றது. எளிதான பகுதிகளிலிருந்து ஆரம்பம் பண்ணு. அவற்றைக் கற்றுத் தேர்ந்த பின்பு, கடினமான போஜனத்திற்குச் செல்லலாம்.

வேதத்தைச் சுவைத்து மகிழ்ந்திட இதோ இரண்டாவது வழிமுறை :

2. இருக்கிறதை இருக்கிறபடியே விளங்கிக் கொள் :

வேத வசனம் என்ன சொல்கிறதோ, எழுத்தின்படி அதை அப்படியே எடுத்துக்கொள். வேத வசனங்கள் எல்லாம் ஆம் என்றும் ஆமென் என்றும் இருக்கிறது. சிலர் சாதாரணமான எளிமையான வசனங்களுக்குக்கூட ஏதோ ஆழமான அர்த்தம் இருக்கிறது என்று நினைத்துக் கொண்டு இல்லாத வியாக்கியானங்கள் செய்து குழம்பிப் போகிறுர்கள்.

சாதாரணமாய் வாசிக்கும் போது அது விளங்கிக் கொள்கிறதானுல் அதை அப்படியே எடுத்துக்கொள். வியாக்கியானங்கள் கொடுத்து அர்த்தமற்றதாக்கி

விடாதே. உதாரணமாக ஆதியாகமம் 1:9; 10 வசனங்களை எடுத்துக் கொள்வோம் "பின்பு தேவன், வானத்தின் கீழே இருக்கிற ஜலம் ஓரிடத்தில் சேரவும் வெட்டாந் தரைக் காணப்படவும் கடவது என்றார்; அது அப்படியே ஆயிற்று. தேவன் வெட்டாந்தரைக்குப் பூமி என்றும், சேர்ந்த ஜலத்திற்குச் சமுத்திரம் என்றும் பேரிட்டார்; அது நல்லது என்று கண்டார்" (ஆதி 1 : 9, 10).

இந்த வசனங்களின் அர்த்தம் என்ன? அதிலேயே எழுதியிருக்கிற அர்த்தம் தான். தேவன் ஜலத்தை ஓரிடத்தில் காணப்படும்படி செய்தார். மற்ற இடம் வெட்டாந்தரையானது. (நாமெல்லாருக்கும் தெரியும், கிருஷ்டிப்பின் மூன்றும் நாளிலே இது நடந்தது).

வியாக்கியானம் செய்யும் ஒரு எழுத்தாளருக்கு இது திருப்தியளிக்கவில்லை. அதில் என்ன எழுதியிருந்ததோ அதை அப்படியே ஏற்றுக் கொள்ள அவருக்குப் பிரியமில்லை. அதை குழப்பமானதாய், கடினமுள்ளதாய் மாற்ற விரும்பினார். எனவே அவர் சொன்னார்; இந்த வசனம் மனிதன் தன் சிந்தையில் காணப்படும் பல்வேறு முன்னேற்றங்களைப் பற்றி கடவுள் செயலாற்றுகிறார் என்று எழுதினார். வரண்ட நிலத்திலிருந்து பல்வேறு எண்ணத் துளிகளை எழும்பச் செய்தார் என்றும் ஜலத்தை ஒன்று சேர்த்தல் என்பது, பல்வேறு எண்ணங்களை ஒன்று கூட்டுதல் என்றும் அவர் எழுதிவைத்தார்.

இன்னும் ஒரு எழுத்தாளர், எப்பொழுதும் மூல பாஷைக்குச் சென்றுவிடுவார். இந்த பகுதி மூலபாஷையில் எத்தனை எழுத்து, இந்த வார்த்தைகளின் எண்ணிக்கையால் அதைப் பெருக்கி, பிறகு வரும் எண்களுக்கு பெரிய விரிவுரை வியாக்கியானம் செய்துவிட்டார்!

இப்படி வியாக்கியானங்களையும், உள்ளான அர்த்தங்களையும் கொண்டு வருகிறவர்கள் மிகப்பெரிய கல்விமான்களாக இருக்கக் கூடும். இதனாலேயே பல பிரச்சனைகள் எழுகின்றன. பெரிய புத்திசாலிகளே வேதத்திற்கப்பாலிருந்து பல புதிய சிந்தனைகளை

உருவாக்குகின்றனர் என்ற எண்ணம் நம் உள்ளத்தில் உருவாகிவிட்டது. ஆனபடியினல் கர்த்தர் என்ன சொல்கிருரோ அதை நாம் அறிந்து கொள்ளாமல், மனித கற்பனைகளினுல் திசைதிரும்ப வேண்டியதாயிருக்கிறது.

ஆகவே நான் மீண்டும் சொல்கிறேன். எழுத்தின்படியான அர்த்தம் எளிதும், புரிந்து கொள்ளுகிறதுமாய் இருந்தால் அதை அப்படியே ஏற்றுக் கொள்ளுங்கள் ; குழப்பம் செய்ய வேண்டாம்.

வேதத்தைக் கற்றுக் கொள்ள இதோ மூன்ரும் வழிமுறை :

5. சரித்திர பூர்வமாக சிந்தியுங்கள் :

நாம் வேதத்தை வாசிக்கும்போது, அது வாழ்க்கையின் பல்வேறு சந்தர்ப்பங்களில் நிஜமான மனுஷர்களோடு தேவன் பேசிய வார்த்தைகள் என்பதை நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டும். ஆகவே அந்தக் காலங்களைப் பற்றி, சூழ்நிலைகளைப் பற்றி, பல்வேறு சம்பவங்களைப் பற்றி எவ்வளவு காரியங்களை நாம் தெரிந்து வைத்திருக்கிரேமோ அவ்வளவு நல்லது.

பழைய சம்பவங்களைப் பற்றி நாம் படிக்கும் போது, அந்த சம்பவங்களைச் சூழ்ந்திருக்கும் சரித்திரத்தைப் பற்றி அறியும் நமக்கு மிக அவசியமாய் இருக்கிறது. உதாரணமாக ஆபிரகாம் லிங்கனினுடைய "கெற்றீஸ்பெர்க் சொற்பொழிவுகளைப்" பற்றி முழுவதுமாய் நாம் ருசித்து அறிந்து கொள்ளவேண்டுமானல், அந்த சொற்பொழிவுகளின் காரணமாயிருந்த சரித்திர சம்பவங்களின் பின்னணியைப் பற்றியும் நாம் அறிந்திருத்தல் மிக மிக அவசியம். அந்த சொற்பொழிவுகள், உடைந்த இருதயமுள்ள சில மக்களுக்காகக் கொடுக்கப்பட்டது. அதில் அநேகர், தங்களுக்கு அருமையானவர்களை உள்நாட்டு யுத்தத்திலே இழந்திருந்தார்கள். அவர்கள் இன்னும் இந்த யுத்தம் எத்தனை காலத்துக்கு நீடிக்கும் என்றும், இன்னும்

எத்தனை உயிர்களை பறித்துக் கொள்ளும் என்றும் அறியாதிருந்தார்கள்.

இதே போல்தான் வேதத்தைக் கற்றுக் கொள்ள சரித்திர பின்னணியைப் பற்றிய அறிவு மிகவும் அவசியமாய் இருக்கிறது. கானானிய ஜாதிகள் இஸ்ரவேலுக்கும், முழு மனுக்குலத்திற்கும் எவ்வளவாக ஆபத்தானவர்களாய் இருந்தார்கள் என்பதை அறிந்தால்தான், கர்த்தர் ஏன் அவர்களை பூண்டோடு ஒழிக்க உத்தரவிட்டார் என்பதினை அறிந்துகொள்ள இயலும். எனவே சரித்திர பூர்வமான சிந்தனையும், அறிவும் மிகமிக அவசியம். உதாரணமாக, அடிப்படை சரித்திரத்தை நாம் அறிந்தால்தான், தானியேலும், அவனது மூன்று நண்பர்களும் ஏன் சிறையிருப்பில் இருந்தார்கள் என்பதை அறிந்துகொள்ள முடியும். அப்படியே, சுவிசேஷங்களிலும், அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்திலும் காணப்பட்ட அற்புதங்கள் ஏன் தொடர்ந்து நடைபெறவில்லை என்பதும் விளங்கும்.

எனவே தேவபிள்ளையே, நீ வேதத்தை வாசிக்கும்போது, அந்தந்த சம்பவங்கள் என்ன சரித்திரத்தின் அடிப்படையில் சம்பவித்தன என்று சிந்தித்துக்கொள். சில காரியங்களை ஆதிகாலங்களில் ஏன் கர்த்தர் அனுமதித்திருந்தார் இப்பொழுது அதை ஏன் அனுமதிக்கவில்லை என்பதையும் அறிந்து கொள்ளலாம்.

வேத சரித்திரத்தை அறியாததால்தான் அநேகருக்கு வேதம் புரியாததும், அறிந்து கொள்ள முடியாததுமாய் இருக்கிறது. எனவே பழைய புதிய ஏற்பாட்டின் சரித்திரத்தின் அடிப்படையை கொஞ்சமாவது கற்றுத்தெரிந்துகொள். வேதகாம நாட்களில் வாழ்ந்த மக்களின் பழக்க வழக்கங்கள், நாகரீகங்கள் இவற்றையும் தெரிந்து கொள்வது மிகவும் நல்லது. ஆதி நாட்களில் தீர்க்கதரிசிகள் என்னன்ன சூழ்நிலைகளில் எப்படி ஊழியஞ் செய்தார்கள் என்பதை உன் உள்ளத்தில் நிழலாட்டமாய்

ஓவியமாய் நிலை நிறுத்து. நான் மீண்டும் சொல்கிறேன் சரித்திரபூர்வமாக சிந்தனை செய்.

வேதத்தைச் சுவைத்து மகிழ்ந்திட இதோ, நான்கா வது வழிமுறை :

4. சரியாக வேறுபடுத்திக் கொள் :

இஸ்ரவேலருக்கும் தேவனுடைய சபைக்கும் உள்ள வேறுபாடு என்ன என்பதை நான் திட்டமாய் அறிந்து வைத்திருக்கிறேன். இது மிகவும் முக்கியமானது. இந்த இரண்டிற்குமுள்ள வேறுபாட்டினை அறிய நீ தவறுவா யானால் உண்மையாகவே வேதத்தின் பல பகுதிகளை உன்னால் அறிந்து கொள்ளவே முடியாது.

வேதத்தை வாசிக்கும் ஒவ்வொருவரும் வேதம் முக்கியமாக இரண்டு கூட்டத்தாரைப் பற்றி பேசுகிறதை உணர்ந்து கொள்ளலாம் ஒன்று இஸ்ரவேல் தேசம். இரண்டாவது கர்த்தருடைய சரீரமான சபை. இஸ்ரவேல் தேசத்தைக் குறித்து பழைய ஏற்பாட்டில் முக்கியத்துவம் கொடுத்து எழுதியிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் முதல் புத்தகமாகிய ஆதியாகமத்திலிருந்து பழைய ஏற்பாட்டின் மொத்த புத்தகங்களாகிய 39 புத்தகங்களி லும் கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்களாகிய யூதரைப் பற்றியே எழுதியிருக்கிறதே.

ஆனால் நாம் அப்போஸ்தலர் நடபடிகளுக்கு வரும் போது, அதைத் தொடர்ந்த மற்றய புத்தகங்களை வாசிக்கும்போது, அங்கே மையக் கருத்து கர்த்தருடைய சபை என்பதை அறிந்து கொள்ளலாம். அப்படியிருந்தும் அநேகருக்கு இஸ்ரவேல் தேசத்திற்கும், கர்த்தருடைய சபைக்கும் உள்ள வேறுபாடு புரிகிறதில்லை!

நீங்கள் அதைப் புரிந்து உணர்ந்து கொள்ளும்படி யாக, கர்த்தருடைய தெரிந்துகொள்ளப்பட்ட தேசத்திற் கும், தெரிந்து கொள்ளப்பட்ட சபைக்குமுள்ள முக்கிய மான மூன்று வேறுபாடுகளை நான் எழுதுகிறேன்

1. அங்கத்தினராகும் தகுதி, 2. அவர்களுடைய அழைப்பு, 3. அவர்களுடைய இலக்கு, என்பன. இவைகளைக் குறித்து சற்றே நாம் சிந்திப்போமாக!

இஸ்ரவேல் ஒரு தேசம். ஒருவன் இஸ்ரவேலனாயிருக்க வேண்டுமானால் அவன் பாலஸ்தீனத்தில் இஸ்ரவேலர் குடும்பத்திலே பிறந்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் அவன் இஸ்ரவேலின் பிரஜையாவான். ஆனால் கர்த்தருடைய சபையில் அப்படியன்று. இங்கே கர்த்தர் ஒவ்வொரு ஜாதிகளிலிருந்தும் ஜனங்களிலிருந்தும், தேசங்களிலிருந்தும் இரட்சிக்கப்பட்டவர்களைக் கூட்டிச் சேர்த்துக் கொண்டு வருகிறார்.

இரண்டாவதான வித்தியாசம் அவர்கள் அழைப்பில் இருக்கிறது. கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களைத் தனது சொந்த ஜனங்களாகத் தெரிந்து கொண்டார். அவர்கள் மூலமாகவே கர்த்தர் தம்மை வெளிப்படுத்திக் கொண்டு வந்தார். அவர்களே கர்த்தரிடத்திலிருந்து தனிப்பட்ட, மதச்சார்பான, அரசாங்க விதிமுறைகளை, நியாயப்பிரமாணத்தைப் பெற்றுக் கொண்டனர். அவைகள் உலகப் பிரகாரமான ராஜாங்கத்திற்கு சட்டதிட்டங்களாயிருந்தன. இஸ்ரவேலர் மட்டும் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்திருந்தால், முழு உலகத்திற்கும் இந்த சட்டதிட்டங்கள் பரவி, நீதியையும், செழுமையையும், சமாதானத்தையும் கொண்டு வந்திருக்கும். மட்டுமல்ல மேசியா வெளிப்படுவதற்காக கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தைத் தெரிந்து கொண்டிருந்தார்.

ஆனால் மேசியா வந்தபோதோ, இஸ்ரவேலர் அவரைப் புறக்கணித்தனர். அதன் விளைவாக கர்த்தர் இஸ்ரவேலரை தற்காலிகமாக தேவ திட்டத்திலிருந்து ஒதுக்கி வைக்க வேண்டியதிருந்தது. அவர்கள் தங்கள் மேசியாவை ஏற்றுக் கொள்ளாத காலத்தில்தான் கர்த்தர் தன் சபையைக் கட்டி எழுப்பச் சித்தங்கொண்டார். அந்த ஒரு தேசம் மட்டும் என்றில்லாமல், முழு உலகத்தி

லுள்ள அத்தனை தேசங்களிலிருந்தும் "தமது நாமத்திற்காக ஒரு ஜனத்தைத் தெரிந்து கொள்ளும்படி" கர்த்தர் தீர்மானித்தார் (அப் 15 : 14). தேவ சபையின் வேலை என்ன? சாட்சியாய் நிற்கவேண்டும், சுவிசேஷம் அறிவிக்கவேண்டும், சீஷர்களாக்க வேண்டும், என்பதே யாகும்!

தேவனுடைய சபையில் யூதனென்றுமில்லை; புறஜாதி என்றுமில்லை. கறுப்பர் என்றுமில்லை; வெள்ளையர் என்றுமில்லை. ஏழை என்றுமில்லை; ஐசுவரியவான் என்றுமில்லை. கர்த்தர் தமது சபையில் தன் தீர்மானத்தை நிறைவேற்றிய பின்பு, அவர் மீண்டுமாக தன் கவனத்தை இஸ்ரவேலர் பக்கமாக திருப்புவார். இஸ்ரவேலின் வருங்கால மகிமையைக் குறித்த ஆசீர்வாதமான தீர்க்கத் தரிசனங்களைக் கர்த்தர் நிறைவேற்றியே தீருவார்.

இஸ்ரவேலுக்கும், கர்த்தருடைய சபைக்குமுள்ள மூன்றாவது வேறுபாடு அதன் இலக்கு. கர்த்தருடைய சபையின் இலக்கு, "நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியமாகிய கிறிஸ்துவின் மகிமையின் பிரசன்னமாகிய" இரண்டாம் வருகையே! (தீத்து 2 : 13). கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்து ஆகாயத்தில் வரும்போது கர்த்தருடைய சபையானது உன்னதங்களுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

ஆனால் இஸ்ரவேல் தேசமோ, பின்தங்கி, மகா உபத்திரவ காலத்திற்குள் கடந்து செல்லும், பின்பு கர்த்தர் அதை மீண்டும் நிலை நிறுத்தி, முழு கிருபையோடும், ஒத்தாசையோடும் ஆயிர அரசாட்சிக்குள் பிரவேசிக்கச் செய்வார்.

எனவே தேவபிள்ளையே நீ வேதத்தைக் கற்றுக் கொள்ளும்போது இஸ்ரவேல் தேசத்திற்கும், கர்த்தருடைய வேதத்திற்குள்ள வேறுபாடுகளை நினைவு படுத்திக் கொள். நீ அதை அறிந்து கொள்வாயானால் அது அநேகம் கடினமான பகுதிகளைத் திறந்து கொடுக்கும்

திறவுகோலாயிருக்கும் என்பதை மறந்துபோகாதே! அப்பொழுதுதான் முழுவேதத்தையும் புரிந்து கொள்ளமுடியும். எனவே இஸ்ரவேலருக்குக் கொடுத்த வாக்குத்தத் தங்களை சபைக்கு உரிமை பாராட்டாதே. அப்படியே சபைக்குக் கொடுத்த சத்தியங்களை இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஒத்துப்பார்க்காதே!

தொகுப்பு :

நீ வேதத்தை ருசித்து மகிழவேண்டுமானுல் கீழ்க் கண்ட நான்கு விதிமுறைகளையும் கடைப்பிடிக்க வேண்டும்.

1. அர்த்தத்தை உணர்ந்து வாசி :- உன்னுல் உடனே புரிந்து கொள்ளக் கூடிய வேத பகுதிகளிலிருந்து வாசிக்கத் தொடங்கு. உதாரணமாக, ரோமர், மாற்கு, ஆதியாகமம் ஆரம்பிப்பதற்கு அருமையான இடங்கள்.

2. இருக்கிறதை இருக்கிறபடியே விளங்கிக்கொள்:- வேதம் என்ன சொல்கிறதோ அதை வார்த்தையின்படியே அப்படியே ஏற்றுக்கொள்.

3. சரித்திர பூர்வமாக சந்தித்துப்பார்:- முழு வேதாகமத்தின் சரித்திர பின்னனி என்ன என்பதைப்பற்றிய பொதுவான அறிவு உனக்கு அவசியம். ஒவ்வொரு பகுதியும் என்ன சூழ்நிலையில் எழுதப்பட்டது என்பதை ஆராய்ந்துபார்.

4. சரியாக வேறுபடுத்திக்கொள்:- இஸ்ரவேலருக்கும், கர்த்தருடைய சபைக்குமுள்ள வேறு பாடுகளை உணர்ந்து அறிந்துகொள்.

இப்படி வேதத்தைக் கற்றுக் கொள்வது மிகவும் பயனுள்ளதாகவும் இனிமையானதாகவும் இருக்கும்!

கற்றுக் கொள்க! வளர்க!!

(விடைகள் கடைசி பக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன)

1. புதிதாக வேதத்தைக் கற்றுக்கொள்ள விரும்புகிற வர்கள், ஆரம்பிக்கவேண்டிய மூன்று வேத பகுதிகள் எவை? ஏன் அவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து பரிந்து பேசப்பட்டிருக்கின்றன?

(a)
(b)
(c)

2. வேதத்தை எழுத்தின்படியாக அப்படியே எடுத்துக் கொள்ளக் கூடாது என்பதற்காகக் கொடுக்கப்பட்ட மூன்று காரணங்கள் எவை?

(a)
(b)
(c)

3. கோடிட்ட பகுதியை பூர்த்தி செய்:- "எழுத்தின் படியான அர்த்தம் எளிதும், புரிந்து கொள்ளக் கூடியது மாய் இருந்தால்..".

4. சரித்திர பூர்வமாக சிந்தித்துப்பார் என்ற தலைப்பில் கொடுக்கப்பட்ட கருத்துக்களில், கீழ்க்கண்ட எந்த வாக் கியம் சரியாக பொருந்தும் என்பதைக் குறிப்பிடு.

(a) வேத பகுதி எந்த சரித்திர சூழ்நிலையில் எழுதப் பட்டது என்பதை அறிந்திருந்தால், வேதத்தை மிகவும் சரியாக அறிந்துகொள்ளமுடியும்,

(b) வேதத்தில் எல்லா பகுதிகளும் கடந்த கால சம்பவங்களுக்கே பொருந்தும்.

(c) வேதத்தைக் கற்றுக் கொள்ள சரித்திர அறிவு தேவையில்லை.

5. இஸ்ரவேல் தேசத்திற்கும், கர்த்தருடைய சபைக் கும் உள்ள மூன்று முக்கிய வேறுபாடுகளை எழுது.

(a)
(b)
(c)

அத்தியாயம் 3

குறியீடுகள், ஒப்புமாதிரிகள், தீர்க்கதரிசனங்கள்

அநேக ஜனங்கள் பிரசங்கிமார்களது பிரசங்கங்களை ஆவலோடு கேட்பார்கள்; வேத பண்டிதர்களின் சொற்பொழிவுகளை கவனிப்பார்கள்; ஆனால் தாங்களோ வேத புத்தகத்தை ஒருபோதும் திறந்து வாசிக்கமாட்டார்கள். வேதம் தங்களுக்குச் சொல்லும் செய்தி என்ன என்றும் அவர்களுக்குத் தெரியாது! அவர்கள் அவர்களுக்குள்ளாகவே வேதம் ஒரு கடினமான புத்தகமென்றும், புரியாத புதிர் என்றும் எண்ணிக் கொள்கிறார்கள். ஏன் அப்படி நினைக்கிறீர்கள் என்று கேட்டால் அதற்கும் சரியான பதில் சொல்வதில்லை. வேதத்தைப் பற்றிய இந்த சிந்தனை தவறானது. வேத புத்தகம் ஒருபோதும் கடினமானதல்ல; அதன் செய்திகள் தெளிவானவை.

வேத பாடங்களில் சற்றே சிக்கலான மூன்று பகுதிகளைப்பற்றி இந்த அத்தியாயத்தில் நான் எழுதப் போகிறேன். அந்தச் சிக்கலில் கைதேர்ந்தவர்களாகி விடவேண்டும் என்பதற்காக அல்ல; சாதாரண விசுவாசியும் சற்று கவனத்தோடு, புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக எழுதுகிறேன். நீங்களே வேதத்தை வாசித்து, புரிந்து கொண்டு மகிழவேண்டும் என்பதே என்னுடைய நோக்கம்.

கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் கண்டுபிடிப்போமா ?

1. வேதத்திலுள்ள குறியீடுகளை (Symbols) அறிந்து கொள்ளுவதெப்படி ?

2 வேதத்திலுள்ள ஒப்பு மாதிரிகளை (Types) கண்டு கொள்வதெப்படி?

3. வேதத்திலுள்ள தீர்க்கதரிசனங்களுக்கு வியாக்கியானஞ் செய்வதெப்படி?

இந்த பாடத்திட்டங்கள் மூலம் வேதத்தை நீங்கள் வாசித்து மகிழ வழிவகுக்க வேண்டும் என்ற ஜெபத்தோடு எழுதுகிறேன். முதற்கேள்வி.

1. வேதத்திலுள்ள குறியீடுகளை (Symbols) அறிந்து கொள்ளுவதெப்படி ?

குறியீடுகள் என்ற பதத்திற்கு, "ஒரு கொள்கையை, அல்லது உண்மையை விளக்குவதற்கு காண்பிக்கும் அடையாளம்" என்று அர்த்தம் கொள்ளலாம். உதாரண மாக, கிறிஸ்தவ மார்க்கத்திற்கு சிலுவை ஒரு குறியீடு அல்லது அடையாளம். சமாதானத்திற்கு புரு ஒரு அடையாளம்.

இரண்டாம் உலகமகா யுத்தத்தின் போது அநேக வீடுகளில் பொன்னிறமான நட்சத்திரத்தை தங்கள் ஜன்னல்களில் கட்டி வைத்தார்கள், அந்த நட்சத்திர அடையாளத்தைப் பார்க்கிறவர்கள் எல்லோரும், அந்த வீட்டில் ஒருவர் தங்கள் தேசத்திற்காக வீரமாய் யுத்தத் தில் மரித்திருக்கிருர்கள் என்பதை அறிந்து கொள்ளுவார் கள், சமீப காலத்தில் அமெரிக்க நாட்டின் வெள்ளை மாளிகையின் ஜன்னலில் ஒரு மெழுகுவர்த்தி எரிந்து கொண்டே இருந்தது. அதன் அடையாளம் என்ன தெரியுமா? "போலந்து தேசத்தில் சுதந்திரத்தை இழந்து அடக்கு முறையால் தவிக்கும் மக்களை நாங்கள் மறந்து விடவில்லை; அவர்களின் துயரங்களில் பங்கேற்கிருேம்" என்பதை அந்த மெழுகு வர்த்திகள் அமைதியாய் அறிவித்துக் கொண்டே இருந்தன.

வேத புத்தகமும் சிலவேளைகளில் இவ்விதமான குறியீட்டு மொழிகளில் பேசுகிறது. உதாரணமாக எசேக்கியேல் முதலாம் அதிகாரம், பத்தாம் அதிகாரங் களில் சேருபீன்களின் பல முகங்களைக் குறித்து வாசிக் கிருேம். மனித முகம், சிங்க முகம், எருது முகம், கழுகு முகம் இந்த பரலோக ஜீவன்களுக்கு நான்கு செட்டை

கள் இருந்தன. மனித கைகள் இருந்தன. முழங்காலில் மடங்காத கால்கள் இருந்தன.

இப்படிப்பட்ட ஜீவன்களை பரலோகத்தில் நாம் காண்போம் என்று நினைக்கிறீர்களா? நான் அப்படி நினைக்கவில்லை. இங்கே தீர்க்கதரிசி ஒரு அடையாளமான குறியீட்டு மொழியை உபயோகிக்கிறார். எனவே சேராபீன்களுக்கு எழுத்தின்படியான அர்த்தத்தை அப்படியே எடுத்துக் கொள்ளாமல், அதில் மறைந்திருக்கும் கருத்தை வியாக்கியானம் பண்ணுவது அவசியமாய் இருக்கிறது.

ஒருவர் இவ்விதமாய் கருத்து தெரிவித்தார். மனித முகம் அறிவையும், சிங்க முகம் பெலனையும், காளை முகம் பொறுமையான ஊழியந்தையும், கழுகு முகம் வருங் காலத்தை அறிந்து கொள்ளும் தூர திருஷ்டியையும் வெளிப்படுத்துகிறது என்று சொன்னார்.

இப்படிக் கருத்துக்கள் மேல் இயற்கையாகவே கேள்வி கேட்கும்படி நமக்கு தோன்றும். எப்படி வேதத்தில் வரும் குறியீடுகளின் அர்த்தத்தை அறிந்து கொள்வது? வேதத்திலுள்ள எழுத்துக்கள் எழுத்தின்படியானதா, அல்லது குறியீட்டு அடையாளமானதா என்பதை எப்படி நிர்ணயிப்பது? சரி, இதோ நான் சுருக்கமாய் பதிலளிக்கிறேன்.

வேதத்தின் ஒரு பகுதி எழுத்தின்படி ஆனதா அல்லது குறியீட்டு உள் அர்த்தம் கொண்டதா என்பதை அறிய உன்னைத்தானே நீ கேள்வி கேட்டுக்கொள். "இந்தப் பகுதியின் அர்த்தம் எனக்கு விளங்குகிறதா? வார்த்தையின்படி அப்படியே எடுத்துக் கொண்டால் முழுப்பகுதியும் புரிகிறதா? ஆம் என்ற மறுமொழி கிடைக்குமென்றால் எழுத்தின்படியான அர்த்தத்தை அப்படியே எடுத்துக் கொள். இல்லை என்றால் அந்த குறியீட்டு உவமைக்கு பொருள் என்ன என்பதைக் கண்டுபிடியுங்கள்.

உதாரணமாக மத்தேயு 23:14ல் இயேசுக் கிறிஸ்து சொன்னவார்த்தைகளை எடுத்துக் கொள்ளுங்கள் "மாயக்

காரராகிய வேத பரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, பார்வைக்காக நீண்ட ஜெபம் பண்ணி, விதவைகளின் வீடுகளைப் பட்சித்துப் போடுகிறீர்கள்; இதினிமித்தம் அதிக ஆக்கினையை அடைவீர்கள்".

"விதவைகளின் வீடுகளை பட்சித்து போடுகிறீர்கள்". என்று இயேசு பரிசேயர் மீது குற்றம்சாட்டினர். அதன் அர்த்தம் விதவைகளின் வீடுகளுக்கு போய் கதவு, ஜன்னல், சுவர் எல்லாவற்றையும் இடித்து சாப்பிட்டு விடுகிறீர்கள் என்பதா? இல்லை, இயேசு சொல்ல வந்த செய்தி இதுதான் விதவைகளின் வீடுகளை அபகரித்துக் கொண்ட குற்றத்தை மறைக்க பரிசேயர்கள் நீண்ட ஜெபத்தைச் செய்கிருர்கள் என்பதுதான்.

மறந்து போகவேண்டாம். எழுத்தின்படியான வார்த்தைகள் சரியான அர்த்தத்தைக் கொண்டு வராவிட்டால், அந்த வார்த்தைகளுக்குள் மறைந்திருக்கும் உண்மையான செய்தியைக் கண்டு பிடியுங்கள். சற்றே உங்கள் அறிவை பயன்படுத்துவீர்கள் என்ருல், எந்த குழப்பமும் இன்றி அர்த்தத்தை புரிந்து கொள்வீர்கள்.

எழுத்தின்படியுள்ளது அப்படியே விளங்குமென்ருல் மிகவும் நல்லது; அதை அப்படியே ஏற்றுக்கொண்டு முன்னேறுங்கள். வீணுக உள் அர்த்தங்களை உருவகித்துக் கொள்ளாதீர்கள்;

சரி; இரண்டாம் கேள்விக்குத் திரும்புவோம் :-

2. வேதத்திலுள்ள ஒப்பு மாதிரிகளை (Types) கண்டு கொள்வதெப்படி?

இந்தக் கேள்விக்கு நீங்கள் விடை கண்டு கொள்வீர்களானுல் வேதம் உங்களுக்கு மிகவும் மன மகிழ்ச்சியாக இருக்கும்! நமது ஆன்மீக பிரயோனத்திற்காக, வேத புத்தகத்தில் எண்ணற்ற ஒப்பு, மாதிரிகள் அமைந்திருக்கின்றன. இவைகளை அறிந்து கொள்ளுவது வேதத்தைக் கற்றுக்கொள்ள விரும்பும் ஒவ்வொருவருக்கும் பயன் உள்ளதாய் இருக்கும்.

முதற் கேள்வியின் பதத்தை எப்படி விளக்கினேனோ அதுபோலவே ஒப்புமாதிரி (Type) என்ற வார்த்தையின் அர்த்தத்தையும் விளக்குகிறேன். பழைய ஏற்பாட்டில் காணப்படும் ஒரு பொருளோ, சம்பவமோ அல்லது நபரோ புதிய ஏற்பாட்டில் வரும் சத்தியத்திற்கு நிழலாட்டமாய் இருந்தால் அதை ஒப்புமாதிரி என்று அழைக்கிறோம்.

இதோ, ஒரு உதாரணம், பழைய ஏற்பாட்டில் வனாந்திரத்தில் நடந்து வந்த இஸ்ரவேலரை விஷ சர்ப்பவர்கள் கடித்தபோது கர்த்தர் உயர்த்தப்பட்ட வெண்கல சர்ப்பத்தை நோக்கிப் பார்க்கும்படி ஆலோசனை சொன்னார். அப்படியே நோக்கிப் பார்த்தவர்கள் பிழைத்துக் கொண்டார்கள்; சுகமானார்கள். இந்த சம்பவம் முழுவதுமே ஒரு ஒப்புமாதிரி (Type). இது உண்மையாய் நடந்த சரித்திர பூர்வான சம்பவம். ஆனால் இது புதிய ஏற்பாட்டில் வரும் ஒரு சத்தியத்திற்கு நிழலாட்டமாய் இருக்கிறது. யோவான் எழுதுகிறார், " சர்ப்பமானது மோசேயினால் வனாந்திரத்திலே உயர்த்தப்பட்டதைப் போல, மனுஷ குமாரனும், தன்னை விசுவாசிக்கிறவன் அவனோ, அவன் கெட்டும் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, உயர்த்தப்பட வேண்டும் தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார் (யோவான் 3:14-16)

முதலில் அந்த ஒப்பு மாதிரியை பார்க்கும் போது ஒன்றும் புரியாமல் வேடிக்கையாய்த் தோன்றலாம். எப்படி வெண்கல சர்ப்பமானது, இயேசுக் கிறிஸ்துவுக்கும், அவர் சிலுவையிலே செய்து முடித்த மீட்பின் கிரியைக்கும் நிழலாட்டமாய் இருக்கிறது என்று தெரியாமல் தவிக்கலாம்; ஆனால் அவையெல்லாம் அர்த்த புஷ்டியானவை. அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார். "ஆனபடியினாலே தேவனானவர் எங்களைக் கொண்டு புத்தி சொல்கிறதைப்

போல, நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருந்து, தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று கிறிஸ்து வினிமித்தம் உங்களை வேண்டிக் கொள்கிறோம். நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காக பாவமாக்கினார்". (II கொரி (5 : 20, 21)

பாம்பை பாவத்தோடு சம்பந்தபடுத்திப் பார்க்கிறோம். அப்படியே வெண்கலம் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பைக் குறிக்கிறது. ஆகவே வெண்கல சர்ப்பமானது பாவ மறியாத இயேசுக் கிறிஸ்து நமக்காக பாவமானதை தெளிவாக படம் பிடித்துக் காண்பிக்கிறது. ஆம், நமது அக்கிரமத்தில் உண்டான தேவகோபத்திற்கு அவர் கிரயஞ் செலுத்தினார். விசுவாசத்தோடு அவரை நோக்கிப் பார்க்கும்போது கர்த்தர் நம்மை இரட்சித்துக் கொள்கிறார். ஆகவே அந்த பழைய ஏற்பாட்டுச் சம்பவமானது இயேசு கிறிஸ்துவின் மீட்பின் கிரியைக்கு நிழலாட்டமாய் இருக்கிறது.

அப்படியே யோனா மீன் வயிற்றுக்குள் இருந்த அனுபவமும் கூட ஒரு ஒப்புமாதிரியாகும். இயேசுக் கிறிஸ்து சொன்னார் : "யோனா இரவும் பகலும் மூன்று நாள் ஒரு பெரிய மீனின் வயிற்றில் இருந்தது போல மனுஷ குமாரனும் இரவும், பகலும் மூன்று நாள் பூமியின் இருதயத்தில்இருப்பார்" (மத் 12 : 40)

எபிரேயர் 9 ஆம் அதிகாரம் ஆசரிப்புக் கூடாரத்தைப் பற்றியும், அதின் பணிமுட்டுகள், பலிகள் முதலிய வற்றையும் பற்றி விளங்க வைக்கிறது. இவை எல்லாம் ஒப்பு மாதிரிகளே ! பலியாகும் மிருக ஜீவன்கள் இயேசுக் கிறிஸ்து நமக்காக பலியாவதைக் குறித்துக் கொண்டிருக் கின்றன. ஆசரிப்புக் கூடாரத்திலுள்ள பணிமுட்டுகளும், சம்பந்தப்பட்ட பல வேலைகளும் இயேசு கிறிஸ்துவின் மீட்பின் கிரியைகளைச் சுட்டிக் காண்பித்துக் கொண்டிருக் கின்றன. பரிசுத்த ஸ்தலத்தையும் மகா பரிசுத்த ஸ்தலத்

தையும் பிரித்துக் கொண்டிருக்கும் திரைச்சீலையானது இயேசுக் கிறிஸ்துவின் மாமிச சரீரத்திற்கு நிழலாட்டமானது! இயேசுக் கிறிஸ்து சிலுவையில் மரணமடைந்த அதே நேரத்தில், தேவாலயத்திலிருந்த திரைச்சீலை மேல் இருந்து கீழாக இரண்டாக கிழிந்தது (மத். 27:51) இரட்சகரின் மரணத்தின் மூலம், புதிதும் ஜீவனுமாகிய மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினுர் (எபி 10 : 19,20)

இவைகளெல்லாம் வேஷத்தில் காணப்படும் எண்ணற்ற அருமையான ஒப்புமாதிரிகளில் ஒரு சிலவைகள். இவைகளைக் கண்டுபிடிப்பது மிகவும் பயனுள்ள ஆவிக்குரிய அப்பியாசமாகும். ஆனுல் ஒரு சிறிய எச்சரிப்பின் வார்த்தையையும் கொடுக்கிறேன். ஒப்புமாதிரிகளைத் தேடும்போது சரித்திரப் பூர்வமான உண்மைகளைக் குறைத்து மதிப்பிட்டு விடாதீர்கள். பழைய ஏற்பாட்டு சம்பவங்களின் வெளிப்படையான உண்மைகளை தவற விட்டுவிடாதீர்கள்.

மட்டுமல்ல, வெறும் ஒப்புமாதிரிகளின் மேலேயே வேத உபதேசங்களைக் கட்டு எழுப்பிவிடாதீர்கள், ஒப்புவமைகளை மற்ற வேத வாக்கியங்கள் அங்கீகரிக்கிறதா, அவைகளோடு ஒத்துப் போகிறதா என்பதையும் கவனியுங்கள். நீங்கள் புதிதாக இந்த ஒப்பு மாதிரிகளை **(Types)** கற்றுக்கொள்கிறவர்களாய் இருந்தால், முதலில் புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டிருக்கும் பழைய ஏற்பாட்டுச் சம்பவங்களையே முதலில் ஆராய்ந்து கற்றுக்கொள்ளுங்கள். இரண்டாவதாக நிருபங்களில் எழுதப்பட்டிருக்கும் வேத சத்தியங்கள் முழுவதையும் கற்றுத் தேறுங்கள், பின்பு பழைய ஏற்பாட்டில் காணப்படும் மற்ற ஒப்புவமைகளைத் தேடிக் கண்டுபிடியுங்கள். இந்த விதி முறைகளை நீங்கள் கடைப்பிடிப்பீர்களானுல் ஒருபோதும் தவறிப் போய்விட மாட்டீர்கள். இந்த இந்த ஒப்புமாதிரிகளை சரியாக அடையாளம் கண்டு கொள்வீர்கள். ஆவிக்குரிய வாழ்க்கையும் பிரகாசமாய் இருக்கும். இதோ

மூன்றாவது கேள்வி :-

3. வேதத்திலுள்ள தீர்க்கதரிசனங்களுக்கு வியாக்கியானஞ் செய்வதெப்படி ?

சில தீர்க்கதரிசனங்கள் வாசிப்பதற்கு மிகவும் எளிதாய் இருக்கும் உடனே புரிந்து கொள்ளலாம். ஆனால் மற்றவை அப்படியிருப்பதில்லை. ஆகவே கீழே கொடுக்கப் பட்டிருக்கும் ஐந்து விதிமுறைகளையும் உங்கள் கவனத்தில் வைத்துக் கொண்டு தீர்க்கதரிசன பகுதிகளைக் கற்றுக் கொள்ளுங்கள்.

1. முடிந்தவரைக்கு மற்றெல்லா வேதவாக்கியத்தைப் போலவே தீர்க்கதரிசனங்களின் வார்த்தைகளுக்கும் எழுத்தின்படியான அர்த்தத்தை எடுத்துக் கொள்ளுங்கள். சிலவேளைகளில் அவைகள் புரியாததாய், மற்ற வேத வசனங்களுக்கு வேறுபட்டதாய் காணப்படலாம்.

2. வேதத்தில் கர்த்தருடைய வெளிப்பாடுகள் முன் னேறிச் செல்பவை. பின்னால் வரும் வேத வசனங்கள், விவரித்து காண்பிக்கிறவைகளாய், புரிய வைக்கிறவை களாய், முன்னால் எழுதப்பட்டவைகளுக்கு விளக்கு உரைகளாய் இருக்கும்.

3. தீர்க்கத்தரிசனங்கள் தீர்க்கதரிசியின் காலத்திலே நிறைவேறுகிறவைகளாக இருக்கலாம் ; சில நேரங்களில் பிற்காலத்தில் நிறைவேறப் போகும் சம்பவங்களாகவும் இருக்கலாம். இவற்றிற்கான வேறுபாட்டை கண்டுபிடி. தானியேல் தீர்க்கத் தரிசனத்தில் சொல்லப்பட்ட "சிறிய கொழும்பு" க்கு குறுகிய காலத்தில் நிறைவேறும் சம்பவமும் உண்டு. நீண்ட காலத்திற்கு பின் நிறை வேறப்போகும் சம்பவமும் உண்டு. இப்படிப்பட்ட தீர்க்கத்தரிசனங்களை இரட்டிப்பாக நிறைவேறும் விதி முறை என்று அழைப்பார்கள்.

4. வேத வசனங்களை மற்ற வேதவசனங்களோடு ஒப்பிட்டுப்பார். ஒரு பகுதி தனிமையாய் விடப்படுகிறதை போல இருந்தால், ஒருவேளை நீ அதை தவறாகப் புரிந்து

கொள்ள ஏதுவாகும். எனவே அதை பரந்தவிரிவான கண்ணோட்டத்தில் பார்த்து விளங்கிக்கொள்.

5. ஒப்பு மாதிரிகளையும், உவமைகளையும் குறித்து மிகுந்த கவனமுள்ளவனாய் இரு. அவைகளை வியாக்கியானம் செய்யும்போது நூதனமாய் சென்றுவிடாதே!.

நான் மூன்றாவது குறிப்பில் கொடுத்துள்ள "இரட்டிப்பாக நிறைவேறும் விதிமுறையை" சற்று விளக்கி காண்பிக்க விரும்புகிறேன். இந்த விதிமுறையின்படி ஒரு தீர்க்க தரிசனம் இரண்டு வருங்கால சம்பவங்களை ஒரே தரிசனத்தின் மூலம் முன்னறிவிக்கிறதாய் இருக்கும். ஒன்று உடனே குறுகிய காலத்தில் நிறைவேறப்போகும் நிகழ்ச்சி; மற்றது நீண்ட காலத்திற்குப் பின் நடந்தேறப்போகும் சம்பவம். அவைகளை நாம் தனித்தனியாக அறிந்து கொள்ளவேண்டும்.

உதாரணமாக ஏசாயா தீர்க்கதரிசன புத்தகத்தில்,

"ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார்; இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இம்மானுவேல் என்று பெயரிடுவாள். தீமையை வெறுத்து நன்மையைத் தெரிந்து கொள்ள அறியும் வயது மட்டும் அவர் வெண்ணெயையும் தேனையும் சாப்பிடுவார். அந்தப் பிள்ளை தீமையை வெறுக்கவும் நன்மையைத் தெரிந்து கொள்ளவும் அறிகிறதற்கு முன்னே, நீ அருவருக்கிற தேசம் அதின் இரண்டு ராஜாக்களால் விட்டு விடப்படும்." (ஏசாயா 7 : 14-16)

இந்த வார்த்தைகளில் 14 ஆம் வசனம் இயேசுக் கிறிஸ்துவின் கன்னிப்பிறப்பைக் காண்பித்துக்கொண்டே இருக்கிறது. ஆனால் 15 ஆம் 16 ஆம் வசனங்கள் கிறிஸ்துவை சுட்டிக் காண்பிக்கிறவைகளாகத் தெரியவில்லை. அதற்குப் பதிலாக ஏசாயாவிற்குப் பிறக்கப் போகும் மகனைக்குறித்துப் பேசுகிறது. அதனை அடுத்த அதிகாரத்தில் நாம் அறிந்து கொள்கிறோம். அந்தபாலகன்

நன்மை, தீமை அறிந்து கொள்ளுவதற்கு முன்பாகவே விரோதிகள் யூதா தேசத்திற்குள் வந்து சகல உணவுப் பொருட்களையும் கொண்டு சென்று விட்டனர். இதனால் அந்த தேசத்தில் வாசமாயிருந்தவர்கள் ஆட்டுப்பாலில் இருந்து கடைந்த வெண்ணெயினாலும், காட்டுத்தேனின் மூலமாகவே உயிர் வாழ வேண்டியதிருந்தது.

அந்தக் குழந்தைக்கு மூன்று வயது முடிவதற்கு முன்பதாகவே இஸ்ரவேலின் ராஜாவாகிய பேகாவும், அசீரியரின் ராஜாவாகிய ரெத்சீனும் வெட்டப்பட்டு மரித்தார்கள். ஆகவே ஏசாயா 7 : 14 - 16 வரையுள்ள ஒரே தீர்க்கதரிசனத்தின் மூலம் பல நூறு ஆண்டுகள் இடைவெளியுள்ள இரண்டு சம்பவங்கள் நிறைவேறின.

ஏசாயாவுக்குப் பிறந்த மகனும், அவனைக்குறித்த தீர்க்கத்தரிசனத்தின் நிறைவேறுதலும் நிச்சயமாக கன்னி வயிற்றில் தோன்றிய இம்மானுவேலுக்கு நிழலாட்டமாய் இருந்தது; அப்படியே நிறைவேறித் தீர்ந்தது.

ஆகவே ஏசாயா 7 ஆம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்ட இந்த தீர்க்கத்தரிசனம் இரட்டிப்பாக நிறைவேறும் விதிமுறைக்கு ஒரு நல்ல உதாரணமாகும். வேதத்தில் உள்ள சில தீர்க்கத்தரிசனங்கள் எப்படி இரண்டு காலங்களில் பலநூறு ஆண்டுகள் இடைவெளிக்குப்பின் நிறைவேற முடியும் என்பதை ஒரே சம்பவத்தில் படம் பிடித்து காண்பிக்கின்றன.

இந்த அத்தியாயத்தில் மூன்று கேள்விகளுக்கு விடையளித்ததின் மூலம், வேதம் உங்களுக்கு எவ்விதமாக மனமகிழ்ச்சியாய் இருக்கமுடியும் என்று விவரித்தோம். அப்படியானால் வேதத்தோடு முன்னேறிச் சொல்லுங்கள். கர்த்தருடைய வார்த்தை உங்களுக்கு மிகவும் அவசியமானது. உங்களால் நிச்சயமாக அதை புரிந்து கொள்ள முடியும். உங்களால் அதை சுவைத்து மகிழமுடியும்.

இதுவரை நீங்கள் இயேசுக்கிறிஸ்துவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளாமல் இருந்தால்

நீங்கள் ஆவிக்குரிய குருடராய் இருக்கிறீர்கள் என்றுதான் அர்த்தம். நீங்கள் ஒருவேளை மத சம்பந்தமான காரியங்களை பேசலாம்; ஆனால் உங்கள் கண்கள் திறக்கப்படும் வரையிலும் வேத புத்தகத்திலுள்ள ஆழ்ந்த சத்தியங்களை அறிந்து கொள்ளவே முடியாது.

எனவே, இப்பொழுதே உங்களுக்கு இரட்சிப்புத் தேவை என்பதை உணருங்கள். இயேசு உங்கள் பாவங்களின் நிமித்தம் மரித்தார் என்பதை விசுவாசியுங்கள்; உங்கள் இரட்சகராய் ஏற்றுக் கொள்ளுங்கள். உங்களை இரட்சிக்க அவர் ஆவலோடு காத்துக் கொண்டிருக்கிறார். விசுவாசத்தின் மூலம் நீங்கள் அப்படியே கிறிஸ்துவண்டை வாருங்கள். கிறிஸ்துவிலுள்ள புதிய ஜீவியம் எவ்வளவு மகிழ்ச்சியானது; எவ்வளவு ஆசீர்வாதமானது என்று நீங்களே அறிந்து கொள்வீர்கள்.

கற்றுக் கொள்க! வளர்க!!

(விடைகள் கடைசி பக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன)

1. குறியீடுகள் (Symbols) என்ன என்பதை உதாரணத்துடன் விளக்குக?

2. வேதத்தின் ஒரு பகுதி குறியீட்டால் ஆனதா அல்லது எழுத்தின்படியுள்ளதா என்பதை நீ எவ்விதம் அறிந்து கொள்வாய்?

3. வேத பாடத்தில் ஒப்புமாதிரி என்றால் என்ன?

4. எப்படி வெண்கல சர்ப்பம் வேதத்தில் ஒரு ஒப்பு மாதிரியாக இருக்கிறது?

5. வேதத்திலுள்ள ஒப்பு உவமையை கண்டு பிடிக்கும் போது கடைபிடிக்க வேண்டிய முன் எச்சரிக்கையான இரண்டு காரியங்கள் என்னென்ன?

6. வேத தீர்க்கதரிசனங்களை வியாக்கியானஞ்செய்யும்போது கடைபிடிக்க வேண்டிய ஐந்து விதிமுறைகளை

(a)
(b)
(c)
(d)
(e)

7. "இரட்டிப்பாக நிறைவேறும் விதிமுறை" என்றால் என்ன என்பதை உதாரணத்துடன் விளக்குக ;

அத்தியாயம் 4

மூன்று முக்கிய விதிமுறைகள் !

வேத புத்தகத்தின் அடிப்படை செய்தி மிகவும் எளிதானது. குழந்தைகளும் புரிந்து கொள்ளக் கூடியது ! வேத வசனங்கள் தேவனை நமக்கு அறிமுகப்படுத்துகின்றன ; சிருஷ்டிப்பை விவரிக்கின்றன ; பாவ மன்னிப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலையில் இருக்கும் பாவிகள் நாம் என்று நமக்கு உணர்த்துகின்றன ! மட்டுமல்ல, இயேசுக்கிறிஸ்துவின் மேல் வைக்கும் விசுவாசத்தின் மூலம் நமக்குக் கிடைக்கும் இரட்சிப்பை வெளிப்படுத்துகின்றன !

மட்டுமல்ல, தேவனுடைய வார்த்தையானது ஆழமானதும் ; விவரிக்க முடியாததுமாய் இருக்கின்றன. அது நித்திய பிதாவினுடைய குணாதிசயங்களையும், செயல்களையும் விவரிக்கின்றன. அநேக கல்விமான்கள், தத்துவ ஞானிகள் உள்ளத்தில் எழும்பும் பல்வேறு கேள்விகளுக்கு விடையளிக்கின்றன. வேத வசனங்கள் பாலைப் போன்றும் அதே நேரத்தில் பெலமிக்க உணவாகவும் விளங்குகின்றன. வளர்ந்த விசுவாசிகளை ஆவிக்குரிய பரிபூரணத்திற்குள் வழிநடத்துகின்றன, ஆகையினால் நாம் ஒவ்வொருவரும், வேதத்தின் எளிதான பகுதிகளை மட்டுமல்ல ; கடினமான பகுதிகளைக் கூடக் கற்றுக் தேற வேண்டியது அவசியமாய் இருக்கிறது.

இந்த அத்தியாயத்தில் பயனுள்ள வேத ஆராட்சிக்காக மூன்று முக்கிய குறிப்புகளை நான் உங்களுக்குக்

கொடுக்கிறேன். யாருக்கென்றால், வேத புத்தகத்தை அருளிச் செய்தவர் இயேசுக்கிறிஸ்துதான் என்ற விசுவாசமுள்ளவர்களுக்குத்தான். நீங்கள் கிறிஸ்தவர்களாய் இல்லாத பட்சத்தில் முதலாவது நீங்கள் இயேசுக் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, தனிப்பட்ட முறையில் அவரோடு தொடர்பு கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னத்தை உங்களால் உணரமுடியும்; நீங்கள் கற்றுக் கொள்ளும் கர்த்தருடைய வார்த்தையும் அர்த்தம் நிறைந்ததாக இருக்கும்!

பயனுள்ள விதத்தில் வேதத்தைக் கற்றுக் கொள்ள இதோ மூன்று முக்கிய விதிமுறைகள் :

1. நடை முறைக்குக் கொண்டுவா,
2. வேத வசனங்களுக்கேற்ப அனுசரி,
3. தனிப்பட்ட முறையில் சொந்தமாக்கிக்கொள்.

வேதத்தைக் கற்றுக் கொள்ள முதல்படி ;

1. நடை முறைக்குக் கொண்டுவா.

வெறும் அறிவு வளர்ச்சிக் கென்று வேதத்தைக் கற்றுக் கொள்ளாதே! ஒருவர் சொன்னார் ; "ஒவ்வொரு வேத வசனத்திற்கும் தனிப்பட்ட முதலாந்தர வியாக்கியானம் உண்டு ; மட்டுமல்ல ஒவ்வொரு வேதவசனத்திற்கும் ஒன்றோ ஒன்றிற்கு மேற்பட்டதான இரண்டாம் படியான செயல் முறையும் உண்டு" என்றார்.

வேதத்திலுள்ள ஒரு பகுதியின் அடிப்படை அர்த்தத்தைப் புரிந்து கொள்ளுவது மட்டுமல்ல ; அந்த வேத வசனங்களின் சத்தியங்கள் நம் தனிப்பட்ட வாழ்க்கையின் தேவைகள், பிரச்சனைகளை நீக்க நாம் அவற்றை செயல் முறைக்குக் கொண்டுவரவும் வேண்டும். வேத வசனங்களின் வியாக்கியானங்களை அறிந்து கொண்டு அவற்றை நாம் செயல் படுத்தாவிட்டால் ஒரு பிரயோஜனமும் இல்லை!

வேதவசனங்களின் ஆழமான அறிவை அடைந்தும், அவற்றை அனுதின வாழ்க்கையில் அப்பியாசப் படுத்தா விட்டால் நாம் ஆவிக்குரிய வெதுவெதுப்பான நிலையில் 'மரத்துப் போய்' காணப்படுவோம். வரவர வாதாடுகிற வர்களாகவும், சிறுசிறு காரியங்களுக்காக சண்டையிடுகிற வர்களாகவும் மாறிவிடக் கூடும். கடைசியில் நம்மால் கர்த்தருடைய நாமத்திற்கு அவமானமே வந்து சேரும். எனவே வேதத்தை உங்கள் வாழ்க்கையில் செயல் படுத்துங்கள்.

அதே நேரத்தில் மறுமுனையின் எல்லைக்கும் நாம் சென்று விடக்கூடாது. வேதத்தைச் செயல்படுத்துகிறேன் என்று சொல்லிக் கொண்டே வேதத்தை ஆழமாக அறிந்து கொள்ளுதலை புறக்கணித்துவிடக் கூடாது. வேத அறிவின் ஆழம் இல்லாவிட்டால் நீ வெறுமை யாய்க் காணப்படுவாய். வேதத்தின் அடிப்படை உப தேசங்களைப் பற்றிய தெளிந்த அறிவு உனக்கு இருக்காது.

வாசித்த வேதபகுதியின் முதலாந்தர முக்கிய அர்த்தம் என்ன என்று கண்டுபிடித்தபின், அந்த பகுதியிலிருந்து நீ கற்றுக்கொள்ளவேண்டிய பாடங்கள் என்னென்ன என்பதைத்தேடிப்பிடி. அந்தவேதவசனங்கள் உன்னிடம் என்ன பேசுகிறது என்று உன்னையே நீ கேட்டுப்பார். அந்த வசனங்களைத் தியானிக்கும் போது, தேவன் செய்த ருளிய நன்மைகளுக்காக கர்த்தரைத் துதிக்கும்படி உன் உள்ளம் ஒருவேளை உன்னை ஏவலாம். கர்த்தருடைய ஆலய பிரகாரங்களில் இன்னும் அதிகமாய் ஈடுபடுவேன்; ஊழியஞ்செய்வேன்; ஒழுங்காக ஆலயம் செல்லுவேன் என்ற தீர்மானங்களைச் செய்யலாம். உன்னிலுள்ள பாவங் களை அறிக்கையிட வேண்டும் மன்னிப்பை பெற்றுக் கொள்ளவேண்டும் என்று அந்த வசனம் உன்னில் வலி யுறுத்தலாம். அல்லது நீ வாசிக்கும் வேத பகுதி உன் வேதனை நேரத்தில் உன்னை ஆறுதல் படுத்தக் கூடியதாய் இருக்கக் கூடும். வேதம் எவ்வாறு தனிப்பட்ட வாழ்க்கை

யில் பிரயோஜனமாய் இருக்கமுடியும் என்று என்னால் எழுதிக் கொண்டே செல்லமுடியும்.

நோவாவின் பேழையைக் குறித்த ஒரு அருமையான சம்பவத்தை வேதத்தில் வாசிக்கிறோம் (ஆதி 6-9). அதில் அமைந்துள்ள முக்கிய கருத்து என்ன என்று கண்டு கொள்வதுகடினமானது அல்ல! அக்கிரமமுள்ள மனிதகுலம் வெள்ளத்தால் அழிக்கப்படும் என்ற தேவ எச்சரிப்பை நோவா பெற்றுக் கொண்டார். வரப்போகும் அழிவுக்கு நோவாவும் அவரது குடும்பமும் தப்பும்படி கர்த்தர் ஒரு பேழையைச் செய்யும்படி கட்டளையிட்டார். கர்த்தர் சொன்னபடியே வெள்ளம் வந்தது; அக்கிரமக்காரர்களை அழித்தது; ஆனால் பேழையில் இருந்தவர்கள் பாதுகாக்க பட்டார்கள். இந்த பகுதி உண்மையாய் நடந்த சரித்திர பூர்வமான சம்பவம். வாசிப்பதற்கு தெளிவாய் அமைந்து இருக்கிறது.

முதலாவது இந்த பகுதியின் மையக்கருத்தை அறிந்த பின், இரண்டாவது இந்த பகுதி என் தனிப்பட்ட வாழ்க் கைக்குக் கொண்டு வரும் கர்த்தருடைய ஆலோசனை என்ன என்பதை அறிந்து கொள்ளவேண்டும். நோவா கீழ்ப்படிந்தது போல, நாமும் கர்த்தருக்கு கீழ்ப்படிந்தால் பாதுகாக்கப்படுவோம். அடுத்தது நோவாவின் பொறுமை நம் உள்ளத்தைத் தொடுகிறது. ஏறக்குறைய 120 வருடங் கள் தொடர்ந்து பிரசங்கம் செய்தும் எச்சரித்தும், ஒரு ஆத்துமாவும் மனம் திரும்பவில்லை; அப்படியிருந்தும் தன் முயற்சியில் அவர் சோர்ந்து போகவில்லை. விடாமுயற்சி யும் பொறுமையும் நமக்குத் தேவை. மட்டுமல்ல, நோவா வின் பேழையில் காப்பாற்றப்பட்ட பின் நோவா ஒரு பலி பீடத்தைக் கர்த்தருக்கென்று கட்டியதைப்போல நாமும் கர்த்தருக்கு எப்பொழுதும் நன்றியுள்ளவர்களாய் இருக்க வேண்டும்; ஸ்தோத்திரம் செய்யவேண்டும். நம்மை பாது காக்கும் பேழையானவர் இயேசுக்கிறிஸ்துவே நம்மேல் வீசவேண்டிய தேவ கோபக்கனையின் புயலை அவர் தன் மேல் ஏற்றுக் கொண்டார். நம் பாவத்தின் சம்பளமாகிய

மரணத்தை சிலுவையிலே அவர் செலுத்தித் தீர்த்தார். அவருக்குள் நாம் பாதுகாப்பாய் இருக்கிறோம். அருமையான தேவபிள்ளையே நீ வேதத்தை வாசிக்கும் போது. இப்படியாக, அந்த வேதபகுதி உன் வாழ்க்கைக்கு செயல் முறையில் பயன்படட்டும்.

இன்னொரு நல்ல உதாரணம் யாத்திராகம் 3 ஆம் அதிகாரத்தில் காணப்படுகிறது. அக்கினி பற்றி எரியும் முட்செடியில் கர்த்தருக்கும் மோசேக்கும் நடந்த ஒரு சம்பாஷணை அது! இந்த பகுதியில் அடங்கியுள்ள முக்கிய மையக் கருத்து என்ன? முட்செடியில் எரியும் அக்கினி தேவப் பிரசன்னத்தை வெளிப்படுத்துகிறது. மூன்று முக்கிய காரணங்களுக்காக கர்த்தர் மோசேக்கு தன்னை காண்பித்திருக்கிறார். 1) தன்னைக் குறித்த சிலவற்றை மோசேக்கு அறிவிக்கும்படி. 2) இஸ்ரவேல் ஜனங்களைக் குறித்து தேவனுடைய திட்டங்களை வெளிப்படுத்தும்படி. 3) இஸ்ரவேலை வழி நடத்திச் செல்லும் தலைவனாக மோசேயை நியமிக்கும்படி.

இந்த மையக்கருத்தை முதலாவது உணர்ந்து கொண்டபின்பு, இது நமது தனிப்பட்ட வாழ்க்கையில் கற்றுக் கொடுக்கும் பாடங்கள் என்ன என்பதைச் சிந்திப்போமா? பல பாடங்கள் நம் உள்ளத்தில் வருகின்றன. இஸ்ரவேல் ஜனங்களுக்காக பாடு அனுபவிப்பதை மோசே தெரிந்து கொண்டார் இதைக்கர்த்தர் கவனித்து கனம் பண்ணினதைப் போல, கர்த்தருக்கென்று நாம் செய்யும் ஒவ்வொரு உண்மையான தீர்மானத்தையும் கர்த்தர் கனம் பண்ணுவார். மோசேயின் அனுபவத்திலிருந்து பொறுமையை நாம் கற்றுக் கொள்கிறோம். இஸ்ரவேல் மக்களை மீட்கவேண்டும் என்று தீவிரப்பட்டதிலிருந்து நாற்பது வருடங்கள் ஓடிவிட்ட போதிலும், அவ்வளவு காலம் அவர்கள் பொறுமையோடு காத்துக் கொண்டிருந்தனர். அப்படியே கர்த்தருடைய நேரம் வரும் வரைக்கும் நாமும் பொறுமையோடே காத்திருக்க வேண்டும்.

தேவ சமூகத்தில் நாம் எப்படி பயபக்தியாயிருக்க வேண்டும் என்ற ஒரு பாடத்தையும் நாம் கற்றுக் கொள் கிறோம். மோசே தேவ சமூகத்தில் நின்ற போது கர்த்தர் அவன் கால்களிலுள்ள பாதரட்சையைக் கழற்றிப் போடும்படி கட்டளையிட்டார். நாமும் நமது செய்கை களில் பயபக்தியாய் தேவ சமூகத்தில் நிற்போமாக. ஆம் ; நாம் வேதத்தை வாசிக்கும் போது, தேவனுடைய குரல் நம்மோடு பேசி, நமது குறைகளை நீக்க நாம் இடங் கொடுப்போமாக ! வேதத்தைக் கற்றுக் கொள்ள இதோ இரண்டாவது படி :—

2. **வேத வசனங்களுக்கேற்ப அனுசரி :-**

இந்த ஆலோசனை உங்களுக்கு வேடிக்கையாக தோன்றலாம். வேத பாடத்தை வேத வசனங்களுக்கு ஏற்ப அனுசரிப்பது எப்படி என்று நீங்கள் கேட்கலாம். உண்மைதான் எப்படி என்றால் வேத வாக்கியங்களை மற்ற வேத வாக்கியங்களோடு ஒப்பிட்டு பார்ப்பதுதான். "வேத வசனங்களுக்கு வேத வசனமே வழிகாட்டி" என்று ஒருவர் அழகாகச் சொன்னார். வேதத்தைப் பற்றியே ஒரு முழு அறிவு உன்னை வழிகாட்டுவது போல, வேறு யாரும் உனக்கு வழிகாட்ட முடியாது. எனவே வேத வாக்கியங் களை வேத வாக்கியங்களோடு ஒப்பிட்டுப்பார். உன் தீர் மானங்களை வேத வசனங்களுக்கேற்ப அனுசரி. ஒத்து வாக்கிய வேதாகமங்களில் வேத பகுதியின் ஓரத்தில் கொடுக்கப்படும் வேத வசனங்களின் கருத்துக்களைப் பார் (விசேஷமாக ஸ்கோபீல்டு ஒத்துவாக்கிய வேதாகமம் மிகவும் சிறந்தது). எந்தெந்த வார்த்தைகளுக்கு விளக்கங் கள் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அந்த விளக்கங்களை வேதத்தின் ஓரத்தில் கொடுக்கப்பட்ட பகுதியிலிருந்து கண்டுபிடி. ஒன்றோ, அல்லது அதற்கு மேற்பட்ட ஒத்து வாக்கியங்கள் கொடுக்கப்பட்டிருக்கலாம். அந்த வசனங் களையெல்லாம் எடுத்துப் படித்து ஆராயும்போது வேத ஆராய்ச்சி மிகவும் பயனுள்ளதாகவும் ஆசீர்வாதமுள்ள தாகவும் அமையும்.

வேத வசனங்களை இன்னொரு வேத வசனங்கள் மூலம் ஒப்பிட்டுப் படிப்பதற்காக ஒரு வேத அகராதி ஒன்றை வாங்கிக்கொள். உதாரணமாக "பாவமன்னிப்பு என்ற பதத்தைக் குறித்து நீங்கள் கற்றுக்கொள்ள விரும்பினால் வேத அகராதியில் "பாவமன்னிப்பு" என்ற வார்த்தைகள் எங்கிருக்கின்றன என்பதைக் கண்டுபிடி. பின்பு அந்த வசனங்களை எல்லாம் வேதத்தில் எடுத்து படிக்கும் போது "பாவமன்னிப்பு" என்ற பதத்தைக் குறித்து மிகவும் அதிகமாய் நாம் புரிந்து கொள்ளமுடியும். ஆம் உண்மையாகவே வேத வசனத்தை மற்ற வேத வசனங்களோடு ஒப்பிட்டுப் படிப்பது மிகுதியான பலனைத் தரும்.

வேதத்தைக் கற்றுக் கொள்ள, இதோ மூன்றாவது படி :

௩. தனிப்பட்ட முறையில் சொந்தமாக்கிக் கொள் :

தனிப்பட்ட முறையில் வேதத்தைச் சொந்தமாக்கிக் கொள் என்றால், நீ கற்றுக் கொண்டவைகளை உனக்குள்ளாகவே அடக்கி வைத்துக் கொள்ள வேண்டும் என்பது அர்த்தமல்ல. வேதம் முழுவதும் தனிப்பட்ட முறையில் இயேசுக் கிறிஸ்துவையே மையமாகக் கொண்டிருக்கிறது. எந்த பகுதியை வாசித்தாலும் அதில் கிறிஸ்து எங்கே என்பதைக் கண்டுபிடி. எல்லா ஒப்பு மாதிரிகளும், உவமைகளும், முன் அடையாளங்களும் கிறிஸ்துவை மையமாகச் சுற்றியே இருப்பதைக் கண்டு கொள்ளலாம். எல்லா வேத வசனங்களுக்கும் மையக் கருத்து கிறிஸ்துவே.

இயேசுக் கிறிஸ்து பூமியில் இருந்தபோது சொன்னார்: "வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே என்னைக்குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே" (யோவான் 5 : 39) இந்த வசனத்தின் கடைசி பகுதியைக் கவனித்தீர்களா? (அந்த நாட்களில் புதிய ஏற்பாடு இன்னும் கொடுக்கப்படவில்லை) அவர் பழைய ஏற்பாட்டைக் குறித்துச் சொன்னார், என்னைக்குறித்துச் சாட்சி

கொடுக்கிறவைகளும் அவைகளே!

எம்மாவுக்குப் போன சீஷர்களோடு வழிநெடுக இயேசு பேசிக்கொண்டே சென்றார். வேதம் சொல்கிறது, "மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேத வாக்கியங்கள் எல்லாவற்றிலும் தம்மைக்குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்து காண்பித்தார்." (லூக்கா 24 : 27)

வேதாகமம் விவரிக்கும் எல்லா செய்திகளிலும் கிறிஸ்துவே மையமானவர். பழைய ஏற்பாட்டில் அவர் நிழலாட்டமாய் உட்பொருளாய் அமைந்திருப்பதை எளிதாகக் கண்டு கொள்ளலாம். சுவிசேஷங்களில் அவர் வெளியரங்கமாய் இருக்கிறார். நிருபங்களில் விவரிக்கப்படுகிறார். வேதம் தனிப்பட்ட நபரான கிறிஸ்துவைப்பற்றி இருக்கிறபடியால், தனிப்பட்ட முறையில் சொந்தமாக்கி கொள்.

ஆதியாகமத்தை வாசிக்கும் போது அவர் ஸ்திரியானவளின் வித்து என்றும் அவர் சர்ப்பத்தின் தலையை நசுக்குகிறவர் என்றும் அறிகிறோம். அகில உலகமும் ஆசீர்வதிக்கப்படும்படி அவர் ஆபிரகாமின் வித்தானவர். ஈசாக்கிலே இயேசுக்கிறிஸ்துவை நீங்கள் கண்டு கொள்ளக் கூடும். ஈசாக்குக் கட்டப்பட்டு பலிபீடத்தின் மேல் கிடத்தப்பட்டதை வாசிக்கும்போது கிறிஸ்துவையும் சிலுவையையும் நினைவு கூறுகிறோம். யோசேபில் அவரைக் காண்கிறோம். தன் சொந்த சகோதரர்களால் புறக்கணிக்கப்பட்டு, சோதிக்கப்பட்டு கடைசியில் உயர்த்தப்பட்டார். கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களுக்கு கட்டளையிட்ட பலவிதமான பலிகள் காணிக்கைகளில் இயேசுவின் மீட்பின் கிரியையை அடையாளமாய் கண்டு கொள்கிறோம். ஆகவே 'நீங்கள் வேதத்தைக் கற்றுக் கொள்ளும்போது, தனிப்பட்ட முறையில் இயேசு கிறிஸ்துவை அடையாளம் கண்டு கொள்ள உங்கள் உள்ளம்எப்பொழுதும் திறந்தவைகளாக இருக்கட்டும்.

என்னுடைய தகப்பனுர் தான் கொடுத்த செய்தியில் இவ்விதமாய்ச் சொன்னுர்? "இயேசுக்கிறிஸ்து மனித ஞானத்தினுலும், அறிவினுலும் மொழியினுலும் அறிந்து உணர்ந்து கொள்ளமுடியாத அளவுக்கு அவ்வளவு இனிமையானவர், அவ்வளவு அழகான்வர், அவ்வளவு அருமையானவர், தனது குணுதிசயங்களில் அவ்வளவு பரிபூரணமானவர். எனவே வேதத்தை எழுதிய பக்தர்களால் இயேசுவின் குணுதிசயங்களேயும் அழகையும் முழுவதுமாய் விவரிக்க முடியாதவர்களாகி, அடையாள்ங்களாக உவமைகளாக, ஒப்புமாதிரிகளாக எழுதி வைத்தனர். வேதத்தில் கிறிஸ்துவுக்கு ஏராளமான பெயர்கள்–அர்த்தம் பொதிந்த பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளெல்லாம் இயேசுக்கிறிஸ்துவின் அளவிடப்படமுடியாத மகிமையை பல கோணங்களில் நமக்கு ஓரளவாவது வெளிப்படுத்தும் பலகணிகளாகத் திகழுகின்றன.

வேதம் இயேசுக்கிறிஸ்துவை கடைசி ஆதாம், தேவக்குமாரன், மனுஷக்குமாரன், பிதாவின் ஒரேபேரானகுமாரன், மரித்தோரில் முதற்பலனுவர், ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா, இரட்சிப்பின் அதிபதி, சபைக்குத் தலே என்று பல்வேறு விதத்தில் அழைக்கிறது, மட்டுமல்ல அவருடைய நாமம் அதிசயமானவர், ஆலோசனே கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானபிரபு எனப்படும். கிறிஸ்துவே தேவ ஆட்டுக்குட்டி, யூதாக்கோத்திரத்துச் சிங்கம், மூலேக்குத் தலேக்கல், நித்திய கன்மலே, அஸ்திவாரக்கல், நீதியின் சூரியனுனவர், பிரகாசமான விடிவெள்ளி நட்சத்திரம். அவர் தீர்க்கத்தரிசி, ஆசாரியன், ராஜா, கர்த்தருடைய தூதனுனவர், ஜீவ அப்பம், வாசல், ஜீவ தண்ணீர், தேவ வார்த்தை நல்ல, பெரிய, பிரதான மேய்ப்பர், அல்பாவும் ஒமேகாவுமானவர், ஆதியும் அந்தமுமானவர், முதலும் கடைசியுமானவர், அவரே முற்றிலும் அழகுள்ளவர்.

நண்பனே, இந்த புத்தகத்தின் கடைசிபகுதிக்கு நாம் வந்திருக்கிறோம். இதுவரை நீ வேத புத்தகத்தைப் படித்

முன்பைவிட இன்னும் அதிகமாக, கருத்தோடு படிக்க இந்த புத்தகத்தின் மூலம் நீ ஊக்கப்படுத்தப் பட்டிருப்பாய் என்று நான் நம்புகிறேன். வேதத்தை உன்னால் கற்றுக் கொள்ள முடியும், அதை ருசித்து மகிழ முடியும். நான் கொடுத்திருக்கும் இந்த வழிமுறைகளை நீ பின்பற்றுவா யானால் நிச்சயமாகவே வேதம் உன் உள்ளத்தை திருப்தி யாக்கும்; ஆத்துமாவை ஆசீர்வதிக்கும், வாழ்க்கையை மறுரூபமாக்கும்.

கற்றுக் கொள்க! வளர்க!!

(விடைகள் அடுத்த பக்கத்தில் உள்ளன)

1. நடைமுறையில் வேத புத்தகத்தைக் கற்றுக் கொள்ளத் தேவையான இரண்டு வழி முறைகள் என்ன?

(a)

(b)

2. வேத வசனங்களுக்கு தலைசிறந்த வியாக்கியானம் எது? சரியான விடையைக் குறி.

(a) சிறந்த அகராதிகள்.

(b) பேர்பெற்ற பிரசங்கிகள்.

(c) மற்ற வேத வசனங்கள்.

3. வேத வசனத்தை மற்ற வேத வசனங்களோடு ஒப்பிடுவதற்கு ஏற்ற நல்ல இரண்டு வழிகளை எழுது.

(a)

(b)

சிந்தனைக்கு ஒரு கேள்வி:— நீ தனிப்பட்ட முறையில் வேதத்தைப்படிக்கும் போது அதற்கேற்ற மற்ற ஒத்து வாக்கியங்களை எடுத்துப்பார்ப்பதுண்டா?

4. தனிப்பட்ட முறையில் சொந்தமாக்கிக் கொள்ளுதல் என்றால் என்ன?

(a) வேதத்தின் பகுதிகளை உனக்குள்ளே அடக்கி வைத்தல்.

(b) கிறிஸ்துவைப் பற்றி குறிப்புகளைத் தேடுதல்.

(c) உனது வியாக்கியானமே மற்றயவைகளைக் காட்டிலும் மேல் என்று எண்ணுதல்.

சவாலான கேள்வி : வேதத்தை இன்னும் அதிகமாக கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தோடிருக்கிறீர்களா ? இதைப் போன்ற அநேக புத்தகங்களை வாசிக்க வேண்டும் என்று விரும்புகிறீர்களா ? உடனே எழுதவும்.

கேள்விகளுக்கு சரியான விடைகள்

முதலாம் அத்தியாயம்

1 உன் தனிப்பட்ட பதில்.

2. (a) யோவான் 14 : 26 (b) 1 கொரி 2 : 12, 13 (c) 1 யோவான் 2 : 20, 27.

3. (a) சரி (b) சரி (c) தவறு (d) தவறு (e) சரி.

4. அப்பல்லோ.

அத்தியாயம் இரண்டு

1. (a) ரோமர்—நவீன காலத்திற்குறியது.
   (b) மாற்கு—எளிதானது; சுருக்கமானது.
   (c) ஆதியாகமம்—மத்தவைகளின் ஆரம்பம்.

2. (a) சூழ்நிலை. (b) மற்ற வேத வசனங்கள்
   (c) பொது அறிவு.

3. குழம்பிவிடாதபடி எச்சரிக்கையாயிரு.

4. (a)

5. (a) அங்கத்தினர்—பல்வேறு மக்கள்.
   (b) அழைப்பு—பல்வேறு நோக்கம்.
   (c) இலக்கு—பல்வேறு கடைசிகால சம்பவங்கள்

அத்தியாயம் மூன்று

1. ஒரு எண்ணத்தையோ, உண்மையையோ விளக்கக் கூடிய குறியீடுகள் (உதாரணமாக, சிலுவை, புரு, நங்கூரம்)

2. எழுத்தின்படி எடுத்தால் அதன் அர்த்தம்புரிகிறதா?
3. புதிய ஏற்பாட்டின் சத்தியத்தை விளக்கக்கூடிய பழைய ஏற்பாட்டு சம்பவங்கள் பழக்கங்கள்
4. கிறிஸ்துவை நோக்கிப் பார்ப்பதால் கிடைக்கும் ஆவிக்குரிய சுகம் (யோவான் 3 : 14–16)
5. (a) வெளிப்படையான, சரித்திரபூர்வமான அர்த்தத்தை அசட்டை செய்யாதே
   (b) ஒப்புமாதிரிகள் மேல் கட்டி எழுப்பும் உபதேசங்களைக்குறித்து ஜாக்கிறதையாயிரு.
6. (a) எழுத்தின்படியே வியாக்கியானஞ் செய்.
   (b) தொடர்ந்து வரும் வெளிப்படுத்தல்களை அறிந்துகொள்.
   (c) இரட்டிப்பாக நிறைவேறும் விதிமுறையை அனுசரி.
   (d) வேத வசனத்தை வேத வசனத்தோடு ஒப்பிட்டுப்பார்.
   (e) குறியீட்டுகளையும், உவமைகளையும் கவனி.
7. ஒரு தீர்க்கதரிசனத்திற்கு சமீபகால, தூரத்திய நிறைவேறுதல்கள் இருக்கும். உதாரணமாக ஏசாயா 7 : 14.

அத்தியாயம் நான்கு

1. (a) வெளிப்படையான அர்த்தத்தைக் கண்டுபிடி.
   (b) உன் வாழ்க்கைக்கு சொந்தமாக்கிக் கொள்.
2. (c)
3. (a) வேதத்தின் ஓரத்திலுள்ள குறிப்புகளை உபயோகப்படுத்து.
   (b) வேத அகராதியை உபயோகி.
4. (b)
   (c) இயேசுக்கிறிஸ்து.

அத்தியாயம் 1

ஆரம்பிப்பது எப்படி ?

அநேகர் தற்காலத்தில் வேதம் வாசிக்கிறதில்லை. இந்த நாகரீக உலகத்தில், மிகவும் வேகமாய் செயல்பட்டு, சந்தோஷம் எங்கே என்று தேடுகிறார்களே தவிர, நீத்தியத்திற்கான வழி என்ன என்பதைப் பற்றிக் கொஞ்சமும் சிந்திக்கிறதில்லை. யாராவது வேதத்தின் செய்தியைப் பிரசங்கித்தால், அதைக் குறித்தும் அக்கறைக் கொள்வதில்லை. வேதம் என்றால், அது பழங்காலத்துக் கதைகளும் சரித்திரமும் நிறைந்த தொகுப்பு என்றும், தங்களுக்கு எந்தவிதத்திலும் பிரயோஜனப்படாது என்றும் தாங்களாகவே சிந்தித்துக் கொள்கிறார்கள். அநேகர் வேதத்தை வாசிக்க வேண்டும் என்று விரும்புவார்கள்; ஆனால் அதை அவர்களால் புரிந்துக்கொள்ள முடிவதில்லை. நீயும் ஒரு வேளை, "நான் ஏன் வேத புத்தகத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும்?" என்று கேட்கலாம்.

வேதத்தைக் கற்றுக் கொள்வதில் ஏற்படும் நன்மைகள், ஆசீர்வாதங்கள் எண்ணற்றவை. ஆனால் நான் ஒன்றை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். யார் யார் வேதத்தை விரும்பி வாசிக்கிறார்களோ அவர்கள் வாழ்க்கையைப் பிரகாசிக்கச் செய்யும் வல்லமை வேத புத்தகத்திற்கு உண்டு. எங்கெங்கே பிரசங்கிக்கப்பட்ட கர்த்தருடைய வார்த்தையை ஜனங்கள் விசுவாசத்தோடு ஏற்றுக் கொண்டார்களோ, அவர்கள் ஆண்களானாலும் சரி, பெண்களானாலும் சரி, சிறுவர்களானாலும் சரி அங்கங்கே பலத்த வன்மை வல்லமையான மாறுதல் எற்பட்டிருக்கிறது.

ஒரு ஆச்சரியமான சம்பவத்தை நான் உங்களோடு பகிர்ந்துக் கொள்ளட்டும். 1789 ஆம் ஆண்டு இங்கி

லாந்து தேசத்தைச் சேர்ந்த சில கப்பற்படை வீரர்கள் கிழக்கு கடலிலுள்ள ஒரு தீவில் தங்கிவிட தீர்மானித்தனர். அங்கே ஒரு நாள் அவர்களுடைய மாலுமிக்கு விரோதமாய் கலகம் பண்ணி, மாலுமியை மட்டும் ஒரு சிறிய படகிலே வைத்து துரத்தி விட்டனர். இங்கிலாந்து தேசம் அதை அறிந்த போது ஒரு படையை அனுப்பினர்கள். அந்தப் படைவீரர்கள் இந்த கலகக்காரர்களைக் கைது செய்து அவர்களில் ஒன்பது பேரை வேறு ஒரு தீவுக்கு அனுப்பி வைத்தனர். அங்கே அந்தக் கலகக்காரர்கள் ஒரு புதிய குடியிருப்பை ஆரம்பித்தனர்.

அந்த ஒன்பது பேரும் என்னென்ன பாவ வழிகளில் ஜீவிக்க முடியுமோ, அவ்வளவாய் அக்கிரமத்திலும், குடியிலும்; பாவத்திலும் வாழ்ந்து ஒருவர் பின்னுக ஒருவர் மரித்தனர். கடைசியிலே ஒரே ஒருவர் மட்டுமே எஞ்சியிருந்தார் அவருடைய பெயர் **அலெக்ஸ்ஸாண்டர் ஸ்மித்**. அவரும் அவரோடுகூட ஆதிவாசிகளும், அவர்களுக்குப் பிறந்த குழந்தைகளும் அந்த தீவில் வாழ்ந்து வந்தனர். ஒரு நாள் அலெக்ஸ்ஸாண்டர் ஒரு உடைந்த கப்பலில் இருந்து வேதாகமம் ஒன்றைக் கண்டு பிடித்தார். ஆர்வத்தோடு வாசித்து, அப்படியே விசுவாசித்தார் மட்டுமல்ல, அங்கிருந்த பெண்கள், குழந்தைகள் அனைவரையும் கூட்டி உட்கார வைத்து வேதத்தை உபதேசித்தார். இருபது ஆண்டுகள் ஓடி மறைந்தன. ஒரு நாள் ஒரு அமெரிக்க கப்பல் அந்தத் தீவில் இறங்கியது. அவர்களுக்கு ஒரு ஆச்சரியம் என்னவென்றால், அந்தத் தீவில் வாழ்ந்த அத்தனை மக்களும் கிறிஸ்தவர்களாக, மிக ஒழுக்கமாக சன்மார்க்க நெறியில் ஜீவிப்பதைக் கண்டார்கள். ஒரு வியாதியும் இல்லை, ஒரு குற்றம் செய்வாரும் இல்லை. படிப்பறியாதவர்கள் இல்லை. குடி வகைகள் ஒன்றும் இல்லை. அந்த மக்களின் சன்மார்க்க நெறி அவ்வளவு அதிகமாய் இருந்தபடியால், போலீசோ, அல்லது சட்ட ஒழுங்கை நிலைநாட்டும் அதிகாரிகளோ

அங்குத் தேவைப்படவில்லை. அந்த சிறிய தீவு ஒரு குட்டி பரலோகமாகக் காட்சியளித்தது. இவ்வளவு மகிமையான மாறுதலை அங்கு கொண்டு வந்தது என்ன தெரியுமா? வேத புத்தகம். அதை வாசித்தார்கள்; விசுவாசித்தார்கள்; நடைமுறை வாழ்க்கையில் அப்பியாசப்படுத்தினுர்கள்.

தேவ பிள்ளையே, அதே வேதம் உன் வாழ்க்கையைக் கூட மலரச் செய்யும். எனவே இந்தச் சிறிய அத்தியாயங்களில் கொடுக்கப்பட்டுள்ள பாடத் திட்டங்கள் மிகவும் முக்கியமானவை. மிகவும் நுணுக்கமானது. கர்த்தர் உன்னேடு பேசும்போது தேவ வல்லமையை நீ உணர்வாயென்ருல், உடனே கர்த்தருக்கு ஒப்புக்கொடு. இதுவரை நீ ஒருவேளை இரட்சிக்கப்படாமல் இருப்பாயென்ருல் இப்பொழுதே நீ பாவி என்று உணர்ந்து, உன் பாவங்களை அறிக்கையிட்டு, இயேசு உன் பாவங்களுக்காக மரித்தார் என்று விசுவாசித்து உன் இரட்சிப்பை பெற்றுக்கொள். கர்த்தர் உன் எல்லாப் பாவங்களையும் மன்னித்து, உன் வாழ்க்கையில் அற்புதங்களைச் செய்வார். அப்பொழுதுதான் உன்ஞல் திறந்த மனதோடு வேதத்தை வாசித்துக் கற்றுக் கொண்டு வேதத்தின் உபதேசங்களுக்குப் பரிபூரணமாய் கீழ்ப்படிய முடியும்.

முதல் அவசியம் : மறுபடியும் பிறத்தல்

தேவனுடைய வல்லமையிஞல் நீ மறுபடியும் பிறந்தால் ஒழிய வேதத்தில் எழுதப்பட்டிருக்கும் ஆவிக்குரிய சத்தியங்களை உன்ஞல் புரிந்துகொள்ள முடியாது. நிக்கோதேமுவோடு இயேசு பேசும்போது அதை அவனுக்கு திட்டமாய் விளங்கப்படுத்தினுர். "ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காண மாட்டான் என்று மெய்யாகவே, மெய்யாகவே உனக்குச் சொல்கிறேன் என்ருர்".

வேதத்தை ஒழுங்காக வரிசைக்கிரமமாகக் கற்றுக் கொள்வதற்கு முன்பு, உன்னை நீயே ஒரு கேள்வியைக் கேட்டுக்கொள்! "நான் மறுபடியும் பிறந்திருக்கிறேனு?"

வேதத்தைக் கற்றுக்கொள்ளவேண்டும் என்ற ஆசை உன் உள்ளத்தில் ஏற்படுகிறதற்குக் காரணமே, கர்த்தருடைய ஆவியானவர் வசனத்தின் மூலம் உன்னோடு பேச விருப்பப்படுவதால்தான். ஆனால் நீ அவருக்கு செவி கொடுப்பது அவசியமாயிருக்கிறது! உனது பாவங்களை ஒப்புக்கொள். இயேசு கிறிஸ்துவின்மேல் விசுவாசம் வை. அவரை உனது இரட்சகராக ஏற்றுக் கொள். நீ உண்மையாய் இதைச் செய்யும்போது உனக்கு ஒரு புதிய வாழ்க்கையையும், அவரோடு ஒரு புதிய உறவையும் தந்தருளுவார்.

A. புதிய வாழ்க்கை :—

மறுபடியும் பிறத்தல் என்றால் கர்த்தரிடத்திலிருந்து புதிய வாழ்க்கையைப் பெற்றுக் கொள்வதாகும். பவுல் அப்போஸ்தலன் கிறிஸ்தவனை, " புதிய சிருஷ்டி " என்று அழைக்கிறார் (2 கொரி 5 : 17). பேதுரு கிறிஸ்தவர்களை தேவனுடைய "திவ்வியசுபாவத்திற்குப் பங்குள்ளவர்கள்" என்று எழுதுகிறார், (2 பேதுரு 1:4) இரட்சிக்கப்படாத ஒருவனால் வேதபுத்தகத்தை அறிந்துகொள்ள முடியாது, ஏனென்றால் அவன் மாம்சத்திற்குள் இருக்கிறான். அவன் பாவத்திலேயே பிறந்தவன் ; அக்கிரமங்களிலும், பாவங்களிலும், மரித்துக் கிடக்கிறான். (எபேசியர் 2 : 1) வேதம் சொல்கிறது : " அன்றியும் மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்திற்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள் . . . . எப்படியெனில், மாம்ச சிந்தை தேவனுக்கு விரோதமான பகை. அது தேவனுடைய நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்படியாமலும், கீழ்ப்படியக் கூடாமலும் இருக்கிறது. (ரோமர் 8 : 5,7)

மறுபடியும் பிறவாத ஒருவனால் கர்த்தருடைய வேதத்தின் ஆழமான இரகசியங்களை புரிந்துகொள்ளமுடியாது. வேதம் சொல்கிறது, " ஜென்ம சுபாவமான மனுஷனோ, தேவனுடைய ஆவிக்குறியவைகளை ஏற்றுக் கொள்வான்;

அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும். அவைகள் ஆவிக்கேற்றப்பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான். ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறன்" (1 கொரி 2 : 14, 15).

இயற்கையின் சுபாவத்தின் படியே, மனிதனுடைய உள்ளானக் கண்கள் குருடாக ஆவிக்குரிய ரீதியில் மரித்துக் காணபபடுகிறபடியால், அவன் மறுபடியும் பிறத்தல் மிகவும் அவசியமாயிருக்கிறது. அப்பொழுதுதான் வேதத்தின் ஆவிக்குரிய செய்தியை அவனல் அறிந்து கொள்ள முடியும்.

இரட்சிக்கப்படாத ஒருவன் வேதத்திலுள்ள இலக்கிய நயத்தையும், மதிப்பையும் வியந்து போற்றலாம்; சரித்திர சம்பவங்கள் துல்லியமாக கொடுக்கப்பட்டுள்ளதைக் கண்டு ஆச்சரியப்படலாம்; ஆனல் அவன் வாழ்க்கையில் ஆறுதலோ, பெலமோ. தெய்வீக மகிழ்ச்சியோ அடைய முடியாது.

அதே நேரத்தில், ஒரு விசுவாசி ஏழையாயிருக்கலாம்; அதிகமான கல்வியறிவு இல்லாதவராய் இருக்கலாம். ஆனல் அவர் மறுபடியும் பிறந்திருக்கும் அனுபவம் அடைந்திருப்பதால் வேதம் எண்ணற்ற நன்மைகளையும், முடிவில்லாத ஆசீர்வாதங்களையும் தருகிற புத்தகமாகக் காட்சியளிக்கும். இன்னும் சொல்லப் போனல், வேத புத்தகம் அவனுக்கு ஆத்மீக ஆகாரத்தை அள்ளித் தருகிறபடியால், வேதத்தைப் பிரிந்து அவனல் வாழ முடியாத நிலைக்கு வந்து விடுகிறன். தேவனிடமிருந்து பெற்றுக்கொள்ளும் "புதிய வாழ்க்கை" வேத வசனங்கள் மூலம்தான் செழிப்படைகிறது. வேத வசனம் பாலுக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. (1 பேதுரு 2:2, எபி 5:13). அதே நேரத்தில் பலமுள்ள ஆகாரமும்கூட (எபி 5:14) வேத வசனங்களிலுள்ள மிகப் பெரிய ஆசீர்வாதங்களைப் பெற்றும் கொள்வதற்கு முன்பு, நீ கிறிஸ்து தரும் "புதிய

வாழ்க்கையைப்'' பெற்றுக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாயிருக்கிறது. அதை உறுதிப்படுத்திக் கொள்!

B. புதிய உறவு :—

ஒருவன் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் போது அவன் மறுபடியும் பிறக்கிறது மட்டுமல்ல; கிறிஸ்துவோடு ஒரு புதிய உறவுக்குள் பிரவேசிக்கிறான். இரட்சிக்கப்படாத ஒருவர் தேவன் உண்டு என்றும், அவரே உலகத்தைப் படைத்து காத்து வருகிறவர் என்றும் சொல்லலாம்; ஆனாலும் அவருக்கு தேவன், "பரம பிதா" என்பது தெரியாது!

ஒருவன் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் போது கிறிஸ்துவின் மாபெரும் குடும்பத்தில் அவன் அங்கமாகிறான். ஆகையால்தான் யோவான் அப்போஸ்தலன் விசுவாசிகளை "சிறு பிள்ளைகளே'' என்று அழைக்கிறார். அவர் உபயோகிக்கின்ற வார்த்தையின் அர்த்தம், "இப்பொழுதுதான் பிறந்த குழந்தைகளே" என்பது. தேவனுடைய குடும்பத்தில் பிறந்த ஒவ்வொரு தேவனுடைய பிள்ளைக்கும் தேவனோடுள்ள ஒரு "புதிய உறவு" உண்டு, பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறார். நாம் அவரை நோக்கி "அப்பா, பிதாவே" என்று அழைக்கக்கூடிய புத்திர சுவிகார ஆவியை—புதிய உறவைப் பெற்றிருக்கிறோம்.

என் அருமை நண்பனே, நீ வேதத்தை வாசிக்கும் போது, அது உன் பரம பிதாவினிடத்திலிருந்து உனக்கு வரும் செய்தி என்று உணர்ந்து வாசிக்கிறாயா? நீ வேதத்தை வாசிக்கும் போது அவர் அன்போடு உன்னைக் கவனித்துக் கொண்டேயிருக்கிறார் என்பதை உணருகிறாயா? ஒன்றை அறிந்து கொள்; நீ கர்த்தருக்கு மிகவும் பிரியமானவன்; முக்கியமானவன்; நீ வேதத்தை வாசிக்கும் போது கர்த்தர் உன்னில் மனம் மகிழ்ந்து அதன் மூலமாய் உன்னோடு பேசுகிறார். இப்படி நீ உணர்ந்து வேதத்தை வாசிப்பாயானால், வேதம் உனக்கு இனிமையானதும்,

முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் இருக்கும். ஒரு அன்பின் கடிதத்தை வாசிப்பது போல வேத எழுத்துக்களை வாஞ்சையோடுப் பருகுவாய்.

ஆனால் இரட்சிக்கப்படாத ஒருவர், வாசித்தால், வேத புத்தகம் அவருக்கு சுவையற்ற சரித்திர சம்பவங்களும், கடவுளைப் பற்றிய கடினமான உபதேசமாகவுமே காட்சியளிக்கும். இரட்சிக்கப்பட்ட தேவ ஜனங்களுக்கோ வேதம் நித்திய மகிழ்ச்சி, நித்திய ஆறுதல், நித்திய பெலன், எனவே நான் மறுபடியும் வலியுறுத்திச் சொல்கிறேன். வேத புத்தகத்தில் ஆவியானவர் சொல்லும் தேவ செய்திகளை நீ கருத்தோடு கற்றுக்கொள். உன் விசுவாசத்தை இயேசுக்கிறிஸ்துவின் மேல் வை. அவர் உனக்கு இரட்சிப்பை சம்பாதித்துத் தந்தார் என்பதை விசுவாசி. நீ முற்றிலும் கர்த்தரை நம்பும் அதே நேரத்தில் தானே, கர்த்தர் உனக்கு புதிய வாழ்க்கையையும், அவரோடுக்கூடிய புதிய உறவையும் தந்தருளுவார்.

II. **இரண்டாம் அவசியம் :-**

வேதத்தை அணுகும் முறை.

வேதத்தைக் கற்றுக் கொள்வதற்கு முன்பாக நம்மில் காணப்பட வேண்டிய மிக முக்கியமான இரண்டாவது காரியம், வேதத்தை அணுகும் முறையாகும். வேதம் முழுவதும் கர்த்தருடைய வார்த்தை என்ற உறுதியான எண்ணத்தோடுதான் வேதத்தை அணுக வேண்டும். நீங்கள் ஒரு வேளை புதிய விசுவாசியாக இருக்கலாம்; கர்த்தர் உள்ளத்தில் ஏவுவதைப் பற்றி ஒன்றும் அறியாமல் இருக்கலாம்; ஆனால் நீங்கள் வேதத்தைக் கற்றுக்கொள்ள ஆரம்பிக்கும் போது கர்த்தர் வேத வசனங்கள் மூலமாய் பேசுவார் என்ற உணர்வோடு ஆரம்பியுங்கள். வேத வசனங்களை விசுவாசியுங்கள்; உபதேசங்களுக்குக் கீழ்ப்படியுங்கள்; வேத வெளிச்சத்தில் உங்கள் வாழ்க்கையை சீர்படுத்திக் கொள்ளுங்கள்.

A. ஏற்றுக் கொள்ளுதல் :—

வேதத்தை வாசிக்கும் போது சில பகுதிகள் ஆச்சரிய மாக இருக்கலாம்; ஒரு வேளை நம்பக்கூடாதவைகளாக வும் காட்சியளிக்கலாம். நீங்கள் இதுவரை கற்றுக் கொண்ட உலக ஞானத்திற்கு முரண்பட்டதாகவும் இருக்கலாம். இதனால் ஒரு போதும் மனம் குழம்பிப் போய்விடக்கூடாது. ஒன்றும் புரியவில்லையே என்று கற்றுக் கொள்வதை நிறுத்திவிடவும்கூடாது!

உன் உள்ளத்தில் சந்தேகங்கள் துளிர்க்கும் போது, ஒன்றுக்கொன்று மாறுபட்ட பகுதிகளால் மனம் குழம்பும் போது, உன் வேத பாடங்களை நிறுத்திவிடாதே! மட்டு மல்ல; நீ மண்டையைப் போட்டு உருட்டி எல்லா சந்தேகங்களுக்கும் உடனடியாக பதில் தேடவும் தீ விரிக்காதே! இளம் விசுவாசியான நீ, உன் ஆத்துமாவுக் குப் பிரயோஜனமில்லாத எண்ணற்ற புள்ளி விவரங் களில் மனதைச் செலுத்தாதே! பவுல் அப்போஸ்தலனும் கூட பிரயோஜனமில்லாத தர்க்கத்துக்கேதுவான காரியங் களில் தலையிட வேண்டாம் என்று விசுவாசிகளை எச்சரிக் கிறார். "புத்தியீனமான தர்க்கங்களையும் வம்ச வரலாறு களையும், சண்டைகளையும், நியாயப் பிரமாணத்தைக் குறித்து உண்டாகிற வாக்குவாதங்களையும் விட்டு விலகு, அவைகள் துப்பிரயோஜனமும் வீணுமாய் இருக்கும்" (தீத்து 3 : 9).

வேதம் முழுவதையும் உன்னால் புரிந்துகொள்ள முடி யாமல் இருந்தாலும்கூட, நீ வேதத்தை திறக்கும் போது திறந்த உள்ளத்தோடும், தாழ்மையோடும், கற்றுக் கொள்ளும் வாஞ்சையோடும் அணுகுவாயாக, உன் கேள்விகளுக்கும் பதில் கண்டுபிடிக்க முடியாமல் இருப் பதற்காக, வேத புத்தகம் தீர்வு காண்பதற்கு சிக்கலானது என்று எண்ணிவிடாதே! உலகத்திலுள்ள எந்த புது முயற்சியானாலும் சரி. எடுத்த எடுப்பிலே எல்லாமே புரிந்துவிடாது. ஒன்றைமட்டும் நிச்சயப்படுத்திக்கொள்,

வேத அறிவிலே நீ வளர வளர, இப்பொழுது உனக்குச் சிக்கலாகத் தோன்றும் காரியங்களெல்லாம், பின்பு உனக்கு மிகத் தெளிவானதாய் இருக்கும். கிறிஸ்து உனக்கு இனிமையானவரும், விலையேறப்பெற்றவருமாக விளங்கும் போது, சிக்கலான சில பகுதிகள் உன் உள்ளத்தை ஒருபோதும் வருத்தாது. வேத வாக்கியங்கள் அத்தனையையும் அப்படியே ஏற்றுக்கொள். முழுமையும் சத்தியமுமானது என்று அப்படியே விசுவாசி. புரியாதப் பகுதிகளையும் விசுவாசத்தினுல் ஏற்றுக் கொண்டு தொடர்ந்து வேத வசனங்களைக் கற்றுக் கொள்வாயாக.

சிறு எச்சரிப்பையும் கொடுக்கிறேன். சிலர் ஒரு வேளை தாங்கள் தான் பெரிய வேத பண்டிதர் என்றும் சகல அறிவும் தங்களுக்குதான் உண்டு என்றும் உன்னிடத்தில் வரக்கூடும். அவர்கள் வேதத்தை தியான புத்தகமாக பயபக்திக்குரிய புத்தகமாக ஏற்றுக் கொள்ளாமல் சர்ச்சைக்குரிய புத்தகமாக்கி, யூதமார்க்கக் காலண்டர்கள் சொல்லுவதென்ன, வம்ச வரலாறுகள் சொல்லுவதென்ன என்று தர்க்கத்திற்குள் பிரவேசித்தால், அவர்களை விட்டு விலகு. உன் ஆத்துமாவுக்கு பிரயோஜனமில்லாத சகலத்தையும் விட்டு விலகு. இயேசுவோடு ஒன்ருக வழிநடப்பதையும், உன் ஆத்துமாவில் மகிழ்ந்து களிகூறுவதையும், கிறிஸ்துவோடுள்ள புதிய வாழ்க்கையில் களிகூறுவதையும் அப்படியே மறைத்துவிட்டு, மூளை அறிவுக்கும், தர்க்கத்துக்கேதுவான காரியத்திற்கும் வஞ்சிக்க சாத்தான் முயற்சி செய்வான்.

நீ சரியாக வேதத்தை படிக்கும் போது, உன் உள்ளம் கிறிஸ்துவின் மேலுள்ள அன்பால் பொங்கும்! அவர் அதிகமாக உன்னேடு நெருங்கி உறவாடுவதை உணர்வாய்! உன் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக தேவன் தந்திருக்கும் ஆத்மீக ஆகாரமே வேத வசனங்கள் என்பதை ஒருபோதும் மறந்துவிடாதே!

B. கீழ்ப்படிதல் :

கீழ்ப்படிதல் – ஆம், வேத பாடங்கள் மூலம் உன் வாழ்க்கை சிறப்பானதும், மகிழ்ச்சியானதுமாக மாற கீழ்ப்படிதல் மிக அவசியம்! வேத சட்டதிட்டங்களுக்கும் எச்சரிப்புகளுக்கும் நீ கீழ்ப்படிய ஆயத்தமாக இருக்க வேண்டும். கர்த்தர் என்னச் சொல்கிருரோ அதை நிறை வேற்றுவேன் என்ற தீர்மானம் உனக்குள் இருக்க வேண்டியது அவசியம். உன் முழு இருதயம், சிந்தனே, கருத்துக்கள் எல்லாவற்றையும் வேத பாடத்திற்குத் திருப்பு. தேவ சித்தத்தை நிறைவேற்ற முழு இருதயத் தோடும் தீர்மானம் செய். இயேசு கிறிஸ்து சொன்னுர் ; "அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவன் எவனே அவன் இந்த உபதேசம் தேவனுல் உண்டா யிருக்கிறதோ, நான் சுயமாய்ப் பேசுகிறேனே என்று அறிந்து கொள்ளுவான்" (யோவான் 7 : 17).

தேவ வசனத்தோடு தொடர்பு கொள்ளும் ஒவ்வொரு வருக்கும் இந்த ஆவிக்குரிய விதிமுறை ஏற்றதாயிருக் கிறது. இரட்சிக்கப்படாத மனுஷன் இந்த வசனத்தின் மூலம்தான் இழந்து போன நிலேயிலிருப்பதை உணர வேண்டும். மட்டுமல்ல, கிறிஸ்துவின்மேல் விசுவாசம் வைத்து அவரை ஏற்றுக்கொள்ளவும் வேண்டும். விசு வாசியான பின்பு தொடர்ந்து வேத வசனங்களே விசுவாசத்தோடும் அன்போடும் கற்றுக் கொள்ள வேண்டும். கீழ்ப்படிதல் அதிகமான ஆவிக்குரிய வெளிச் சத்தை அவனுக்குக் கொண்டுவரும். அவன் தேவ கிருபையிலும், தேவ மகிமையிலும் அதிகமதிகமாய் விருத்தியடைவான். வேத வசனங்களின் மறுரூபமாக்கும் வல்லமை அவனில் வல்லமையாய் கிறியை செய்யும்.

கிறிஸ்தவ நண்பனே, வேத வசனங்கள் மூலம் வரும் தேவ வல்லமையையும், ஆறுதலேயும் நீ பெற்றுக்கொள்ள வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிருர். கர்த்தருடைய மகிழ்ச்சியால் பரவசப்பட்டு, ஜெய ஜீவியம் செய்யும்

உத்தம பக்தர்களைப் பார்க்கும்போது நீ ஒருபோதும் பொறுமைப் படாதே! உனக்கு அந்த கிருபை இல்லையே என்று துயரப்படாதே! கர்த்தர் பட்சபாதமுள்ளவரல்ல. நீ கிறிஸ்துவை விசுவாசித்தபோது அவர் உனக்கு ஒரு புதிய வாழ்க்கையைக் கொடுத்து அவரது குடும்பத்தில் ஒருவனாக உன்னைச் சேர்த்துக் கொண்டிருக்கிறாரே! தேவக் குமாரனின் சாயலில் நீ வளரவேண்டும் என்பதே கர்த்தருடைய விருப்பம்! சித்தமும் கூட!

எனவே உன் ஆவிக்குரிய பெலனுக்காக வேதத்தை ஒழுங்காக வாசி. உனக்குப் புரியாத பகுதிகளையும் விசுவாசத்தோடு ஏற்றுக்கொள். கிறிஸ்துவின் மேலுள்ள அன்பின் நிமித்தம் வேத வசனங்களின் கட்டளைகளுக்கும் எச்சரிப்புகளுக்கும் கீழ்ப்படி. இயேசு சொன்னார் "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால், என் கற்பனைகளைக் கைக் கொள்ளுங்கள்" (யோவான் 14 : 15).

சிந்தியுங்கள். வேதத்தைக் கற்றுக் கொள்வதின் நோக்கம் உங்கள் மூளையில் வேத அறிவை தேக்கிவைக்க வேண்டும் என்பதற்காகவோ, அல்லது உங்கள் ஆலயத்தில் பெரிய வேத பண்டிதர் என்ற பெயரைப் பெற வேண்டும் என்பதற்காகவோ அல்ல; வேதத்தை நீ ஆவலோடு கற்றுக் கொள்ளும்போது கர்த்தரே உன்னை உபயோகப்படுத்துவார். மற்றவர்களுக்குப் போதிக்கும்படி உயர்த்துவார். ஆனால் உன் உள்ளத்தில் உள்ள வாஞ்சையோ நீ கிறிஸ்துவின் சாயலில் மறுரூபமாக வேண்டும் என்பதிலேயே இருக்கட்டும்! அந்த எண்ணமே, அக்கினியாய் உன்னில் கிறியை செய்யட்டும். நீ தாழ்மையோடு வேதத்தை அணுகி, வேத வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியும் போது, நிச்சயமாகவே கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவிலும் கிருபையிலும் நீ வளருவாய். மாமிச இச்சைகளோ, உலகத்தின் சோதனைகளோ, ஒருபோதும் உன்னை மேற்கொள்ளுவதில்லை. உன்னைச் சுற்றிலுமுள்ளவர்களும் உன்னில் தேவ சாயலை உணர்ந்து கொள்ளுவார்கள்.

இயேசு கிறிஸ்துவை நீ இதுவரை ஏற்றுக்கொள்ளா மல் இருந்தால் சகோதரனே, சகோதரியே ஒன்றை உனக்கு நிச்சயப்படுத்துகிறேன். நீ கூட கிறிஸ்துவை அறிந்து கொண்டு, அவரது இரட்சிப்பில் களிகூற முடியும். அதை நீ சரியான முறையில் ஆரம்பி! முதலா வது நீ பாவி என்பதை ஒப்புக்கொள். உன்னுடைய பாவங்களுக்காக கிறிஸ்து மரித்தார் என்பதை அறிக் கையிடு. கர்த்தர் உன்னை இரட்சிக்கும்படி அவரைக் கேள். இதை நீ செய்வாயென்றால் நிச்சயமாகவே இயேசுக் கிறிஸ்து உன் பாவங்களை மன்னித்து புதிய வாழ்க்கையை உன்னில் சிருஷ்டிப்பார். வேத புத்தகம் உனக்கு மனமகிழ்ச்சியாய் - அர்த்தம் நிறைந்ததாக இருக்கும். உன் அனுதின ஜீவியத்தில் நீ பரிசுத்தத்தில் வளருவாய். எனவே உடனே நீ தீர்மானம் செய் என்று நான் மறுபடியும் உன்னை வற்புறுத்துகிறேன்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி. அப்பொழுது நீ இரட்சிக்கப்படுவாய்.

அத்தியாயம் 2

ஒத்தாசை பெறுவது எப்படி ?

நீங்கள் புதிதாய் இயேசுக் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள். ஒருவேளை ஒரு துண்டுப் பிரதியின் மூலமாகவோ, அல்லது உங்கள் நண்பர் கொடுத்த சாட்சி யின் மூலமாகவோ, அல்லது ரேடியோவில் கேட்ட சுவிசேஷ செய்தியின் மூலமாகவோ நீங்கள் கிறிஸ்து வண்டை வந்திருக்கலாம். வேதத்தை ஒழுங்காக வாசித்து அறிந்து கொள்ளவேண்டுமே என்ற ஆர்வம் உங்களுக் குள் வந்திருக்கிறது. நீங்கள் இப்பொழுது ஒரு ஆலயத் திற்குச் செல்லவேண்டும் என்று விரும்புகிறீர்கள்.

வித விதமான, பல வகையான ஆலயங்கள் உங்களை குழப்பத்தில் ஆழ்த்துகின்றன. சில ஆலயங்கள் சரித்திரப் பூர்வமாக புகழ்பெற்ற ஆலயங்களாய் இருக்கின்றன. சில

மிகவும் பழமையானதாக இருக்கின்றன. சில ஆலயங்கள் பெரிய கட்டிடங்களுக்குள்ளும், சில மிகச் சிறிய குடிசை களிலும் இயங்குகின்றன. இவை தவிர எண்ணற்ற சுயாதீன சபைகள் வேறுபட்ட பல உபதேசங்களோடு செயல்பட்டு வருகின்றன. நீங்கள் இப்பொழுது கேட் கிறீர்கள்.

எங்களை யார் சரியாக வழிநடத்துவார்கள்? எந்த ஆலயத்திற்குச் செல்வது? எப்படிப்பட்ட புத்தகங்களை வாசிப்பது?

இந்த அத்தியாயத்தில் வேதத்தைக் கற்றுக் கொள்ள ஒத்தாசை பெறுவது எப்படி என்று நான் உங்களுக்கு விவரிக்கப் போகிறேன். முதலாவதாக பரிசுத்த ஆவி யானவரில் சார்ந்து கொள்ளுங்கள். இரண்டாவதாக, தேவனுடைய அனுக்கிரகம் பெற்ற ஊழியரின் ஒத்தாசை யையும் உதவியையும் நாடுங்கள். மேலும் இந்த அத்தி யாயத்தில் தவருய் உபதேசிக்கிறவர்களையும், சரியாய் உபதேசிக்கிறவர்களையும் அடையாளம் கண்டு கொள்வ தெப்படி என்றும் எழுதுகிறேன்.

1. பரிசுத்த ஆவியானவரின் ஊழியம் :-

வேதத்தை அருளிச் செய்த பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையை நாடாமல் வேதத்தை ஒருபோதும் வாசிக்கத் தொடங்காதே, அப்போஸ்தலனுகிய பேதுரு நமக்கு ஞாபகமூட்டுகிருர். "தீர்க்கதரிசனமானது ஒருக் காலத்திலும் மனுஷருடைய சித்தத்திஞலே உண்டாக வில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியிஞலே ஏவப்பட்டு பேசினுர்கள்" 2 பேதுரு (1 ; 21) வேதத்தை எழுதிய பரிசுத்த மனுஷர்களை ஏவிய அதே பரிசுத்த ஆவியானவர்தான் வேதத்தை வாசிக்கும் ஒவ்வொரு தேவபிள்ளையின் உள்ளத்தில் வாசம் பண்ணி தேவ ரகசியங்களை வெளிப்படுத்துகிருர். நிச்சயமாகவே, வேதத்தை ஒழுங்கும் சிரமுமாக கற்றுக் கொள்ள விரும் புகிறவர்களுக்கு ஆவியானவருடைய ஒத்தாசை உண்டு.

A. பரிசுத்த ஆவியானவர் உனக்கு செய்யக் கூடிய ஒத்தாசை :-

பரிசுத்த ஆவியானவர், சத்திய ஆவியானவர் என்றும் அழைக்கப்படுவதினால், அவர் நம்மை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்த வல்லமையுள்ளவர் என்று திட்டமாய் அறிந்து கொள்ளலாம். தவறான உபதேசங்களிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ளுபவரும் அவரே!

கள்ளப்போதகர்களைக் குறித்து எச்சரிக்கும்போது: அப்போஸ்தலனாகிய யோவான் எழுதுகிறார், "நீங்கள் பரிசுத்தராலே அபிஷேகம் பெற்றுச் சகலத்தையும அறிந்திருக்கிறீர்கள். சத்தியத்தை நீங்கள் அறியாததினாலல்ல; நீங்கள் சத்தியத்தை அறிந்திருக்கிறதினாலும், சத்தியத்தினால் ஒரு பொய்யும் உண்டாயிராதென்பதை நீங்கள் அறிந்திருக்கிறதினாலும் உங்களுக்கு எழுதியிருக்கிறேன். குமாரனை மறுதலிக்கிறவன் பிதாவையுடையவனல்ல. குமாரனை அறிக்கையிடுகிறவன் பிதாவையும் உடையவனாயிருக்கிறான். நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது. ஒருவரும் உங்களுக்குப் போதிக்க வேண்டுவதில்லை. அந்த அபிஷேகம் சகலத்தையும் குறித்து உங்களுக்குப் போதிக்கிறது. அது சத்தியமாயிருக்கிறது. பொய்யல்ல; அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக." (1 யோவான் 2 : 20, 21, 23, 27).

கவனியுங்கள். அப்போஸ்தலனாகிய யோவான் விசுவாசிகளுக்கு எழுதுகிறார், "நீங்கள் பரிசுத்தராலே அபிஷேகம் பெற்றிருக்கிறபடியால், அடிப்படை உபதேசங்களைப் பற்றி யாரும் உங்களை ஏமாற்றிவிட முடியாது" இதே காரியத்தைத்தான் இயேசுக் கிறிஸ்துவும் சொன்னார். "சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்" (யோவான் 16 : 13).

உண்மையான ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையையும் பரிசுத்த ஆவியானவர் வேத வசனங்கள் மூலமாய்

போதித்து, இயேசுகிறிஸ்து யார் என்பதையும் அவர் பாவிகளுக்காய் உண்மையாய் மரித்தார் என்பதையும், மரித்தோரிலிருந்து எழுந்தார் என்பதையும், பரலோகத்திற்கு ஏறிச் சென்ருர் என்பதையும், மறுபடியும் வருவார் என்பதையும் வெளிப்படுத்துவார்.

என் அருமை நண்பனே, நீ வேதத்தைக் கற்றுக் கொள்ளுவதற்கு பெரிய கல்விமானுய் இருக்க வேண்டும் என்பது அவசியமல்ல; நீ பரிசுத்த ஆவியானவரில் சார்ந்து கொள்ளும்போது, அவர் உனக்கு வேத புத்தகத்திலுள்ள மகிமையான சத்தியங்களை எளிதாக விவரித்துக் காட்டுவார். உன் விசுவாசத்தை உறுதிப்படுத்தும் உபதேசங்கள்; உன் மகிழ்ச்சியை பெருக்கும் வழி முறைகள், வெற்றியான கிறிஸ்துவ ஜீவியம் செய்யும் இரகசியங்கள் எல்லாவற்றையும் உனக்குக் கற்றுக் கொடுப்பார் தாழ்மையான உள்ளத்தோடு, அவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டியது உன்னுடைய கடமை.

B. பரிசுத்த ஆவியானவர் உனக்குச் செய்யக் கூடாத காரியங்கள்

பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசை என்பது குறுக்கு வழியில் வேதத்தைக் கற்றுக்கொள்ளும் மந்திர ஜால வித்தை அல்ல. நீ அவருடைய வழி நடத்துதலுக்காக ஜெபித்து விட்டாய் என்பதற்காக, அவர் உனக்கு வேத வசனங்களில் பண்டியத்தும் தந்துவிட வேண்டும் என்பது அவசியமுமல்ல. ஒவ்வொரு வாரமும் எங்களுக்கு ஏராளமான கடிதங்கள் வருவதுண்டு, சிலர் இப்படி எழுதுவார்கள். இதுவரை யாருக்கும் வெளிப்படாத இரகசியங்களை--யாரும் வியாக்கியானம் செய்யாதப் பகுதிகளை--ஆவியானவர் தங்களுககு வெளிப்படுத்தி விட்டதாகக் கூறிக்கொள்வார்கள். ஆனல் இப்படிக் கூறிக்கொள்ளும் வெளிப்பாடுகளில் பெரும்பாலானவை மற்ற வேத வசனங்களுக்கு முரண்பட்டதாக இருக்கும்! அப்படியானல் யாராவது ஒருவர் தவருய் இருக்க வேண்டும்.

இன்னும் சில புது விசுவாசிகள், தாங்கள் ஆவியானவரின் வழி நடத்துதலுக்காக ஜெபித்து விட்டதால் தாங்கள் எப்பொழுதும் வேத வசனங்களை சரியாகவே வியாக்கியானம் செய்வதாக எண்ணிக் கொள்கிறார்கள் ஆனால் வேதத்தை நன்றாக கற்ற கர்த்தருடைய தாசர்கள் வந்து அவர்களின் குறைகளை வெளிப்படுத்தி, மற்ற வேத வசனங்கள் மூலமாய் தவறை சுட்டிக் காட்டும் போது, அதை இளம் விசுவாசிகள் ஏற்றுக் கொள்வதில்லை. "எனக்கு ஆவியானவர் வெளிப்படுத்தியது இப்படித் தான்" என்று பிடிவாதம் பிடிப்பதுண்டு.

வேத வசனங்களுக்கு ஒவ்வாத விதத்தில், வேதத்திற்கு முரண்பாடாக கர்த்தர் ஒரு போதும் மெல்லிய குரல் மூலமாகவோ, அற்புதங்கள் மூலமாகவோ வெளிப்பாடுகளைத் தருவதில்லை. அப்படி வெளிப்பாடுகளைத் தருவாரென்றால், அவர் வேதத்தை அருளிச் செய்ய அவசியமே இல்லை.

நாம் பின்பற்றக்கூடிய அதிகாரமுள்ள புத்தகம் நமக்குத் தேவை என்றும், அதன் மூலமாக அவருடைய சித்தத்தையும், அவருடைய குரலையும் அறிந்துகொள்ள வேண்டும் என்றும் நமக்கு வேத புத்தகத்தை அருளிச் செய்திருக்கிறார். எனவே வேத புத்தகத்தைக் கண்ணும் கருத்துமாய், அதிலுள்ள சரித்திர சம்பவங்களைக் கவனித்து, ஒவ்வொரு வார்த்தையும் என்ன அர்த்தத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை விளங்கிக் கற்றுக் கொள்ளவேண்டும். எனவே ஒவ்வொரு கிறிஸ்துவனும், வேத வசனத்திலுள்ள மகிமையான சத்தியங்கள் தனது வாழ்க்கையில் உண்மையும், விலையேறப் பெற்றதுமாய் இருக்க பரிசுத்தாவியானவரின் ஒத்தாசைக்காக மன்றாட வேண்டும்.

II வரம் பெற்ற தேவ ஊழியர்களின் ஒத்தாசை :

பரிசுத்தாவியானவரின் உதவியோடுகூட, வரம்பெற்ற தேவ ஊழியர்களின் ஒத்தாசையும் நமக்கு மிகவும் அவசி

யம். புதிய ஏற்பாட்டில் பரிசுத்தாவியானவர் பரிசுத்தவான்களுக்கு போதிக்கிற வரத்தைக் கொடுத்து அவர்களை உபயோகிக்கிறதை அறிந்துகொள்ளலாம். மட்டுமல்ல உத்தமமான போதகர்களுக்கும் கள்ள போதகர்களுக்குமுள்ள வித்தியாசத்தையும் வேதம் வரையறுக்கிறது. மட்டுமல்ல; கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டு, தெரிந்துக் கொள்ளப்பட்ட போதிக்கிற வரமுடைய தேவ தாசர்கள் நம் கவனத்திற்குரியவர்களாவார்கள்.

A. போதகர்களைக் குறித்த தேவ திட்டம் :

அப்போஸ்தலர் நடபடிகள் முழுவதையும் நீங்கள் வாசித்துப் பாருங்கள் ; வேத சத்தியங்களை மற்றவர்களுக்கு எடுத்துரைத்த போதகர்களை ஏராளமாய் அங்கே காண்கிறோம். பிலிப்பு ஒரு போதகர். எத்தியோப்பியா மந்திரி தன் ரதத்தின்மேல் உட்கார்ந்து கொண்டு ஏசாயா 53 ஆம் அதிகாரத்தை வாசித்தும், புரிந்து கொள்ள முடியாமற் தவித்த போது உடனே பிலிப்பு போய் அதை அவருக்கு விளங்கச் செய்து இயேசுவைப் பற்றி போதித்தார் அப் (8 : 26–40).

அப்பல்லோ என்ற பிரசித்திப் பெற்ற வேத பண்டிதருக்குக்கூட போதனை அவசியமாயிருந்தது! ஆக்கில்லா பிரஸ்கில்லா வேதத்தை அதிகத் திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காட்டினார்கள். இதனால் அப்பல்லோவால் இன்னும் வல்லமையாய் பிரசங்கிக்க முடிந்தது.

(அப் 18 : 24-28)

பவுல் அப்போஸ்தலன் எழுதுகிறார் "மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமனப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத் தக்க பூரண புருஷராகும் வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்திருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர் சிலரை அப்போஸ்தலராகவும்,

சிலரைத் தீர்க்கத்தரிசிகளாகவும், சிலரை சுவிசேஷகராக வும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத் தினர்" (எபேசியர் 4 : 11-13).

போதிக்கிற ஊழியம் எவ்வளவு அவசியமானது என்பதை உணர்ந்த பவுல், தீமோத்தேயுக்கு எழுதும் போது. "அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத் தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி". (2 தீமோ 2 : 2) என்று கட்டளை கொடுக்கிருர்.

ஆகவே, தேவன் நாம் தெரிந்துகொள்கிற சிலருக்கு சபையிலே போதிக்கிற வரத்தைத் தந்தருளுகிருர் என்பதை நாம் அறிந்துகொள்ளலாம். உள்ளத்தில் வாசம் பண்ணுகிற அதே ஆவியானவர், போதகர்களைக் கொண்டு வேத சத்தியங்களின் உண்மையை உனக்கு வெளிப் படுத்துகிருர் ; விபரீத உபதேசங்களை விட்டு விலகும்படி உன்னை எச்சரிக்கிருர். எனவே தேவனுடையபிள்ளையே நீ ஒருபோதும் போதகர்களின் ஒத்தாசையை அலட்சியம் பண்ணி, சுயாதீனமாய் கற்றுக்கொள்வேன் என்று சொல் லாதே! ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ந்த ஒவ்வொரு கிறிஸ்தவனும் தான் கேட்ட பிரசங்கங்கள்; தான் வாசித்த புத்தகம் தன் வாழ்க்கைக்கு மிகவும் பிரயோஜனமாய் இருந்தது என்பதை ஒப்புக்கொள்வான். உண்மையா கவே, எனக்கு போதித்த என் தகப்பனுருக்கும், மற்ற வேதாகம ஆசிரியர்களுக்கும் மிகவும் கடமைப்பட்டுள் ளோன்.

ஆம் ; மெய்யாகவே, தேவன் சபைகளிலே போதகர் களையும் மேய்ப்பர்களையும் ஏற்படுத்தியிருக்கிருர், அவர் களை ஏற்றுக்கொள்ள மறுக்கும் ஒவ்வொருவரும் தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தின் முன்னேற்றத்தைத் தாங்க ளாகவே பாழ்ப்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

உத்தம போதகர்களின் குணுதிசயங்கள் :

ஒவ்வொரு வேதாகம மாணவனும் அடிக்கடி கேட்கிற கேள்வி ஒன்றுண்டு. "உத்தமமான, நம்பகரமான, பின்

பற்றக்கூடிய போதகரைக் கண்டுகொள்வது எப்படி?" என்பதே அந்தக் கேள்வி.

நான் சத்தியத்தைப் போதிக்கிறேன் என்று ஒருவன் சொல்லும் வெறும் வார்த்தைகளினால் அவன் சத்தியத்தைப் போதிக்கிறவனாகிவிட முடியாது. தங்களைக் குறித்து மிக உறுதியாகச் சொல்லும் சிலர்கூட, நம்மை வழி விலக்கி கொண்டு சென்றுவிடக்கூடும். வேதத்தைக் கவனிப்போமாக! வேதம் உத்தம போதகர்களையும், கள்ளப் போதகர்களையும் அடையாளம் கண்டுகொள்ளும் வழி முறைகளை நமக்குப் போதிக்கிறது. கள்ளப் போதகன் கிறிஸ்துவைப் பற்றிய உபதேசங்களை மறுதலிப்பான். கிருபையினாலும், விசுவாசத்தினாலும் கிடைக்கும் இரட்சிப்பை ஏற்றுக்கொள்ளமாட்டான். இயேசுக்கிறிஸ்து தேவக்குமாரன் என்பதை ஒப்புக்கொள்ளமாட்டான். இரட்சிக்கப்படுவதற்கு வேறு புதிய வழி முறைகளையெல்லாம் சொல்லுவான்.

அப்போஸ்தலனாகிய யோவான் கள்ளப் போதகர்களைக் குறித்து எச்சரித்து எழுதுகிறார்: "இயேசுவைக் கிறிஸ்து அல்ல என்று மறுதலிக்கிறவனேயல்லாமல் வேறே யார் பொய்யன்? பிதாவையும் குமாரனையும் மறுதலிக்கிறவனே அந்திக்கிறிஸ்து. குமாரனை மறுதலிக்கிறவன் பிதாவையுடையவனல்ல; குமாரனை அறிக்கையிடுகிறவன் பிதாவையும் உடையவனாயிருக்கிறான்" (1 யோவான் 2 : 22, 23).

சற்றே சிந்தியுங்கள் கள்ளப் போதகன் பிதாவையும், குமாரனையும் மறுதலிக்கிறவன். திருத்துவத்தில் பிதாவும், குமாரனும் சமத்துவமாய் இருக்கிறார்கள் என்பதை ஒப்புக்கொள்ள மறுப்பவர்கள்! அப்போஸ்தலனாகிய யோவான் காலத்திலிருந்த ஒரு கூட்டத்தார் இவ்விதமாய் திருத்துவத்தை மறுதலித்து வந்தனர். அவர்கள் சொன்னார்கள், பிதாவாகிய தேவனை நாங்கள் விசுவாசிக்கிறோம். அவரிலிருந்து தான் இயேசுக்கிறிஸ்து புறப்பட்டார்

என்றும் நம்புகிறோம். ஆனால் இயேசுக்கிறிஸ்து தெய்வீகமாகவும் அதேநேரம் மனுஷீகமாகவும் இருந்தார் என்பதை மறுக்கிறோம் என்றார்கள். அவர்கள் கிறிஸ்துவின் பாடு, மரணம், உயிர்த்தெழுதலில் நம்பிக்கை வைக்கிறதில்லை.

சாத்தான் ஒரு குழப்பவாதி. அநேகர் தங்களை பெரிய பக்திமான்கள் போல் காண்பித்துக் கொண்டு, அதே நேரம், கிறிஸ்துவின் தெய்வீகத்தை ஒப்புக்கொள்ளாமல் குழப்புகிறார்கள்.

ஆதித் திருச்சபையின் சரித்திரத்தை எடுத்துப் பார்க்கும் போது, அநேக கள்ள உபதேசங்களைப் போதிக்கிறக் கூட்டங்கள், கள்ளப் போதகர்கள் இருந்தார்கள் என்று அறியலாம். இவர்கள் கிறிஸ்துவைப் பற்றியும் அவரது ஊழியத்தைப் பற்றியும் தவறான கொள்கைகளைப் போதித்தனர்.

அதே நேரத்தில் கிறிஸ்துவின் தெய்வீகத்தில் முழு நம்பிக்கைக் கொண்ட அநேக பக்தர்களையும், போதகர்களையும் கர்த்தர் எழுப்பினர். "என் ஆண்டவரே, என் தேவனே" என்று தோமா அழைத்தது போல கர்த்தரை மெய்யன்போடு இந்தப் போதகர்கள் அழைத்து வந்தனர். (யோவான் 20 : 28). அவர்கள் ஒருபோதும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் சந்தேகப்பட்டதில்லை.

தேவப்பிள்ளையே, இப்படிப்பட்ட போதகர்களையே நீ தேடிக் கண்டுபிடி. அவர்கள் கிறிஸ்துவின் தெய்வீகத்தையும், மனுஷீகத்தையும் விசுவாசிக்கிறவர்களாக இருக்கட்டும். அவர்கள் கிறிஸ்துவின் பலியை விசுவாசித்து, கிறிஸ்து நம் பாவங்களுக்காக மரித்து, கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டு, மகிமையோடு பரலோகத்திற்கு எழுந்து சென்றார் என்று அறிக்கையிடுகிறவர்களாக இருக்கட்டும்.

கள்ளப் போதகனே, 'கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்' என்ற வசனத்தை

ஏற்றுக்கொள்வதில்லை. சிலர் இரட்சிக்கப்பட வேண்டுமானால் யூதருடைய பண்டிகைகளை அனுசரிக்க வேண்டும் என்றும், சிலர் ஏழாம் நாளை அனுசரிக்க வேண்டும் என்றும் தவறாக போதிப்பார்கள். இரட்சிக்கப்படுவதற்கு சடங்காச்சாரங்களையும், பாரம்பரியங்களையும் கொண்டு வருகிறவன் கர்த்தருடைய ஊழியன் அல்ல, அப்போஸ்தலனாகிய பவுல் எச்சரிக்கிறார்.

" ஆகையால் போஜனத்தையும் பானத்தையுங் குறித்தாவது, பண்டிகை நாளையும் மாதப் பிறப்பையும், ஓய்வு நாட்களையுங் குறித்தாவது ஒருவனும் உங்களைக் குற்றப் படுத்தாதிருப்பானாக" (கொலோ 2 : 16).

அப்போஸ்தலனாகிய யோவானுங்கூட, சுவிசேஷத்தோடுக்கூட தந்திரமாய் இணைக்கப்படும் சகலவிதமான சடங்காச்சாரங்களையும் தள்ளிவிட்டு, விசுவாசிகள் தாங்கள் ஆதியிலே அறிந்து கொண்டவற்றில் உறுதியாய் இருக்க வேண்டும் என்று ஆலோசனை சொல்கிறார். "ஆகையால் ஆதிமுதல் நீங்கள் கேள்விப்பட்டது உங்களில் நிலைத்திருக்கக் கடவது; ஆதிமுதல் நீங்கள் கேள்விப்பட்டது உங்களில் நிலைத்திருந்தால், நீங்களும் குமாரனிலும், பிதாவிலும் நிலைத்திருப்பீர்கள்"

(I யோ 2 : 24).

அப்போஸ்தலர் நடபடிகளையும், பவுல் அப்போஸ்தலனின் நிருபங்களையும் வாசித்துப் பாருங்கள். இரட்சிப்பை விசுவாசத்தினால் மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும் என்பதை அறிந்து கொள்ளுவீர்கள். எத்தியோப்பிய மந்திரி, ஏசாயா 53 ஆம் அதிகாரத்தின் விளக்கத்தை பிலிப்புவின் மூலம் கேட்டபோது உடனேதான் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று விரும்பினார் அதற்கு பிலிப்பு, " நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லை" என்றான். (அப் 8 : 37).

பிலிப்பியப் பட்டணத்து சிறைச்சாலை அதிகாரி பவுலப்போஸ்தலனிடம் கேட்டார், "ஆண்டவமாரே,

இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்? என்ருர். அதற்கு அவர்கள் மறுமொழியாக, " கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் " என்ருர்கள்.

(அப் 16 : 30, 31)

சில ஆண்டுகள் கழித்து ரோமாபுரி விசுவாசிகளுக்கு பவுல் அப்போஸ்தலன் எழுதும்போது, " இவ்விதமாக நாம் விசுவாசத்தினுலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிற படியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறேம்" (ரோமர் 5 : 1) என்று குறிப்பிடுகிருர்.

கர்த்தருடைய உண்மையான போதகன், இயேசுக் கிறிஸ்துவின் தெய்வீகத்தையும், அவர் சிலுவையிலே நமக்குப் பதிலாக மரணத்தை சந்தித்ததையும், பின்பு உயிரோடு எழுப்பியதையும் முழுவதுமாய் விசுவாசிப் பான், மட்டுமல்ல அவன், "கிருபையினுலே விசுவாசத் தைக் கொண்டு மட்டுமே மனிதன் இரட்சிக்கப்பட முடியும்; மற்றபடி சடங்காச்சாரங்களால் அல்ல" என் பதையும் திட்டமாய்ப் போதிப்பான்.

C. போதகர்களைப் பற்றிய சரியான கருத்து

" வேதத்தைக் கற்றுக் கொடுக்க தேவ வரம் பெற்ற ஊழியர்களிடம் நான் எவ்விதமாய் நடந்துகொள்ள வேண்டும்?" என்ற கேள்வி நம் உள்ளத்தில் எழக்கூடும். நிச்சயமாகவே அப்படிப்பட்ட ஊழியர்களுக்காக கர்த் தருக்கு நாம் நன்றி செலுத்துகிறது மட்டுமல்ல; நம்மு டைய ஜெபங்களிலெல்லாம் அவர்களை நினைவுகூற வேண்டும் பவுல் அப்போஸ்தலன் எழுதுகிருர், " நன்ருய் விசாரணை செய்கிற மூப்பர்களை, விசேஷமாகத் திருவச னத்திலும், உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்களை, இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராக எண்ண வேண் டும்" (1 தீமோ 5 : 17) என்று ஆலோசனை சொல்கிருர்.

இதனால் வேதத்தைப் போதிக்கிறவர்கள் எல்லாவற்றிலும் கொஞ்சமும் பிசகாதவர்களாக, முற்றிலும் சரியான கருத்தையே எப்பொழுதும் கொடுக்கிறார்கள் என்று எண்ண வேண்டியதில்லை. எவ்வளவுதான் வரம் பெற்ற உண்மையான போதகர்களும்கூட, அடிப்படை வேத சத்தியங்களிலும் உறுதியாயிருந்தாலும், சில வேத வசனங்களை வியாக்கியானஞ் செய்யும்போது தவறிவிட ஏதுவுண்டு. எனவே நீங்கள் வேதத்தைக் கற்றுக்கொள்ளும்போது, ஒன்றுக்கொன்று முரண்பட்ட வேத போதகர்களின் கருத்துக்களை ஆராய்ந்து பாருங்கள். பல மொழி பெயர்ப்புகளை வாசித்துப் பாருங்கள், நல்ல வேத அகராதியின் கருத்து என்ன என்று சிந்தியுங்கள். ஒத்து வாக்கியங்கள் என்ன சொல்கிறது என்று சீர்தூக்கிப் பாருங்கள். அதன் பின்பே ஒரு முடிவுக்கு வாருங்கள். உங்கள் முடிவை சபையிலுள்ள மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள். உங்கள் கருத்தை மற்றவர்கள் ஏற்றுக் கொள்ளாவிட்டால் உடனே அவர்கள் எல்லாம் அறிவில்லாதவர்கள் என்றும் உத்தமர்கள் அல்ல என்றும் தீர்மானித்துவிடாதிருங்கள். ஒன்றை ஞாபகத்தில் வையுங்கள். ஆதித்திருச்சபையின் நாட்களில்கூட அப்போஸ்தலர்கள் மத்தியில் கருத்து வேறுபாடுகள் இருந்ததல்லவா?

நீங்கள் வேதத்தை தாழ்மையுள்ள இருதயத்தோடும், கற்றுக்கொள்ளும் வாஞ்சையோடும் படிக்கும் போது நிச்சயமாகவே, கிறிஸ்து இயேசுவின் கிருபையிலும் அறிவிலும் வளருவீர்கள்! தேவன் உங்களில் எதிர்பார்க்கிறபடி கிறிஸ்து இயேசுவின் சாயலில் மறுரூபமாவீர்கள்!

அத்தியாயம் 3

வேதத்தை எழுத்தின்படியே வியாக்கியானஞ் செய்தல்!

வேத புத்தகத்தில் ஒரு சில வசனங்களை ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் வியாக்கியானஞ் செய்யும்போது குழப்பமடையும் இளம் மாணவர்கள், "வேத கல்வியே வேண்டாம்" என்று சோர்ந்துபோய் விடுவ

துண்டு. ஒருவர் கொடுக்கும் விளக்கம் சரிதான் என்று மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளும் போது, இன்னொருவர் வந்து அந்த விளக்கம் தவறு என்று வாதிட்டு, தன் வாதத்திற்காக பல்வேறு வசனங்களைக் காண்பிக்கக்கூடும். இதனுல் புதிதாக வேதத்தைக் கற்றுக் கொள்பவர்கள் தடுமாறுகிருர்கள்.

நாம் தடுமாறும்படி கர்த்தர் ஒருபோதும் விட்டுவிடுகிறவரல்ல! நாம் குழப்பமடையவா அவர் வேத புத்தகத்தை அருளிச்செய்தார்? வேதம் சந்தேகத்திற்குரியதாய் இருந்தால், அவர் வெளிப்படுத்தல்களை திட்டமாய் எழுதியிருந்திருக்க மாட்டாரே!

வேதம் என்னப் போதிக்கிறது என்பதை நீ திட்டமாய் அறிந்து கொள்ளலாம். அதை வாசிக்கும்போது முக்கியத்துவம் வாய்ந்த அதிகாரமுள்ள புத்தகமாக வாசிக்க வேண்டும். யாருக்கும் புரியாத பாஷையில் பல ரகசியக் குறிகளோடு, ஒரு சில கல்விமான்களே வாசித்தறியும்படி எழுதப்பட்ட புத்தகம் அல்லவே!

அதில் எழுதப்பட்டவைகள் எல்லாம் உண்மையாய் நடந்த சம்பவங்கள், அந்த நாட்களில் தங்களோடுள்ள மற்றவர்கள் புரியும்படி பேசியவைகள்தான். எந்த மனுஷனும் தன் சொந்தப் பொது அறிவினுல் அதை வாசித்துத் தெரிந்து கொள்ளலாம். எழுத்தின்படியே உள்ளதான அர்த்தத்தை ஏற்றுக் கொள்வது எப்பொழும் நல்லது!

1. எழுத்தின் படியான வியாக்கியானம் :-

வசனம் என்ன சொல்கிறதோ அதை அப்படியே ஏற்றுக் கொள்வதுதான் எழுத்தின்படியான வியாக்கியானம்; ஒரு சில வேளைகளில்தான் எழுத்தின்படி வியாக்கியானஞ் செய்ய முடியாமல் இருக்கும். ஒருவர் மிகவும் சரியாகச் சொன்னுர். "எழுத்தின் படியாக வேத வசனம் அழகாக விளங்கும் என்ருல், வேறு அர்த்தத்திற்காக குழம்பிக் கொண்டிராதே, அது அர்த்தமற்றதாகிவிடும்".

இந்தத் தத்துவத்தை என் தகப்பனுர் ஒரு முறை ஏசாயா 11 : 6 – 9 வரையுள்ள வசனங்களின் மூலம்

விளக்கினர். முழு இயற்கையும் மறுமலர்ச்சியடையும் காலத்தைப் பற்றி இந்த வசனங்கள் சொல்லுகின்றன.

என் தகப்பனார் கொடுத்த விளக்கம், "இந்த வசனங்கள் இயேசுக்கிறிஸ்து தமது ராஜ்யத்தை பூமியிலே ஸ்தாபிக்கும் காலத்தில் இருக்கும் பூமியின் நிலையை வர்ணிக்கிறது. ஆனால் சிலர் இதை வாசித்துவிட்டு ஓநாய் என்பது எழுத்தின்படியுள்ள ஓநாய் அல்ல, அதற்கு ஏதோ ஒரு அர்த்தம் உண்டு, ஆட்டுக்குட்டிக்கு வேறு ஒரு அர்த்தம் உண்டு, சிங்கத்திற்கு வேறுபல அர்த்தங்கள் உண்டு ஒன்று விநோத விளக்கங்களைத் தருகின்றனர், சிலர், "ஓநாய் என்பது கிறிஸ்தமார்க்கத்தின் ஒரு சபைப்பிரிவு. இது ஆட்டுக்குட்டியைப் போன்ற மற்ற கிறிஸ்தவ சபைப்பிரிவோடு சமாதான உடன்படிக்கை செய்யும்" என்று வியாக்கியானப் படுத்துகிறார்கள். இப்படி மனம்போன போக்கில், வியாக்கியானஞ் செய்தால் நான் ஓநாய் என்பது அமெரிக்கா என்றும், சிங்கம் என்பது இங்கிலாந்து என்றும், கரடி என்பது ரஷ்யா என்றும் சொல்லிவிட்டு, இவைகளெல்லாம் ஒன்றுக்கொன்று சமாதானம் செய்து கொள்ளும் என்று முடிக்கலாமே! ஒவ்வொருவரும் விதம் விதமான, விநோதமான ஆவிக்குரிய வியாக்கியானஞ் செய்தால் அதற்கு முடிவே இல்லாமற் போய்விடும். எழுத்தின்படியே வியாக்கியானஞ் செய்யுங்கள் எளிதான முறை அதுதான். 'இயேசுக்கிறிஸ்து தமது ராஜ்யத்தை பூமியிலே ஸ்தாபிக்கும் போது, மிருகங்கள்கூட ஒன்றுக்கொன்று சமாதானமாய் இருக்கும்; பட்சிக்கிற தங்கள் சுபாவத்தை விட்டுவிட்டு தீங்கற்ற பிராணிகளாய் இருக்கும். ஒன்றுக்கொன்று இணைந்துவாழும்; பயமற்றிருக்கும்" – எழுத்தின்படியான இந்த வியாக்கியானம் எவ்வளவு அருமையாயிருக்கிறது பார்த்தீர்களா?

நான் முன்பு சொன்னபடியே, தேவபகுதியை வசித்தவுடன் எளிதாய் புரிந்து கொள்ளக் கூடியதாயிருந்தால் அதை எழுத்தின்படியே அப்படியே எடுத்து கொள்ளுங்

கள். சில சமயங்கள் உவமைகளும் வருவதுண்டு, உதாரணமாக மத்தேயு 23 : 14 ஆம் வசனத்தை எடுத்துக் கொள்ளுங்கள் இயேசு பரிசேயரைப் பார்த்து, "நீங்கள் விதவைகளின் வீடுகளை பட்சித்துப் போடுகிறீர்கள்" என்ருர். நாமெல்லோருக்கும் தெரியும் வீட்டிலுள்ள ஆணிகளையும், சுவர்களையும் மனுஷனுல பட்சித்துப் போட முடியாது என்று, இதை எழுத்தின்படி அல்லாமல் இங்கே உவமையாக கர்த்தர் பேசுகிருர். பரிசேயர்கள் விதவைகளின் வீடுகளை எவ்விதம் கொள்ளையடித்து ஏமாற்றி தங்கள் வசதிகளைப் பெருக்கிக் கொள்கிருர்கள் என்று அர்த்தம்பட சொல்லியிருக்கிருர், எழுத்தின்படி யுள்ள அர்த்தம் சரியாய் இருந்தால் வசனத்தை எழுத்தின் படி அப்படியே ஏற்றுக் கொள்ளுங்கள்.

II. எழுத்தின்படியான வியாக்கியானமும் தீர்க்கத் தரிசனமும் :

பழமையை விரும்பும் ஒவ்வொரு வேத மாணக்கர் களும் எழுத்தின்படியான வியாக்கியானத்தை அப்படியே ஏற்றுக்கொள்வார்கள். ஆனுல் தீர்க்கத் தரிசன வசனங் களை வியாக்கியானஞ் செய்யும் போதுதான் தடுமாறு வார்கள். இஸ்ரவேல் ஜனங்கள் கிறிஸ்துவை புறக் கணித்து விட்டதால் கர்த்தர் இஸ்ரவேலுக்குக் கொடுத்த தீர்க்கத் தரிசனங்களை நிறைவேற்றவில்லை என்று அவர்கள் எண்ணுகிருர்கள். ஆகவே அவர்கள் நினைக் கிருர்கள், இயேசுக் கிறிஸ்துவின் ஆயிர வருட அரசாட்சி யில், இஸ்ரவேலர் வருவதற்குப் பதிலாக புதிய ஏற்பாட்டு சபையே வரும் என்று புதிய வியாக்கியானத்தைக் கொண்டு வருகிருர்கள். இப்படியெல்லாம் சிந்திக்க ஆரம்பித்தால் வேத புத்தகத்திலுள்ள மாபெரும் தீர்க்கத் தரிசனங்கள் எல்லாம் ஒன்றுமில்லாமல்—அர்த்தமில்லா மல் போய்விடும்.

எழுத்தின்படியே வியாக்கியானஞ் செய்யும் போது தான் தீர்க்கத் தரிசனங்களின் முழு பலனையும் நாம்

பெற்றுக்கொள்கிறோம். இரண்டு எளிய விதி முறைகளை நாம் கற்றுக் கொள்வது நல்லது. ஒன்று "இடைவெளி விதி" (Gap Principle) மற்றது "இரட்டிப்பான குறிப்பு விதி" (Law of Double reference).

இடைவெளி விதி என்றால் என்ன? பழைய ஏற்பாட்டு தீர்க்கத் தரிசிகள் பிற்காலத்தில் சம்பவிக்கப் போகும் ஒன்றிற்கு மேற்பட்ட பல நிகழ்ச்சிகளை ஒரே தீர்க்கத் தரிசனத்தில் சொல்லி விடுவதுண்டு, ஆனால் அவைகள் பல ஆண்டு இடைவெளிகளில் நிறைவேறக் கூடியதாக இருக்கும். ஒரு மனிதன் மிகத் தூரத்திலிருந்து இரண்டு மலைகளைப் பார்க்கும் போது இரண்டும் ஒன்றுக்கொன்று இணைந்திருப்பதைப் போல காண்கிறான் ஆனால் அருகில் சென்று பார்க்கும் போதுதான் அவை ஒன்றுக்கொன்று பல ஆயிரம் மைல் தொலைவில் இருக்கிறது என்பதைக் கண்டுகொள்ள முடியும். அதே போல பழைய ஏற்பாட்டுத் தீர்க்க தரிசிகள் கிறிஸ்துவின் முதலாம், இரண்டாம் வருகையை ஒன்று போல் வெளிப்படுத்தி விடுவதுண்டு. ஆனால் அவைகளுக்கு இடையிலிருக்கும் சபையின் காலத்தை அறியாமல் விட்டு விடுகிறார்கள். உதாரணமாக லூக்கா 4 : 17-20 வரையுள்ள வசனங்களை எடுத்துக் கொள்ளுங்கள். யூத ஜெப ஆலயத்தில் இயேசுகிறிஸ்து ஏசாயா 61 ஆம் அதிகாரத்தை எவ்விதமாக வாசித்தார் என்பதை லூக்கா எழுதி வைத்திருக்கிறார். இயேசுக் கிறிஸ்து ஏசாயா 61 ஆம் அதிகாரத்தின் முதலாம் வசனத்தையும் இரண்டாம் வசனத்தின் முன் பகுதியாகிய, "கர்த்தருடைய அனுக்கிரக வருஷத்தைப் பிரசித்திப் படுத்தவும் என்னை அனுப்பினார்" என்பதையும் வாசித்து விட்டு நிறுத்தினார். ஆனால் அவர் தொடர்ந்துவரும் பகுதியை வாசிக்கவில்லை. "நம்முடைய தேவன் நீதியைச் சரிகட்டும் நாளை" அப்படியே விட்டுவிட்டார். காரணம் அது இரண்டாம் வருகையில் நிறைவேறும் சம்பவத்தைப் பற்றியது. ஏசாயாத் தீர்க்கத்தரிசி தன் தீர்க்கத்தரிசனத்தில் முதலாம் வருகைக்கும் இரண்டாம் வருகைக்கும்

இடையிலுள்ள இடைவெளியை சரியாக வித்தியாசப் படுத்தவில்லை.

சரி; "இரட்டிப்பான குறிப்பு வழி" என்றால் என்ன? ஏறக்குறைய இதுவும் இடைவெளி விதியைப் போன்றதே! சில வேளைகளில் தீர்க்கதரிசி ஒரே ஒரு சம்பவத்தை முன் அறிவிக்கிறதுபோல தீர்க்கதரிசனம் உரைப்பார். ஆனால் அது வருங்காலத்தில் நிறைவேறப்போகும் இரண்டு திட்டமான சம்பவங்களாய் இருக்கும்; முதலில் ஒரு பகுதி நிறைவேறும்; பிற்பாடு முழு நிறைவேறுதல் இருக்கும்.

உதாரணமாக அப்போஸ்தலர் 2 ஆம் அதிகாரத்தை எடுத்துக் கொள்வோம். ஏறக்குறைய 800 ஆண்டுகளுக்கு முன் உரைக்கப்பட்ட தீர்க்கத் தரிசனத்தைப்பற்றி பெந்தேகோஸ்து நாளில் பேதுரு பேசுகிறார். "தீர்க்கத் தரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்ட படியே இது நடந்தேறுகிறது. கடைசி நாட்களில் நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன். அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கத் தரிசனம் சொல்லுவார்கள். உங்கள் வாலிபர் தரிசனங் களை அடைவார்கள். உங்கள் மூப்பர் சொப்பனங்களைக் காண்பார்கள். என்னுடை ஊழியக்காரர் மேலும் என்னுடைய ஊழியக்காரிகள் மேலும் அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன். அப்பொழுது அவர்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள் அல்லாமலும் உயர வானத்திலே அற்புதங்களையும், தாழப் பூமியிலே இரத்தம், அக்கினி, புகைக்காடாகிய அதிசயங்களையும் காட்டு வேன். கர்த்தருடைய பெரிதும் பிரகாசமுமான நாள் வருமுன்னே சூரியன் இருளாகவும், சந்திரன் இரத்த மாகவும் மாறும்" (அப் 2 : 16-20).

இதை வாசிக்கும் போதே உடனே நாம் கண்டு கொள்கிறோம், யோவேல் தீர்க்கதரிசியின் தீர்க்கதரி சனம் முழுவதும் பெந்தேகோஸ்தே நாளில் அன்று நிறை

வேறி விடவில்லை! ஏனெனில் அன்று சூரியன் இருளாக மாறவும் இல்லை, சந்திரன் இரத்தமாகவுமில்லை. பரிசுத் தாவி ஊற்றப்படும் என்ற பகுதி வரைக்கும் தீர்க்கத் தரிசனம் நிறைவேறியது. மீதியுள்ளவை கிறிஸ்துவின் இரண்டாவது வருகையின்போது நிறைவேற வேண்டும்.

எனவே தேவனுடைய பிள்ளையே, நீ தீர்க்கத்தரிசனங் களைக் கற்றுக் கொள்ளும்போது, ஏற்கனவே நிறைவேறி விட்ட பகுதிக்கும், வருங்காலத்தில் நிறைவேறப்போகும் பகுதிக்கும் இடையில் உள்ள வேறுபாடுகளை அறிந்து கொள். இடைவெளி விதியையும், இரட்டிப்பாக நிறை வேறும் விதியையும் கவனித்துக் கற்றுக்கொள். அப் பொழுது தீர்க்கத்தரிசன பகுதிகளை மிகவும் தெளிவாக புரிந்து கொள்வாய்.

III. எழுத்தின் படியான வியாக்கியானமும் குறியீடு களும் :

வேதத்தை எழுத்தின் படியாக வியாக்கியானப்படுத் தும் அதே நேரத்தில் வேதத்தை கையாளப்பட்டிருக்கும் குறியீடுகளையும் (Symbols) நாம் மறந்துவிடக் கூடாது; அலட்சியம் செய்யக் கூடாது. குறியீடுகளைக் கண்டு கொள்வது அவ்வளவு கடினமானதுமல்ல. உதாரணமாக தானியேல் தீர்க்கத்தரிசனம் 2 ஆம் அதிகாரத்தில் நேபுகாத்நேச்சாரின் சொப்பனமும், அதற்கு அர்த்தமும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

நேபுகாத் நேச்சார் கண்ட சொப்பனம் இன்னதென் பதையும் அதன் அர்த்தத்தையும் கர்த்தர் தானியேலுக்கு வெளிப்படுத்தினர். நேபுகாத் நேச்சார் ஒரு பெரிய சிலை யைக் கண்டார். அதன் தலை பொன்னால் செய்யப்பட் டிருந்தது. அதன் மார்பும் புயங்களும் வெள்ளியினால் செய்யப்பட்டிருந்தன. வயிறும் தொடையும் வெண்கலத் தாலும், கால்கள் இரும்பினாலும் செய்யப்பட்டிருந்தன. கையினால் பெயர்க்கப்படாத ஒரு கல் உருண்டு வந்து அந்த முழுச் சிலையையும் மோதியடித்து உடைத்தது.

அந்த சொப்பனத்தோடுகூட அர்த்தத்தையும் தானியேல் வியாக்கியானஞ் செய்தார்.

பொன், வெள்ளி, வெண்கலம், இரும்பு யாவும் ஒன்றன்பின் ஒன்ருக வரும் வல்லரசு நாடுகளான பாபிலோன், பெர்சியா, கிரேக்கு, ரோம சாம்ராஜ்யங்களாம். எழுத்தின்படியான வியாக்கியானம், குறியீடுகளால் கண்ட நேபுகாத் நேச்சாரின் சிலையை ஒருபோதும் மறுக்கவில்லை. அந்த நான்கு உலோகங்களும் சரித்திரத்திலுள்ள நான்கு சாம்ராஜ்யங்களைக் குறிக்கிறதாய் இருக்கிறது.

சிலர் ஒருவேளை வாதிடலாம். தானியேல் 2 ஆம் அதிகாரத்திலுள்ள இந்த குறியீடுகள் நான்கு தேசங்களைக் குறிக்கிறதென்ருல் ஏசாயா 11 ஆம் அதிகாரத்திலுள்ள ஓநாய், சிங்கம், கரடி ஏன் மூன்று தேசங்களைக் குறிக்கக் கூடாது என்று கேட்கலாம். ஆனுல் இந்த வாக்குவாதம் அர்த்தமற்றது! ஏனென்ருல் நான் முன்பே சொன்னேன், எழுத்தின்படியாக உள்ள அர்த்தம் உடனே புரிகிறதாய் இருக்குமென்ருல் அதற்கு வேறு விதமான வியாக்கியானங்கள் தேவையில்லை என்று! ஏசாயா 11 ஆம் அதிகாரத்தை வாசிக்கும் போதே நமக்கு நன்ருக புரிகிறது. ஆயிர வருட அரசாட்சியில் மிருகங்களின் சுபாவங்கள் மாறி, அவைகள் ஒன்றை ஒன்று அழிப்பதில்லை; தீங்கு செய்வதில்லை, என்பது உடனே விளங்குகிறது. ஆனுல் நேபுகாத் நேச்சார் கண்ட சிலையின் உலோகங்களை வியாக்கியானப்படுத்தாமல் நம்மால் புரிந்துகொள்ள முடியாது. மட்டுமல்ல, அந்த அதிகாரத்தில்தானே அந்த வியாக்கியானமும், குறியீடுகளின் அர்த்தமும் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

ஒரு உண்மையை எளிதாக உணர்த்த உவமைகளும், குறியீடுகளும் மிகவும் அவசியம். இயேசுக் கிறிஸ்துவைப் பற்றியும், அவரது ஊழியத்தைப் பற்றியும் மிக அழகாக, தெளிவாக, "நல்ல மேய்ப்பன்", "தேவாட்டுக்

குட்டி" என்ற குறியீடுகளின் மூலம் அறிந்துகொள்ளலாம். ஆனாலும் நாம் அனைவரும் அறிவோம், அவர் எழுத்தின்படி இடையனோ, அல்லது ஆட்டுக் குட்டியோ அல்ல என்பதை!

இயேசுக் கிறிஸ்து ராஜாதி ராஜாவும் கர்த்தாதி கர்த்தாவுமாய் மீண்டும் பூமிக்கு வருவதை வெளி, 19 ஆம் அதிகாரம் மிக அழகாக நமக்கு படம் பிடித்துக் காட்டுகிறது. பரலோக சேனைகளோடு வெள்ளைக் குதிரையின் மீது ஏறி அவர் வருவதாக யோவான் காண்கிறார். இவைகள் எல்லாம் குறியீடுகளும், உவமானங்களுமே! இந்த வியாக்கியானம் உண்மைக்கு முரண்பட்டதல்ல. அவர் எழுத்தின்படியே வெள்ளைக் குதிரைமீது ஏறிவரா விட்டாலும்கூட; அவர் வல்லமையான ஜெயவீரனாய் தன் மகிமையான தூதர்களோடு வருவது உண்மையிலும் உண்மை. இயேசு வரும்போது மனிதன் கண்டு பிடித்துள்ள எல்லா போக்குவரத்து சாதனங்களைக் காட்டிலும் அதிக வேகமாய் தன் மகிமையோடு வரமுடியும் என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வார்கள். ஆகையால் விண்வெளியிலிருந்து எழுத்தின்படியான குதிரையின் மேல் ஏறிவர வேண்டிய அவசியமில்லை.

குறியீடுகளின் அர்த்தத்தைக் கண்டு பிடிப்பது வேறு ஆவிக்குரிய வியாக்கியானஞ் செய்வது வேறு. குறியீடுகள் அர்த்தத்தைக் கண்டு பிடிக்க குறிக்கப்பட்ட விதி முறைகள் உண்டு. அதன்படி கவனமாக ஜெபத்தோடு ஆராயும் போது நாம் நிச்சயமாகவே அதன் அர்த்தத்தைக் கண்டுகொள்ள முடியும்.

IV. எழுத்தின்படியான வியாக்கியானமும் ஒப்பு மாதிரிகளும்:

வேதத்தை எழுத்தின்படி வியாக்கியானப்படுத்தும் அதே நேரத்தில், வேதத்தில் கையாளப்பட்டிருக்கும் ஒப்புவமைகளையும் நாம் மறந்துவிடக்கூடாது. 'ஒப்பு மாதிரி' என்பது பழைய ஏற்பாட்டிலுள்ள ஒரு சம்பவமோ

நிகழ்ச்சியோ, பொருளோ புதிய ஏற்பாட்டில் வரப் போகும் ஒரு காரியத்திற்கு நிழலாட்டமாய் இருப்பதாகும் உதாரணமாக, பழைய ஏற்பாட்டிலுள்ள 'யோனாவின் மீன் அனுபவங்கள்', புதிய ஏற்பாட்டில் கிறிஸ்து கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டு உயிரோடு எழுந்திருப்பதற்கு ஒப்புமாதிரியாக (Type) அமைந்திருக்கிறது, (மத் 12 : 40) அது போலவே எண்ணாகமம் 21 ஆம் அதிகாரத்திலுள்ள வெண்கல சர்ப்பம், புதிய ஏற்பாட்டில் பாவிகளுக்காக மரிக்கும் இயேசுக் கிறிஸ்துவுக்கு ஒப்புமாதிரியாக அமைந்திருக்கிறது (யோவான் 3 : 14). பழைய ஏற்பாட்டிலுள்ள பலவிதமான பலிகளும் காணிக்கைகளும் எப்படி புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் சிலுவைக்கு ஒப்புமாதிரியாக அமைந்திருக்கின்றன என்று நிருபங்கள் நிரூபித்துக் காட்டுகின்றன.

பவுல் அப்போஸ்தலன் இஸ்ரவேலரைச் சுட்டிக் காட்டி நம்மை எச்சரிக்கிறார். "இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது. உலகத்தின் முடிவு காலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாகும்படி எழுதப்பட்டும் இருக்கிறது" (1 கொரி 10 : 11). திருஷ்டாந்தங்கள் என்று பவுல் அப்போஸ்தலன் எழுதுவது, 'ஒப்புவமைகளையும்', ஒப்புமாதிரிகளையுமே குறிக்கும். புதிய ஏற்பாட்டில் வெளியாகும் சத்தியத்திற்கு நிழலாக, பழைய ஏற்பாட்டில் எண்ணிலடங்காத ஒப்புமாதிரிகள் புதைந்து கிடக்கின்றன என்று அப்போஸ்தலர் பவுல் குறிப்பிடுகிறார்.

கற்றுத் தேர்ந்த எந்த வேதாகமப் போதகரும் பழைய ஏற்பாட்டில் வரும் "ஒப்புமாதிரிகளை" விட்டு விடுவதே இல்லை. அவைகளை பயன்படுத்தி புதிய ஏற்பாட்டில் வரும் ஆழமான சத்தியங்களை எளிதாக, விறுவிறுப்பாக கற்றுக் கொடுத்து விடுவார்கள். அதே நேரத்தில் சரித்திர பின்னணியை மறந்துவிடக்கூடாது. மட்டுமல்ல வெறும் ஒப்புமாதிரிகளின் மேல் புது உபதேசங்

களை உருவாக்கிவிடவுங்கூடாது. புதிய ஏற்பாட்டில் நிறுவப்பட்ட உபதேசங்களுக்காக ஒப்புமாதிரிகளை ஏற்றுக்கொள்ள வேண்டுமே ஒழிய, ஒப்புமாதிரிகளுக் காக உபதேசம் ஏற்படுத்துவதல்ல.

முடிவாக என் கருத்தை மீண்டும் மீண்டும் வலியுறுத் திச் சொல்கிறேன். வேதத்தின் ஒரு பகுதியிலுள்ள எழுத் தின்படியுள்ள அர்த்தம் எளிதானதும் புரிந்துகொள்ளக் கூடியதுமாக இருந்தால் அதை அப்படியே, எழுத்தின் படியே ஏற்றுக்கொள்ளுங்கள். இப்படி ஏற்றுக்கொள்வ தின் மூலம் எவ்வளவோ குழப்பங்களை நாம் தவிர்க்கலாம். அப்பொழுது வேத தீர்க்கத் தரிசனங்கள் நம்மை உணர்த்துகிறவைகளாகவும், நம்மை ஆறுதற்படுத்து கிறவைகளாகவும், இருக்கும். ஒவ்வொரு ஒப்புமாதிரி களும் அர்த்தம் நிறைந்தவைகளாகவும், உற்சாக மூட்டு கிறவைகளாகவும் இருக்கும். மீண்டும் ஞாபகப்படுத்து கிறேன். எழுத்தின்படியான அர்த்தம் புரிகிறதாயிருக்கு மானல் அனுவசியமாக அதைக் குழப்பாதபடி, இருக் கிறதை இருக்கிறதாகவே ஏற்றுக்கொள்.

அத்தியாயம் 4

சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்துப் போதித்தல்

"நீ வெட்கப்படாத ஊழியக்காரனும், சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிறதையாயிரு" (2 தீமோ 2: 15).

வேதத்தைக் கற்றுக்கொள்ள மேற்சொன்ன வசனத் தின் மூலம் அப்போஸ்தலர் பவுல் நம்மை ஊக்கப்படுத்து கிறார். ஒவ்வொரு விசுவாசியும் கர்த்தருடைய சித்தத்தை கவனத்தோடு அறிந்துகொள்வது மட்டுமல்ல; தேவ வசனத்தையும் கற்றுத்தேற வேண்டும். ஒரு திறமை மிக்க கலைஞன், தன் கை ஆயுதங்களால் தொழில் நுட்பங்களில் தேர்ச்சியும், திறமையும் அடை-வதில்லையா? சாதாரண ஒரு தொழிலாளிகூட தன் ஆயுதங்களை, கருவிகளை எப்படி

உபயோகப்படுத்துவது என்பதை அறிந்து வைத்திருப்ப தில்லையா ? அதே போல, ஒவ்வொரு வேத மாணுக்கனும், ஒவ்வொரு சூழ்நிலைக்கும் ஏற்ப, எப்படி வேத வசனங்களை உபயோகப்படுத்த வேண்டும் என்பதை அறிந்து வைத் திருக்க வேண்டும். வேத அடிப்படை சரித்திரங்களைப் பற்றிய சரியான அறிவு அவனுக்கு அவசியம். மட்டு மல்ல, தனக்கும், தன் இரட்சிப்புக்கும் தேவன் வகுத் தருளிய பல்வேறு படிகள் என்ன என்பதையும் அறிந்துக் கொள்ளும் திறமை வேண்டும். வேதாகமம் எழுதப்படு வதற்கு முன்பதாகவே கர்த்தர் எப்படி தன்னை மனிதருக்கு வெளிப்படுத்தினுர் என்றும், இயேசுக் கிறிஸ்து பூமியில் வருவதற்கு முன்பதாகவே, தேவன் எப்படி இரட்சிப்பின் கிரியையை வெளிப்படுத்தினுர் என்றும் வேத மாணவன் அறிந்துகொள்ள வேண்டும். மட்டுமல்ல, இன்றைக்கு விசுவாசிகளாகிய நாம் பழைய ஏற்பாட்டின் சில சட்ட திட்டங்களை ஏன் அனுசரிப்பதில்லை என்றும், மோசேயின் நியாயப் பிரமாணத்தின் கீழ் ஏன் வருவதில்லை என்பதை யும், அறிந்து வைத்திருக்க வேண்டும்.

இந்த அத்தியாயத்தில் தேவன் எப்படி ஏழுவித வித்தியாசமான காலங்களில், தம்மை வெளிப்படுத்திக் காண்பிக்கிருர் என்பதை அறிந்துகொள்வோம். அது வேத ஆராய்ச்சிக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

1. அறியாமையின் காலம் :

வேதத்தை நாம் திறந்தவுடன் முதலில் சிருஷ்டிப்பின் சரித்திரத்தை வாசிக்கிருேம் ; முதல் ஆதி பெற்ருேர், ஆதாம், ஏவாள்—அவர்கள் எப்படி தேவ சாயலில் உரு வாக்கப்பட்டார்கள், ஏதேன் தோட்டத்தில் எவ்விதம் வாழ்ந்தார்கள், கர்த்தரை அறிந்தார்கள், உறவாடினுர்கள், தங்கள் எண்ணம், சொல், செயல்களில் எப்படி பரிசுத்த மாய் இருந்தார்கள் என்பதைப் பற்றியெல்லாம் எழுதப் பட்டிருக்கிறது. பாவமற்று ஜீவித்த அவர்கள் வாழ்க்கை சோதிக்கப்பட வேண்டியது அவசியமாயிற்று. கர்த்தர் அவர்களிடம், இந்தத் தோட்டத்திலுள்ள எல்லா கனி

களையும் புசிக்கலாம்; ஆனால் தோட்டத்தின் நடுவிலுள்ள நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசிக்கக்கூடாது என்றுக் கட்டளையிட்டிருந்தார். மட்டு மல்ல சாத்தான் என்ற தேவனுடைய எதிரியும், விழுந்து போன தேவ தூதனுமானவனை, குற்றமற்ற இந்த ஆதி மனுஷரைச் சோதிக்க அனுமதித்தார். நமது முதல் பெற்றோர் சத்துருவின் வலையில் விழுந்து, விலக்கப்பட்ட கனியைப் புசித்தபடியால், கர்த்தரால் ஏதேன் தோட் டத்தை விட்டு துரத்தப்பட்டனர். சரீரப் பிரகாரமான சாவும், பூமிக்கு சாபமும் தீர்ப்பளிக்கப்பட்டது.

ஒரு வேளை அவர்கள் அந்த சோதனையில் ஜெயித் திருந்தால், அவர்கள் அறியாமையின் காலத்திலிருந்து, தொடர்ந்து பரிசுத்தத்தின் பூரண நிலையில் வாழ்ந்திருப் பார்கள். நன்மையானதை செய்வது எப்படி என்பதை நடைமுறையில் அறிந்து சரியான காரியங்களையே செய் திருந்திருப்பார்கள்.

ஆனால் பாவத்தைக் குறித்த அறிவு அவர்களுக்கு வந்தது. அவர்களுடைய சுபாவமே தீமையாய் மாறிற்று. தேவனுடைய பிரசன்னத்திலிருந்து அவர்கள் பிரிந் தார்கள். கர்த்தரை விட்டு பிரியும் பிரிவே ஆவிக்குரிய மரணம் என்று வேதம் சொல்கிறது. அவர்களின் கீழ்ப் படியாமையினிமித்தம், பூமியில் பிறக்கும் ஒவ்வொருக் குழந்தையும் பாவியாக, ஆவிக்குரிய ரீதியில் செத்ததாக, சரீர மரணமடைய நியமிக்கப்பட்டதாகப் பிறக்கிறது.

II. மனச்சாட்சியின் காலம்:

ஆதாம், ஏவாள் எப்பொழுது ஏதேன் தோட்டத்தை விட்டு வெளியே துரத்தப்பட்டார்களோ, உடனே மனச் சாட்சியின் காலம் ஆரம்பமானது. அவர்கள் சன்மார்க்க நெறியின்படி பொறுப்புள்ளவர்களானார்கள். அவர்களு டைய பாவத்திற்குப் பின் தேவன் அவர்களுக்குத் தோல் உடைகளை அணிவித்தது மட்டுமல்ல. இரத்த பலி செலுத் தும் விபரங்களையும் கற்றுக் கொடுத்தார். ஸ்திரியின்

வித்தானவர் (இயேசுக் கிறிஸ்து) எப்படி சத்துருவை அழிப்பார் என்பதையும் வாக்குத்தத்தமாகக் கொடுத்தார். ஆதாம் ஏவாளுக்கும், அவர்களுடைய பின் சந்ததியாருக்கும் இந்த வாக்குத்தத்தம் உரிமையாக கிடைத்தது. எனவே கர்த்தர், ஒரு மீட்பரை தங்கள் வம்சத்திலே தோன்றச் செய்வார் என்பதற்கு முன்னடையாளமாக பாவ மன்னிப்பிற்காகப் பலிகளைச் செலுத்தி வந்தார்கள். கர்த்தர் வெளிப்படையான, அதிகமான அடையாளங்களையும் வெளிப்பாடுகளையும் தராமல் இருந்தாலும்கூட, மனச்சாட்சியின் மூலமாகவும், இயற்கையின் மூலமாகவும் தன் சித்தத்தை வெளிப்படுத்தி வந்தார். ஆனால் கூடிய சீக்கிரமே, மனச்சாட்சியின் குரலோ, சத்தியத்தைப் பற்றிய அறிவோ அவர்களை ஆவிக்குரிய சமாதானத்திற்குள்ளோ, வெற்றிக்குள்ளோ நடத்த முடியாது என்பதை அறிந்து கொண்டார். அவர்கள் ஜீவியம் பாவத்தால் வெகு சீக்கிரத்தில் சரிந்தது. அவர்கள் அக்கிரமம் அவ்வளவு அதிகமாய் இருந்தபடியால், கர்த்தர் நோவாவையும் அவன் குடும்பத்தாரையும் தவிர, மற்றெல்லாரையும் ஜலப்பிரளயத்தால் அழித்துப் போட்டார்.

III. மனித அரசாட்சியின் காலம் :

மூன்ருவது காலமான மனித அரசாட்சியின் காலம், ஜலப்பிரளயத்திற்குப்பின் உடனே ஆரம்பமானது. இரத்த சம்பந்தமான பலிகளைப் பற்றியும், வரப்போகும் மேசியாவைப் பற்றியும், சன்மார்க்க நெறிபடி நடக்க வேண்டிய பொறுப்புகளைப் பற்றியும் தேவன் நோவாவுக்கும், அவன் பின் சந்ததியாருக்கும் தெரியப்படுத்திஞர். ஆதியாகமம் 9 ஆம் அதிகாரத்தை வாசிக்கும் போது தேவன் கொடுத்தப் புதிய சட்ட திட்டங்களை அறிந்து கொள்கிருேம். அக்கிரமக்காரரைத் தண்டிக்க அரசாங்கங்களை ஏற்படுத்தும்படி அதிகாரம் கொடுத்தார். மிருக, ஜீவஜந்துக்களை உட்கொள்ளலாம் என்றும், ஆனல் இரத்தத்தைப் புசிக்கக் கூடாதென்றும் சொன்ஞர், மட்டுமல்ல காலங்கள் மாறி மாறி ஒழுங்கும் கிரமமுமாய்

வரும் என்றும், தான் இனி ஒரு போதும் ஜலத்தினுல் உலகத்தை அழிப்பதில்லை என்றும் வாக்குத்தத்தஞ் செய்தார்.

மனித அரசாட்சியின் காலமும்கூட, அதன் முந்திய காலத்தைப் போலவே அக்கிரமம் நிறைந்ததாய்க் காணப் பட்டது. கலகம் செய்வதிலும், அடிமைத்தனத்திற்குள் அடக்கி வைப்பதிலும் மனித அக்கிரமம் தலை விரித்தாடி னது. சத்தியமுள்ள தேவனுக்கு விரோதமாய் கலகம் செய்து, பாபிலோனின் பெரிய கோபுரத்தைக் கட்ட லானுர்கள் (ஆதி 11 : 1-9). மட்டுமல்ல, நிம்ரோத் என் னும் பேர் கொண்ட தலைவனைப் போலுள்ளவர்கள் பெரிய சாம்ராஜ்யங்களை உருவாக்கி மனிதனை அடிமைகளாக்கும் வழிகளை அமைத்தனர். பாவமுள்ள மனிதனுக்கு மகத் துவமும் வல்லமையும் கொடுப்பதினுல் வரும் கேடுபாடு களை கர்த்தர் அறிந்தார். தேவனிடத்திலிருந்து புதிய கட்டளைகள் வந்தாலொழிய, இரட்சிப்பு சாத்தியமற்ற தாகிவிட்டது. உயர்ந்த நாகரீகங்கள், எகிப்து, கல்தேயர், ஆரன் என்ற தேசங்களில் தோன்றிற்று ஆரம்பத்தில் தேவனைப் பற்றிய விசேஷ கொள்கைகள் அந்த நாக ரீகத்தில் இருந்தாலுங்கூட நாள் செல்லச் செல்ல, அவை யாவும் முழு விக்ரக ஆராதனைக்குள்ளும், ஈவு இரக்கமற்ற அடிமைத்தனத்திற்குள்ளுமாகவே மக்களை வழி நடத்தி சென்று விட்டன. எனவே கர்த்தர் ஒரு புதிய வெளிப் பாட்டையும், கட்டளைகளையும் மக்களுக்குத் தரவேண் டியதாயிற்று.

IV. வாக்குத்தத்தத்தின் காலம் :

ஆபிரகாமின் மூலம் (ஆதி 12 அதி) கர்த்தர் ஒரு புதிய திட்டத்தை ஆரம்பித்தார். முன்பெல்லாம் கர்த்தர் எல்லா ஜனங்களுக்கும் பொதுவாகவே தன்னை வெளிப்படுத்திக் கொண்டு வந்தார். ஆனுல் இப் பொழுதோ, கர்த்தர் தனிப்பட்ட முறையில் ஒரு மனுஷ னுக்கு தன் அன்பையும் வாக்குத்தத்தங்களையும் தர

தீர்மானித்தார். ஆகவே இந்த காலம் வாக்குத்தத்தத்தின் காலம் என்று அழைக்கப்படுகிறது. ஆபிரகாமுக்கு தனிப்பட்ட கட்டளைகளையும், உறுதி மொழிகளையும் கொடுத்திருந்தாலுங்கூட மற்றெல்லா தேசங்களும் தொடர்ந்து மனச்சாட்சியின்படியும், மனித அரசாங்கங்களின் மூலமாகவுமே இயங்கி வந்தது. உலகத்திலுள்ள எல்லா மக்களுக்கும் தன் சத்தியத்தையும் வெளிச்சத்தையும் வீசச் செய்வதற்காக ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபைத் தெரிந்து கொண்டு அழைத்தார்.

மிக நீண்ட காலங்கள்வரைக் கடந்து செல்லக்கூடிய வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளைக் கர்த்தர் ஆபிரகாமோடுகூட செய்தார். உன்னுடைய சந்ததி திரளாய் பெருகும்; உன் சந்ததியாருக்குக் கானானை நித்திய சுதந்திரமாகக் கொடுப்பேன். உன் வித்தின் மூலம் (கிறிஸ்து) சகல தேசங்களும் ஆசீர்வதிக்கப்படும் என்றார் (ஆதி 12 : 1–3, 17 : 7, 8, 22 : 18). கர்த்தர் உரைத்தபடியே அடுத்த 400 ஆண்டுகளில், ஆபிரகாம் ஈசாக்கு, யாக்கோபின் சந்ததி, பெரிய திரள் கூட்டமான ஜாதியானது. கர்த்தருடைய மாபெரும் அற்புதங்களினாலே எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்பட்டார்கள். எனினும் அவர்கள் அவிசுவாசத்தின் மூலம் வனாந்திரத்தில் 40 ஆண்டுகள் சுற்றி நடக்க வேண்டியதாயிற்று.

வாக்குத்தத்தத்தின் காலத்தைப் பற்றிய உறுதி மொழிகளும், அழைப்புகளும் உன்னதமானதும் மேன்மையானதுமாய் இருந்தும்கூட, இந்த காலம் மனிதனுடைய கொடூரமான பாவங்களுக்கும், பிரச்சனைகளுக்கும் நிவாரணம் செய்ய முடியவில்லை. தேவனுடைய பெரிய அன்பையும், காருண்யத்தையும் பெற்றிருந்தும்கூட, மனிதனால் தேவ சித்தத்தை செய்ய முடியவில்லை. ஆனபடியினாலே அடுத்த காலமாக நியாயப் பிரமாணம் வந்தது.

V. நியாயப் பிரமாணத்தின் காலம் :

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தை விட்டு புறப்பட்டு கானானை நோக்கி பயணம் செய்யும் நேரமது! சீனாய் மலையில் தேவன் அவர்களுக்கு நியாயப் பிரமாணத்தைக் கொடுத்தபோது, சீனாய் மலை முழுவதும் புகைக் காடாய் இருந்தது மலை மிகவும் அதிர்ந்தது. எக்காள சத்தம் மிகவும் பலமாய்த் தொனித்தது. அவ்வளவு கெம்பீரமாக நியாயப்பிரமாண காலம் ஆரம்பித்தது. (யாத் 19 : 16-19). இந்தப் புதிய காலம் ஏறக்குறைய 1500 வருட காலம் நீடித்தது. இயேசுக்கிறிஸ்து சிலுவையில் மரணமடைந்த போது முடிவுற்றது. முடிவுறும் நேரத்திலும் மகத்துவமான அதிசயங்களோடுதான் முடிவுற்றது. பூமி அதிர்ந்தது. கன்மலைகள் திறவுண்டன, தேவாலயத்தின் திரைச்சீலை மேலிருந்து கீழாக இரண்டாகக் கிழிந்தது (மத் 27 : 50-56).

இஸ்ரவேல் ஜனங்களுக்கு நியாயப் பிரமாணம் இருந்த இதேக் காலத்தில் புறஜாதியார் இன்னும் மனச்சாட்சியின் காலத்திலும், மனுஷ அரசாட்சியின் காலத்திலுமே தொடர்ந்து இருந்து கொண்டிருந்தார்கள். ஆனால் இஸ்ரவேலரோ மத, சமுதாய, ஆட்சி சட்ட முறைகளின் கீழ் நியாயப் பிரமாணத்திற்குட்பட்டிருந்தார்கள். நியாயப் பிரமாண சட்ட திட்டங்களுக்குக் கீழ்ப்படிந்த விசுவாசத்தின் மூலமே இஸ்ரவேலருக்கு இரட்சிப்புக் கிடைத்தது. தேவனுடைய பரிசுத்தத்திற்குள் வளரும்படியாக நுணுக்கமான சட்ட திட்டங்களும், கீழ்ப்படியாதவர்களுக்கு பயங்கர தண்டனைகளைப் பற்றியும் நியாயப் பிரமாணத்தில் கொடுக்கப்பட்டன. ஆனாலும் பாவமுள்ள மனிதனால் தேவனுடைய ஆழ்ந்த பாடங்களையும், நோக்கங்களையும் அறிந்துகொள்ள முடியவில்லை.

நியாயப் பிரமாண காலம் வந்து விட்டது என்பதற்காக, ஆபிரகாமுக்குக் கொடுத்த வாக்குத்தத்தங்களும் உறுதி மொழிகளும் கைவிடப்பட்டுவிடவில்லை. பவுல் அப்போஸ்தலன் எழுதுகிறார். "அப்படியானால், நியாயப் பிரமாணத்தின் நோக்கம் என்ன? வாக்குத்தத்தத்தைப்

பெற்ற சந்ததி வருமளவும் அது அக்கிரமங்களினிமித்த மாகக் கூட்டப்பட்டு, தேவ தூதரைக் கொண்டு மத்தி யஸ்தன் கையிலே கட்டளையிடப்பட்டது" (கலா 3 : 19).

பாவம் என்றால் என்ன என்பதின் முழு அறிவையும் மனிதன் அறிந்துகொள்ளவே நியாயப் பிரமாணம் கொடுக்கப்பட்டது. ரோமர் 3 : 20 சொல்கிறது, "இப்படி யிருக்க பாவத்தை அறிகிற அறிவு நியாயப் பிரமாணத் தினால் வருகிறபடியால், எந்த மனுஷனும் நியாயப் பிரமா ணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதி மானாக்கப்படுவதில்லை", சிந்தியுங்கள்! இஸ்ரவேலரால் தங்களைத் தாங்களே இரட்சித்துக்கொள்ள முடியவில்லை.

நியாயப் பிரமாணம் என்றால் என்ன? பவுல் அப் போஸ்தலன் சொல்லுகிறார் "நியாயப் பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழி நடத்துகிற உபாத்தியாயராய் (Teacher) இருந்தது. யாக்கோபு அதை ஒரு கண்ணாடிக்கு உருவகித்துச் சொல்கிறார் (யாக் 1 : 23-25) மனிதனுடைய அக்கிரமங்களை நியாயப் பிரமாணம் படம் பிடித்துக் காட்டி, பாவமன்னிப்பை பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியத்தை வலியுறுத்திச் சொல்கிறது. இரட்சிப்பு என்பது தேவனுடைய மன்னிக்கும் கிருபையிலிருந்தே வருகிறது அதைத் தாழ்மையோடும், விசுவாசத்தோடும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்துகிறது. மனுஷன் தன்னுடைய சொந்தக் கிரியைகளால் தன்னைத் தானே இரட்சித்துக்கொள்ள முடியாது என்பதை திட்ட மும் தெளிவுமாய் நிரூபித்துக் காட்டுகிறது.

நியாயப் பிரமாணத்தின் காலம், கிறிஸ்துவின் மரணத் தில் முடிவுற்றது. அது முற்றுப்பெறக் காரணம் என்ன வென்றால் பிரமாணத்தின் தன்மையால் யாராலும் அந்த சட்டத் திட்டங்களை முழுவதுமாக நிறைவேற்ற முடிய வில்லை; மட்டுமல்ல மனிதனின் பாவங்களுக்காக மிருக ஜீவன்களின் இரத்தம் சரியான நிவாரணியாகவில்லை. இதுவுமல்லாமல் நியாயப் பிரமாணத்திலுள்ள ஆவிக்குரிய

அர்த்தங்களை இஸ்ரவேலரில் பெரும்பான்மையோரால் கண்டு பிடிக்க முடியவில்லை. தங்களைத் தாங்களே இரட்சிக்க திராணியில்லாதவர்களாயிருந்த அவர்கள், தேவ கிருபையில் சார்ந்து கொள்ளுவதற்குப் பதிலாக, நியாயப் பிரமாணத்தின் கிரியைகளால் இரட்சிப்புக் கிடைக்கும் என்று நம்பியிருந்தார்கள்.

VI. கிருபையின் காலம் :

காலம் நிறைவேறின போது தேவன், 'இயேசுக் கிறிஸ்து' என்ற பெயரோடு பூமிக்கு வந்தார், நியாயப் பிரமாண சட்டத் திட்டங்களுக்கு பரிபூரணமாகக் கீழ்ப் படிந்து வாழ்ந்தார். முடிவில் தன்னைத்தானே அகில உலகத்தின் பாவங்களுக்காக பலி செலுத்தி விட்டார். நியாயப் பிரமாணத்திற்குப் பதிலாக வந்த கிருபையின் காலம் இயேசுக் கிறிஸ்து சிலுவையில் நிறைவேற்றி முடித்த கிரியையில் ஆரம்பித்தது.

இனி மேலும்கூட நீங்கள் மோசே கொடுத்த நியாயப் பிரமாணத்தின்கீழ் அடிமைகளாய் உழன்று, சடங்காச் சாரங்கள், ஆசரிப்புகளைச் செய்து இரட்சிப்புக்காக தவிக்க வேண்டியதில்லை, என்று கிருபையின் காலம் சகல மனுஷருக்கும் அறிவிக்கிறது.

உண்மை! தேவனுடைய சன்மார்க்க நெறிமாறிவிட வில்லை! கிறிஸ்துவைப் பின்பற்றும் விசுவாசி ஒழுங்கின்மை யாய், பாவத்தில் வாழ்வதில்லை! ஆனால் அவனுக்குள் வாசம் பண்ணும் ஆவியானவர் அவனை சகல சத்தியத் திற்குள்ளும் வழிநடத்துகிறார். தன்னுடைய சுயகிரியைகள் ஒரு போதும் இரட்சிப்பைக் கொண்டு வருவதில்லை என் பதை அவன் அறிவான். அவன் சத்தியத்தில் களிகூர் வான். "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல; இது தேவனுடைய ஈவு: ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல" (எபேசியர் 2 : 8, 9).

இயேசுக் கிறிஸ்துவின் மேல் விசுவாசமாய் இருக்கும் ஒவ்வொருவரையும் கொண்டு, கர்த்தர் இந்த கிருபையின் காலத்தில் தன் சபையைக் கட்டி எழுப்புகிறார். இயேசுக் கிறிஸ்துவின் வருகையின் போது மரித்த பரிசுத்தவான்கள் உயிரோடு எழுந்திருப்பார்கள்; உயிரோடிருக்கும் விசுவாசிகள் மறு ரூபமாவார்கள். அப்பொழுது கிருபையின் காலம் முடிவுபெறும்.

VII. ஆயிர வருட அரசாட்சியின் காலம்:

கர்த்தர் தன் கவனத்தை மறுபடியும் தான் தெரிந்து கொண்ட இஸ்ரவேல் ஜனங்களுக்கு நேராகத் திருப்புவார். மகா உபத்திரவத்தின் காலத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரண்டை திரும்புவார்கள். அப்பொழுது கர்த்தர் பாலஸ்தீன தேசத்தை மறுபடியும் நிலைப்படுத்துவார். (தானியேல் 12 : 1, மத் 24 : 21) இயேசுக் கிறிஸ்து தாமே எருசலேமிலிருந்து முழு பூமியையும் அரசாளுவார் (எரே 22 : 5, 6; ஏசாயா 32 : 1, லூக் 1 : 32) எல்லா நாடுகளும் செழுமையும், மகிழ்ச்சியும் சமாதானம் நிறைந்தது மாயிருக்கும் (ஏசாயா 2 : 2-4) இயற்கை முழுவதும் மரு ரூபமாக்கப்படும் (ஏசாயா 11 : 6-9 ; 35 : 1, 2).

இதற்குமுன் இருந்த ஒவ்வொரு காலத்தைப் போலவே, ஆயிர வருட அரசாட்சியிலும்கூட கிருபையினால் மட்டுமே இரட்சிப்பு கிடைக்கும். வெறும் வெளிப்படையான கீழ்ப்படிதல் மூலம்,ஆயிரவருட அரசாட்சியில் பிறக்கும் குழந்தைகள் இரட்சிக்கப்படுவதில்லை. அநேகர் தாங்கள் கிறிஸ்துவின் ஆட்சிக்குக் கீழ்ப்பட்டதைப் போல இருப்பார்கள், ஆனால் ஆயிர வருட அரசாட்சியின் முடிவிலே எழும்பி வரும் சாத்தானோடும், அவனுடைய தூதர்களோடும் கைகோர்த்து இணைந்துகொள்ளுவார்கள். இப்படிப்பட்ட கலகக்காரரை வானத்திலிருந்து விழும் அக்கினி பட்சிக்கும் சாத்தான் நித்திய அக்கினிக் கடலிலே தள்ளப்படுவான். இந்த உலகம் காணப்படாமற் போகும், பெரிய வெள்ளை சிங்காசனம் நிறுவப்படும் (வெளி 20 : 7-15) இந்த சமயத்தில் காலம் மறைந்து

போகும். நித்தியம் ஆரம்பிக்கும் ஜனங்கள், ஒன்று மோட்சத்தில் வாழவேண்டும், அல்லது நரகத்தில் பங்கடைவார்கள்.

இந்த அத்தியாயத்தில் சொல்லப்பட்ட பல்வேறு காலங்களைப் பற்றிய போதிய அறிவு இல்லாவிட்டால் ஒருவனால் வேத வாக்கியங்களை அறிந்துகொள்ள முடியாது. இஸ்ரவேலுக்கும், தேவ சபைக்குமுள்ள வேறுபாட்டை ஒருவன் தெரிந்துகொள்ள வேண்டும். இஸ்ரவேல் என்பது பூமியில் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டு, ஒரு இலக்கை நோக்கித் தொடருகிற உலக மக்கள் ஆனால் தேவ சபை என்பது பரலோக வாசிகள். இதை நீங்கள் அறிந்து கொண்டால், ஏன் நீங்கள் நியாயப் பிரமாணம், ஓய்வு நாள், மற்ற சடங்காச்சாரங்களுக்கு அடிமைப்பட்டவர்கள் அல்ல என்பதை உணர்ந்துகொள்வீர்கள். மட்டுமல்ல, கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களுக்குக் கொடுத்த வாக்குத்தத்தங்கள் என்ன, விசுவாசிகளுக்குக் கொடுத்த வாக்குத்தத்தங்கள் என்ன என்பதை வேறுபடுத்திக் கொள்வீர்கள். மட்டுமல்ல வேதம் எவ்வளவு இசை இணைப்பாய் இணைக்கப்பட்டிருக்கிறதென்றும் ஒவ்வொரு காலத்திலும் தேவன் குறிப்பிட்ட சட்ட திட்டங்களால் அரசாண்டார் என்றும் அதே நேரத்தில் கிருபையினால் இரட்சித்துக் கொண்டார் என்றும் அறியலாம். கர்த்தர் மாறாதவர். அவர் வகுத்த சட்ட திட்டங்கள் நிலைத்திருக்கின்றன. ஆனால் இரட்சிப்போ கிருபையினால் மட்டுமே.

அத்தியாயம் 5

சத்திய வேதத்தை சரியாக அனுபவமாக்கிக்கொள்!

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது கப்பற் படையில் பணியாற்றின வாலிபன் ஒருவன் இயேசுவை ஏற்றுக் கொண்டான். அந்த முகாமில் தங்கியிருந்தவர்களில் பலர் கிறிஸ்துவர்களாய் இருந்தபடியால் அவனுக்குப் போதிய வேத விளக்கங்களும், ஜெப ஐக்கியங்களும்

கிடைத்தன. ஆனால் திடீரென்று வேறு இடத்திற்கு அவன் மாறுதல் செய்யப்பட்டான். அங்கு அவனுக்கு அனுபவம் மிகுந்த கிறிஸ்தவர்கள் கிடைக்கவில்லை. எனவே தானாகவே வேதத்தைக் கற்றுக்கொள்ள தீர்மானித்தான். யாரோ ஒருவர் அவனுக்கு ஸ்கோபீல்ட் ஒத்துவாக்கிய வேதாகமத்தை பரிசளித்து, அதை எப்படி உபயோகிக்க வேண்டும் என்று சொல்லிக் கொடுத்தார்.

அந்த யுத்த நாட்களில்கூட, நேரம் கிடைத்த பொழுது ஒவ்வொரு நாளும் புதிய ஏற்பாட்டிலிருந்து ஒவ்வொரு அதிகாரம் வாசிக்கலானார். மூன்று முறை அதே அதிகாரத்தை வாசித்த பின்பு வேதத்தை மூடி விட்டு தான் வாசித்ததைத் தன் நினைவிலிருந்து ஒரு வெள்ளைத் தாளில் எழுதலானார். பின்பு வேதத்தை மீண்டும் திறந்து, எழுதப்பட்டவைகளை வேத வசனத்தோடு ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டார், அடுத்தபடியாக அந்த வேத வசனங்கள் தன்னுடைய சொந்த வாழ்க்கையிலே எந்த அளவுக்கு அனுபவமாக்கப்பட்டிருக்கிறது என்பதை எழுதினார். பின்பு தான் எழுதிய அந்தப் பேப்பர்களின் மேல் கைகளை வைத்து, ஆண்டவரே வேதாகம உண்மைகளை என் வாழ்க்கையில் கடைப்பிடிக்க உதவி செய்யும் என்று ஊக்கமாக ஜெபிக்கலானார். இன்றைக்கு அவர் வல்லமையான ஊழியக்காரராக கர்த்தருக்கென்று பிரகாசித்துக் கொண்டிருக்கிறார்.

எல்லோரும் அவருடைய வழிகளைத்தான் பின்பற்ற வேண்டும் என்று நான் சொல்லமாட்டேன். ஆனால் ஒவ்வொரு கிறிஸ்துவனும் வேதத்தின் அதிசயங்களை அறிந்துகொள்ளும்படியாக, அனுதின வாழ்க்கையில் அனுபவமாக்கும்படியாக கட்டாயமாக வேத வசனங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும். வேத வசனங்கள் நம் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டவை. அதின் செய்தி நமக்கு பாவமன்னிப்பின் நிச்சயத்தையும், பாவங்களறக் கழுவப்படுதலையும், சோதனைகளை மேற்கொள்ளும் தேவ

பெலனையும் கொண்டு வரும். எபிரேயர் புத்தகத்தின் ஆக்கியோன் எழுதுகிறார், "தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும், ஆவியையும், கணுக்களையும், ஊனையும், பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும், யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது" (எபி 4 : 12).

வேத வாக்கியங்களை நாம் சரியாய் கற்றுக்கொள்வோமானால், அது உள்ளத்தின் ஆழத்தில் மறைந்து கிடக்கும் குறைகளை வெளிப்படுத்துகிறது. நமக்கு அறியாமலே உன் மனதில் புதைந்துகிடக்கும் நோக்கங்களை தெரியப்படுத்துகிறது. வேத வசனங்கள் நம்மைக் கர்த்தருக்கு நேராக, வழி நடத்துவது மட்டுமல்ல நம்முடைய ஒவ்வொரு தேவையின் நேரங்களிலும் தேவ கிருபையுள்ள ஒத்தாசையை பெற்றுத் தருகிறது. தேவன் வைத்திருக்கும் சுகமளிக்கும் பிசின் தைலத்தை எப்படி நாம் பயன்படுத்துவது என்றும் அறிவிக்கிறது. வேதத்தை நாம் எவ்வாறு கற்றுக்கொள்வது என்பதை முதலாவது அறிந்துக்கொள்ளுவோம். கடந்த அத்தியாயத்தில் நான் எழுதியபடி ஒவ்வொருவரும் விசுவாசிக்கிற உள்ளத்தோடு வேத வசனங்களை அணுகுவோம். பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்துதலுக்காக தாழ்மையோடு ஜெபிப்போம். வேத வசனத்தின் ஆலோசனைகளுக்கும் கட்டளைகளுக்கும் கீழ்ப்படிவோம். முடிந்தவரையில் எழுத்தின்படியான வியாக்கியானத்தையே ஏற்றுக்கொள்வோம். பல்வேறுபட்ட காலங்களுக்குரிய வித்தியாசத்தை அறிந்துகொள்ளுவோம். இந்த புதிய அத்தியாயத்தில் வேத வசனங்களை எப்படி செயல்படுத்துவது என்பதைப் பற்றிய இரண்டு விதி முறைகளை ஆராய்வோம். அவை முக்கோண அணுகு முறை விதி மற்றது கிறிஸ்து மையக் கொள்கை என்பனவாகும்.

I. முக்கோண அணுகு முறை :

உங்கள் உள்ளத்திற்கு அறிவும், ஆத்துமாவிற்கு

ஆகாரமும் கிடைக்க வேண்டுமென்றல் இந்த முக்கோண அணுகு முறையை கவனத்தோடுக் கற்றுக் கொள்வோமாக.

1. ஒவ்வொரு வேத வாக்கியத்திற்கும் ஒரே ஒரு முக்கியமான வியாக்கியானமுண்டு.
2. ஒவ்வொரு வேதவாக்கியத்திற்கும் பலவேறுபட்ட செயல்முறை வழிகள் உண்டு.
3. இதைத்தவிர பல வேதவாக்கியங்களுக்கு, தீர்க்கத்தரிசன வெளிப்பாடும் உண்டு.

ஒரு வேத பகுதியை எடுத்தவுடன் அதில் சொல்லப்பட்ட வெளிப்படையான முக்கிய வியாக்கியானம் என்ன என்பதைக் கண்டுபிடி. அதோடு நின்றுவிடாமல் அந்த வேத சத்தியங்களை எப்படி உன் வாழ்க்கையில் கடைப்பிடிக்கிறுய் என்பதைச் சிந்தித்துப்பார். வேத வசனங்களை வாழ்க்கையின் நடைமுறைக்குக் கொண்டுவராவிட்டால், நீ ஆவிக்குரிய ஜீவியத்தில் குளிர்ந்துபோய்விடுவாய், உன்ஞல் மற்றவர்களுக்கு ஆவிக்குரிய ஆலோசனைகளைக் கொடுக்க முடியாது. ஒரு வேளை உனக்கு மூளை அறிவு பெருகலாம். ஆஞல் ஆவிக்குரிய ஜீவியத்தில் வெறுமையாய் காணப்படுவாய். தேவப்பிள்ளையே இந்த ஆலோசனைக்கு நீ செவி சாய்ப்பாயாக! இல்லாவிட்டால் எடுத்ததற்கும், சிறுசிறு காரியங்களுக்கும் கூட நீ தர்க்கம் செய்கிறவனுய், சண்டையிடுகிறவனுய் காணப்படுவாய். உன் வாழ்க்கையினுல் கிறிஸ்துவின் நாமத்திற்குத்தான் அவமானம்!

ஒவ்வொரு உத்தம வேத வியாக்கியானியும் வேதத்திலுள்ள பகுதியின் வெளிப்பிரகாரமான அர்த்தத்தை, முக்கிய வியாக்கியானத்தை உதறிவிட்டு எதற்கெடுக்தாலும் சன்மார்க்க வியாக்கியானம்; ஆவிக்குரிய விளக்கம் என்று போய்விடக்கூடாது. அநேக முறை இது ஆபத்தில் வந்து முடியும்; வேதத்தை சரியாக உன்ஞல் புரிந்து கொள்ளமுடியாமற் போய்விடுவது மட்டுமல்ல, நீ கற்பனை உலகத்தில் சிறகடித்துப் பறக்கும் கிறிஸ்தவ

ஞகிவிடுவாய், எனவே முதலாவது வேதபகுதி என்ன சொல்கிறதோ அதன் வெளிப்படையான அர்த்தத்தை முதலில் தெரிந்து கொண்டு, பின்பு அதன் உவமைகள் குறியீடுகளை அறிந்து, பின்பு உன் வாழ்க்கைக்கு அது எப்படி பயன்படும் என்பதைக் கண்டுபிடி.

முக்கோண அணுகு முறையின் மூன்ருவது பகுதி வேத வாக்கியங்களுக்கு தீர்க்கதரிசன வெளிப்பாடுகளைக் கண்டுபிடிப்பதாகும். இதன் அர்த்தம் என்னவென்ருல், அநேக வேத பகுதிகளில், வெளிப்படையான அர்த்தமும், செயல்முறை வழிகளும் இருப்பது மட்டுமல்லாமல், வருங் காலத்தைக் குறித்த ஒரு சம்பவத்தையோ அல்லது தனிப் பட்ட நபரையோ பற்றிய தீர்க்கத்தரிசனமும் அமைந் திருக்கலாம். தீர்க்கத்தரிசன அர்த்தமும், வெளிப்பாடும் மிகவும் அவசியம்தான். ஆனல் அது ஒருபோதும் வெளிப் படை விளக்கத்திற்கு மாறுபட்டதாகவோ அல்லது புறக் கணிப்பதாகவோ இருக்கக்கூடாது.

இந்த முக்கோண அணுகு முறைக்கு என் தகப்பனர் யாத்திராகமம் 3 ஆம் அதிகாரத்திலுள்ள எரியும் முட் செடியை உதாரணமாகக் காண்பித்தார். அந்த பகுதியை வாசிக்கும்போதே அதனுடைய வெளிப்படையான அர்த் தத்தை உணறுகிறோம் – இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தின் அடிமைத்தனத்தில் எவ்வளவாய்ப் பாடுபட்டார்கள் என் பதைக் காட்டுகிறது. இரண்டாவதாக நம் வாழ்க்கையில் செயல்படுத்துவதற்காக, அதிலிருந்து பாடத்தைக் கற்றுக் கொள்கிறோம். கர்த்தருடைய ஜனங்கள் ஒவ்வொரு காலத் திலும் பாடுகளின் பாதை வழியாகச் செல்லத்தான் வேண் டியதிருக்கிறது; ஆனல் அந்தப் பாடுகள் ஒருபோதும் அவர்களை அழித்துவிடுவதில்லை. மூன்ருவதாக அதிலிருந்து அறியும் தீர்க்கத்தரிசன பகுதியும் உண்டு. முட்செடியில் அக்கினி எரிந்தும் அது அழியாததுபோல, இஸ்ரவேல் ஜனங்களும் பல தேசத்தினரின் கைகளால் பல உபத்திர வங்களை அடைவார்கள். ஆனல் முடிவில் அவர்கள் மீட்

கப்பட்டு மறுபடியும் தங்கள் தேசத்தில் நாட்டப்படுவார்கள்.

ஒரு வேத பகுதியை மூன்று விதங்களில் எப்படி அறிந்து கொள்ள வேண்டும் என்று விளக்கிக் காண்பித்தோம். இதுவே முக்கோண அணுகுமுறை. நீங்கள் இதை கைப்பிடித்து வேதத்தைத் தியானிப்பீர்களானால் நிச்சயமாகவே வேதாகமத்தில் வருகிற ஆயிரக்கணக்கான பகுதிகளின் விளக்கங்களை நீங்களே அறிந்து கொள்வீர்கள். இதனால் மிகவும் ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.

II. கிறிஸ்து மையக் கொள்கை:

வேதத்தை சிறப்பாக அறிந்துகொள்ள இன்னும் ஒரு வழி உண்டு. அது கிறிஸ்து - மையக் கொள்கை மூலம் ஆராய்வதாகும். இதன்படி எல்லா வேத வாக்கியங்களுக்கும் மையம் இயேசுக் கிறிஸ்து என்று ஏற்றுக்கொள்வதாகும்.

கிறிஸ்துவை மையமாகக் கொண்டிராத அநேக வேத பகுதிகள் உண்டே என்று நீங்கள் கேட்கலாம்; வேதத்திலுள்ள சிருஷ்டிப்பின் சம்பவங்கள், கர்த்தருடைய மீட்பின் கிரியைகள், இவைகளெல்லாம் மிகவும் ஆறுதலான சத்தியங்களை நமக்குத் தருகிறது. ஆலோசனைகள் எச்சரிப்புகள் இருக்கின்றன. இன்னும் நிறைவேற வேண்டிய தீர்க்கத்தரிசனங்களும் இருக்கின்றன! ஆனால் முழுவேதாகமத்தின் இருதயத்துடிப்பு-மையம்-மூலம் எல்லாம் இயேசுக் கிருஸ்துதான் என்பதை மறந்து போகக் கூடாது.

யோவான் சுவிசேஷம் 1 : 3–10, கொலோ 1 : 16 வசனங்களை வாசித்து பாருங்கள். ஆவிக்குரிய, பூமிக்குரிய காரியங்கள் எல்லாமே கிறிஸ்துவாலேயே சிருஷ்டிக்கப்பட்டன. எல்லா சிருஷ்டிப்புகளின் நோக்கமும் முடிவும் கிறிஸ்துவே (கொலோ 1 :16). மட்டுமல்ல, அவர் தம்முடைய வசனத்தின் வல்லமையால் சகலத்தையும் தாங்குகிறார் (கொலோ 1 : 17, எபி 1 : 3). கிறிஸ்துவை

வேதம் மையமாக கொண்டிருக்கிறது என்பதை குறித்து இயேசுக்கிறிஸ்து, "என்னைக் குறித்து சாட்சி கொடுப்பது அவைகளே" என்று சொன்னார். (யோவான் 5:39) தாம் உயிரோடு எழுந்தபின், எம்மாவுக்குச் சென்ற சீஷர்களிடம், மோசே முதலிய சகல தீர்க்கத்தரிசிகளும் எழுதின வேத வாக்கியங்கள் எல்லாவற்றிலும் தம்மைக் குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார் (லூக்கா 24 : 27). ஸ்திரியின் வித்தானவர் இயேசுக்கிறிஸ்து ஏதேன் தோட்டத்தில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவர் இயேசுக் கிறிஸ்து. ஆபிரகாமின் சந்ததியில் முழுஉலகமும் ஆசீர்வதிக்கப்பட காரணமானவர். மோசே, யோசேப்பு என்ற தேவ மனுஷர்களின் பாடுகளின் நிழலாட்டமானவர், ஆசரிப்புக் கூடாரத்திலுள்ள பிரதான ஆசாரியருக்கும், பலிகளுக்கும், ஆசரிப்பு முறைகளுக்கும் முன் அடையாளமானவர். சேனைகளின் அதிபதியாய் யோசுவாவுக்கும் காட்சியளித்தவர் (யோசுவா 5 : 15). யோபு பக்தன் தேவை என்று ஏங்கின மத்திய ஸ்தர் அவரே (யோபு 9 : 33).

இவை மட்டுமல்ல; பழைய ஏற்பாட்டில் வரும் அநேக சம்பவங்கள், சரித்திரங்கள் இயேசுக் கிறிஸ்துவுக்கு நிழலாட்டமாய் இருந்ததை வாசித்து, அறிந்து மகிழ்கிறோம். 2 சாமுவேல் 9 ஆம் அதிகாரத்தில் தாவீதுராஜா, யோனத்தான் மேல் வைத்த அன்பினால் அவனுடைய மகன் மேவிபோசேத்துக்கு அனுக்கிரகம் செய்வதை வாசிக்கிறோம். இது தேவனாகிய கர்த்தர், இயேசுக் கிறிஸ்துவின் நிமித்தம் நமக்குக் கொடுக்கும் கிருபையின் இரட்சிப்புக்கு முன் அடையாளமாக இருக்கிறது. ராஜாக்களின் நாட்களிலே நீதியான சட்டதிட்டங்கள் உண்டு. அதின்படி தாவீது ராஜாவானபோது சவுலின் முழுக்குடும்பத்தையும் பழி வாங்கிக் கொன்று குவித்திருக்க வேண்டும். ஆனால் தாவீதோ இரக்கத்தைக் காண்பித்தார். இதுபோலவே நாமும் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்

தோம். ஆனால் தேவனாகிய கர்த்தர் இயேசுக்கிறிஸ்துவின் மூலம் நமக்கு இரக்கத்தைக் காண்பித்தார்.

இன்னும் யோனத்தானின் மகன் சிறுவனாயிருந்த போது அவனை தாதி ஒருவள் தூக்கிக் கொண்டு ஓடினாள். அவள் கால் தடுமாறி குழந்தையைக் கீழே போட்டபடியால், சிறுவனின் கால்கள் முடமாகிப்போனது. இது போலவே ஆதாமின் பாவத்தால் விழுந்துவிட்ட மனுக்குலமும் உதவியற்ற நிலையில், நம்பிக்கையற்ற நிலையில் முடமானது. அப்படிப்பட்ட மேவிபோசேத்தைத் தாவீது தேடிவந்தது, இயேசுக்கிறிஸ்து பாவிகளை இரட்சிக்க பூமிக்கு வந்ததற்கு அடையாளமாய் இருக்கிறது.

இதையே வேதம் முழுவதிலும் பல சம்பவங்களில் பல கோணங்களில் வாசிக்கிறோம். கிறிஸ்து மையமாய் இருக்கிற ஏராளமான பகுதிகளையும் சம்பவங்களையும் கண்டு நீங்கள் பூரித்துப் போவீர்கள். முன்னால் சாதாரண சரித்திரமாய் தோன்றிய அவைகள் இப்பொழுது கிறிஸ்துவின் மையமாக இருப்பதைக் கண்டு ஆச்சரியப்படுவீர்கள்!

சாத்தானின் முழு வெறுப்பும் இயேசுக் கிறிஸ்துவின் மேலேயே இருக்கிறது. அவரைக் குறியாக வைத்தே, தனது எல்லா தீமையான செயல்களையும் அவரை நோக்கி ஏவிக் கொண்டிருக்கிறான். எப்பொழுது கர்த்தர், ஸ்திரியின் வித்தானவர் சாத்தானின் தலையை நசுக்குவார் என்று வாக்குத்தத்தம் கொடுத்தாரோ (ஆதி 3 : 15) அந்த நேரமுதல் சாத்தானின் சகல சதித் திட்டங்களும் கிறிஸ்துவின் மேலேயே இருந்தன.

தேவன் வைத்திருந்த மீட்பின் திட்டத்தை எவ்வளவுக்கெவ்வளவு சீர்குலைக்க முடியுமோ, அவ்வளவாக அவன் திட்டமிட்டு செயலாற்ற ஆரம்பித்தான். மனிதர்களையும் அவர்கள் செயல்களையும் பொல்லாததாக்கினான். அதன் மூலம் தேவ கோபம் எழும்பி முழு மனுக்குலத்தையும் கர்த்தர் அழித்து விடுவார் என்று எதிர்பார்த்தான்.

ஆனால் கர்த்தர் நோவாவையும், அவன் குடும்பத்தாரை யும் அழிவினின்று பாதுகாத்தார். பின்பு அந்த சந்ததியி லிருந்து ஆபிரகாமை அழைத்தார். பின்பு சாத்தான் ஆபிரகாமின் வித்தை அழிக்க முயன்றான். கர்த்தர் இஸ்ரவேலில் எந்த வம்சத்தில் பிறப்பார் என்பதை அறிந்தானே அந்தந்தக் குடும்பங்களை எதிர்த்து நின்றான்.

இயேசுக் கிறிஸ்து பிறந்த போது சாத்தான் ஏரோதின் மனதை ஏவி இரண்டு வயதிற்குட்பட்ட எல்லா ஆண் குழந்தைகளையும் கொலைச் செய்யும்படி கட்டளையிட் டான். சாத்தான் இயேசுவை சோதித்த சோதனைகள் எல்லாம் தோல்வியானது; இயேசுவைப் பாவத்திற்குட் படுத்த அவனால் முடியவில்லை. இயேசு சிலுவைக்குப் போவதைத் தடுக்க என்னன்ன வழிகள் உண்டோ அத்தனையையும் அவன் செய்து பார்த்தான். ஆனால் சிலுவையை நோக்கி நடந்த கிறிஸ்துவை யாராலும் தடுத்து நிறுத்த முடியவில்லை. இவைகளையெல்லாம் தியா னித்து வாசிக்கும் போது முழு வேதத்திலும் இயேசு எவ் விதம் மையமாய் இருக்கிறார் என்று அறிந்து நமது வேத பாடத்தில் சுவை ஏற்றிக்கொள்ளலாம்.

'கிறிஸ்து மையக் கொள்கை' என்பது வேத ஆராய்ச் சியில் மிகவும் முக்கியமானதாக இருக்கிறபடியால், என் தகப்பனார் எழுதிய ஒரு செய்தியின் பகுதியைக் கீழே தருகிறேன்: "எவ்வளவு வறண்ட சுவையற்ற வேதப் பகுதியிலும், பொதுவாக வேண்டாம் என்று ஒதுக்கி விடுகிற வம்ச வரலாற்றிலுங்கூட இயேசுக் கிறிஸ்துவே மையப் பொருளாக இருப்பதை அறியலாம். கடினமான, வாசிக்க விரும்பாத சில பெயர்களில்கூட முற்றிலும் அழகுள்ள கிறிஸ்துவின் பிம்பம் சற்றே தோன்றுவதை அறியலாம். ஆதியாகமத்திலிருந்து வெளிப்படுத்துதல் வரை இயேசுக் கிறிஸ்துவை தேவக்குமாரனாக ஆவியான வர் படம் பிடித்துக் காண்பிக்கிறார். நம்முடைய தேவன் முற்றிலும் அழகுள்ளவர் பூரணமானவர் அவரது எல்லா குணாதிசயங்களையும், செய்த வல்லமையான கிரியை

களையும் தேவ அன்பின் நிறைவுகளையுடைய, எந்த ஒரு சாதாரண மனுஷனாலும் எந்த பாஷையாலும் விவரிக்கவே முடியாது.

இயேசுக்கிறிஸ்துவின் தெய்வீக அன்பை வெளிப் படுத்த கர்த்தர் ஏராளமான உவமைகளையும், மாதிரிகளை யும் குறியீடுகளையும் நமக்கு கொடுத்திருக்கிறார். நூற்றுக் கணக்கான பெயர்களில் இயேசுவை அழைக்கிறோம். இவைகளெல்லாம் பல ஜன்னல்களாயிருந்து மனிதனின் குறைந்த அறிவுக்குள்ளிருந்துக் கொண்டே நித்தியத்திற் கடுத்தக் காரியங்களுக்கு வழி நடத்துகின்றன.

இயேசுக் கிறிஸ்துவை பரிசுத்த ஆவியானவர் பல பெயர்களில் அழைக்கிறார். இரண்டாம் ஆதாம், தேவக் குமாரன், மனுஷ குமாரன். பிதாவின் ஒரே குமாரன். மரித்தோருக்குள் முதற் பலனானவர். ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா, இரட்சிப்பின் அதிபதி, சபையின் தலை இஸ்ரவேலின் மேசியா. யூதருக்கு ராஜா அவருடைய நாமத்தைக் குறித்து ஏசாயா தீர்க்கத்தரிசி, அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனை கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதான பிரபு என்று குறிப்பிடு கிறார். இன்னும் ஆழமான கருத்துப் பொதிந்த பெயர் களால், தேவ ஆட்டுக்குட்டி என்றும், யூதாவின் ராஜ சிங்கம் என்றும் அழைக்கப்படுகிறார். கட்டிட கலை நிபுணர்களுக்கு அவர் சிறந்த பூரணமான ஆசரிப்புக் கூடாரம், தேவனுடைய பலிபீடம், கையினால் கட்டப் படாத வாசஸ்தலம். பொறியியல் வல்லுனருக்கோ அவர் சிறந்த மூலைக்கல்; நித்திய கன்மலை ஆவார். வான சாஸ் திரத்தில் அவர் நீதியின் சூரியன், பிரகாசமான விடி வெள்ளி நட்சத்திரம். அவரே தீர்க்கத்தரிசி, ஆசாரியன், ராஜா. கர்த்தருடைய தூதன், ஜீவ அப்பம், வாசல், ஜீவத் தண்ணீர், தேவனுடைய வார்த்தையாளர், நல்ல, பெரிய பிரதான மேய்ப்பர். நாம் எங்கே நிறுத்துவது? அவரே அல்பாவும் ஒமேகாவுமாய் முதலும் கடைசியுமாய், ஆதியும் அந்தமுமாய் இருக்கிறார். முடிவாகச் சொல்லப் போனால் அவரே முற்றிலும் அழகுள்ளவர்.

வேதத்திலுள்ள ஒவ்வொரு புத்தகமும் மறைமுகமாகவோ, நேரடியாகவோ கிறிஸ்துவையே நோக்கிக்கொண்டிருப்பதை அறிந்து கொள்வீர்கள் என்று நம்புகிறேன். இந்த சத்தியத்தை நீங்கள் ஏற்றுக்கொள்ளும் பொழுது உங்கள் முழு வாழ்க்கையுங்கூட கிறிஸ்துவை மையமாகக் கொண்டே இருக்கும். நாள் முழுவதும் இயேசுக் கிறிஸ்துவை நீங்கள் தரிசிக்கலாம். உங்கள் வேலையில், விளையாட்டில், ஆராதனையில், இளைப்பாறுதலில் இயேசுவை தரிசிப்பீர்கள்".

கிறிஸ்துவ நண்பனே, வேத புத்தகத்தை ஆர்வத்தோடு படிப்பாயாக. அது பழுதில்லாத உறுதியான தேவ வார்த்தை என்ற பயபக்தியோடு வாசிக்க ஆரம்பிப்பாயாக! தேவ மனுஷர் பக்தியோடு கொடுக்கும் விளக்கங்களுக்குச் செவி சாய்ப்பாயாக! முடிந்தவரை எழுத்தின்படியே ஏற்றுக்கொள். பலவித காலங்களை அறிந்து கொள். எச்சரிப்பின் சத்தங்களுக்குக் கீழ்ப்படி; வாக்குத்தத்தங்களை விசுவாசி. பரிசுத்தாவியானவர் உன்னை சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்த ஊக்கமாக ஜெபி. அப்பொழுது உன் ஆத்துமா ஆவிக்குரிய ஆகாரத்தினால் திருப்தியாகும். பாவத்தின்மேல் ஜெயம் பெறுவாய்; சமாதானமும் சந்தோஷமும் அடைவாய். கர்த்தருக்கு வல்லமையான சாட்சியாவாய். உன் வாழ்வை மலரச் செய்து, உனக்கு நம்பிக்கையூட்டியவரிடத்தில் அநேகரை வழி நடத்துவாய்.

ஒரு வேளை இன்னும் இயேசுக் கிறிஸ்துவை நீ ஏற்றுக்கொள்ளாமலிருந்தால், வேதம் உனக்கு மூடப்பட்ட, மறைக்கப்பட்ட புத்தகமாகவே இருக்கும். ஆகையால் அவர் மேல் விசுவாசம் வைத்து உன் சொந்த இரட்சகராய் ஏற்றுக்கொள். உன் பாவங்களுக்காக கிறிஸ்து மரித்தார் என்பதை உணர்ந்து பாவ அறிக்கை செய். இயேசுவே என் உள்ளத்தில் வாரும் என்று மன்றாடு, அவர் உன்னை இரட்சிக்க காத்துக் கொண்டே இருக்கிறார்.

———